உதயன்
விலை ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 13 வெள்ளிக்கிழமை (29.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 245



12
அரசியல் மாற்றத்துக்கு தமிழரின் ஆணை



21
அதிகாரப் பகிர்வு தமிழின விடிவுக்கான ஒளிக்கீற்று



25
இங்குள்ள வீரர்கள் எங்களுடன் விளையாடுவர்

# யாழ். மாவட்ட எம்.பிக்கள் எண்ணிக்கை குறைப்பு

## 9 பேரிலிருந்து 5 பேரானது


கொழும்பு, ஜூலை 29

யாழ். மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து ஐந்தாகக் குறைக்கப்படுகிறது. "2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப் பின்படி யாழ். மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கையில் 3 இலட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது" என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிறி நேற்று *உதயன்* பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

"யாழ். மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை இதுவரை 9ஆக இருந்தது. இனிவரும் தேர்தல்களில் 5 ஆசனங்களுக்குள் அது மட்டுப்படுத்தப்படவுள்ளது. எஞ்சும் 4 ஆசனங்களும் பதுளை, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்குப் பகிரப்படவுள்ளன.

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக எவரேனும் வழக்குத் தொடர்ந்தால் அது செல்லுபடியாகாது. ஏனென்றால், அரசமைப்புக்கு அமைவாக 2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டு இந்த விடயம் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை உடைய வர்த்தமானி அறிக்கை எதிர்வரும் வாரங்களில் வெளிவரும்" - என்றார்.

அவதானம் தேவை



ஓமந்தையில் தண்டவாளத்தில் சிக்கிக் கொண்ட விறகு ஏற்றி வந்த லொறியை ரயில் மோதித் தள்ளியதில் மூவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். கொழும்பில் இருந்து வந்த ரயிலே மோதியது.

## மாவைக் கந்தன் தேர் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 5 மணிக்கு உஷாக்கால பூசை 5.30 மணிக்கு ஸ்நபனாபிஷேகம், காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடை பெற்று 9.30 மணிக்கு கந்தப்பெருமான் தேரில் ஆரோ கணித்து அருள் காட்சி வழங்கவுள்ளார்.

(12 ஆம் பக்கத்தில் தேர் சிறப்பு மலர் உள்ளது)

## எம்.பிக்கள் குறைப்பை ஏற்க கூட்டமைப்பு மறுப்பு

கொழும்பு, ஜூலை 29

யுத்தம் காரணமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் முழுமையாக மீளக்குடியமர்த்தப்படாத நிலையில், வடக்கு மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்காது என்று கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

"இது குறித்து தேர்தல்கள் ஆணையாளருடனும், அரசுடனும் பேச்சு நடத்தவுள்ளோம்" என்றார் அவர்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

போரால்தான் வடக்கில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இடம்பெயர்ந்து, முகாம்களில் பலர் இருக்கின்றனர். அதேபோன்று, இடம்பெயர்ந்து இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளிலும் பலர் உள்ளனர். அவர்களும் திரும்பிவரவில்லை.

பக் 04

★ வன்புணர்வுகள் தாராளமாக நடந்தன

★ இராணுவத்தினர் காட்டேரிகள் போன்று செயற்பட்டனர்

★ குழந்தைகள், பெண்களை கண்ணெதிரே சுட்டார்கள்

★ சரணடைந்த போராளிகள் கொல்லப்பட்டனர்

# சுடச் சொன்னவர் கோத்தபாயவே

## படை அதிகாரியின் சாட்சியத்தை வெளியிட்டது சனல்–4

## எல்லாமே பொய் என அடியோடு மறுத்துரைக்கிறது அரசு

கொழும்பு, ஜூலை 29

இறுதிப் போரில் சரணடைந்த போராளிகளைச் சுட்டுக்கொல்லும்படி 58ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வாவுக்குப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே உத்தரவிட்டார் என்று இராணுவ அதிகாரி ஒருவர் சனல்-4 தொலைக்காட்சிக்கு அளித்த வாக்குமூலத்தை இலங்கை அரசும் இராணுவமும் பாதுகாப்புச் செயலரும் அடியோடு மறுத்துள்ளனர்.

பக் 27

## சந்திரிகாவின் மகன் இலங்கையராக இருப்பது குறித்து வெட்கப்படுகிறேன்

### அமைச்சர் கெஹலிய சீற்றம்



கொழும்பு, ஜூலை 29

'சனல்-4' யுத்தக்குற்ற ஆவணத் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு தனது மகன் கண்ணீர்விட்டு அழுதார் எனவும், தான் இலங்கையர் எனக் கூறிக்கொள்ள வெட்கப்படுவதாக கூறினார் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்திருந்தார். அது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சந்திரிகாவின் மகன் இலங்கையராக இருப்பது குறித்து நான் வெட்கப்படுகிறேன் என்றார்.

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி ஒரு கண்ணையும் இழந்தார். புலிகளின் கொடூரத்தன்மை அவருக்குத் தெரியவில்லை. மாறாக 'சனல்-4' விடியோவைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பதாகக் கூறுவது வேடிக்கையாகவுள்ளது" என்றார் அமைச்சர். (உ-சி)

## வருட இறுதிக்குள் முற்றாக அவசரகாலச் சட்டம் நீக்கம்

கொழும்பு, ஜூலை 29

அவசரகாலச் சட்டம் இந்த வருட இறுதிக்குள் முற்றாக நீக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கு அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பக் 04

## இறுதி யுத்தம் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம்

### திங்களன்று வெளியிடப்படும்

கொழும்பு, ஜூலை 29

வன்னியில் நடந்த இறுதிப் போர் தொடர்பான விவரங்களை உள்ளடக்கி பாதுகாப்பு அமைச்சு தயாரித்த வெள்ளை அறிக்கை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

'மனிதாபிமான நடவடிக்கையின் உண்மை

பக் 04

## ஐ.தே.கவின் தலைமையினை ஏற்க கரு ஜெயசூரிய தயார்

### சஜித் பிரேமதாஸ அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

ஐக்கிய தேசியக் கட்சியை மிகப் பலமான கட்சியாக மாற்றுவதற்கு, அதன் தற்போதைய இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய கட்சியின் தலைமைத்துவப் பதவியை ஏற்கவேண்டும் என்று அக்கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கரு ஜயசூரியவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையை கரு ஜயசூரிய பூரணமாக ஏற்றுக்கொண்டார் என்று சஜித் பிரேமதாஸ நேற்றுக் கூறினார்.

இது தொடர்பாக அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பொன்றை சஜித் பிரேமதாஸ நேற்று கொள்ளுப்பிட்டி ரேணுகா ஹோட்டலில் நடத்தினார். அச்சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சஜித் பிரேமதாஸ மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் இந்நாட்டு மக்கள் கடும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். இவரது அரசுக்குப் பாடம் புகட்டக்கூடிய பலமான எதிர்க்கட்சி ஒன்று இப்போது இல்லை. எமது கட்சி மிகவும் பலம் குன்றிக் காணப்படுகின்றது.

எமது அயராத முயற்சி

பக் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம்.

# குடத்தனையில் மணல் ஏற்றும் வாகனங்களால் வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானமும் கடைப்பிடிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் மணல் ஏற்றச் சென்றுவரும் லொறிகள், டிப்பர் வண்டிகள் பயன்படுத்த வேண்டிய வீதி தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்து குடத்தனைக்கு மணல் ஏற்ற வந்து செல்லும் லொறிகள், டிப்பர் வண்டிகளால் மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை வீதி பலத்த சேதத்துக்குள்ளாவதுடன் வைத்திய சாலைக்கு நோயாளர்களை ஏற்றி இறக்கும் வாகனங்கள், பஸ்தரிப்பிடத்திலிருந்து நடந்து வந்துசெல்லும் நோயாளர்கள், பார்வையாளர்கள் அவ்வீதியால் வந்துசெல்லும் இவ்வாகனங்களால் பலத்த சிரமங்களுக்குள்ளாவதுடன் விபத்துக்களைச் சந்திக்க வேண்டியுமுள்ளது. இதன் காரணமாக ஆஸ்பத்திரி வீதியில் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்படுகிறது.

இவற்றின் காரணமாக இவ்வீதியால் மணல் ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களும் வேறு பாதையால் சென்று வர வேண்டும் எனப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நிர்வாகம், கடைசியாக நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டது.

அன்றைய கூட்டத்தில் விசேடமாகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலை நிர்வாகத்தின் கோரிக்கையை ஏற்று மணல் ஏற்றி இறக்கும் வாகனங்கள் அனைத்தும் வல்லை - துன்னாலை வீதி வழியாக சென்று வர வேண்டும் எனக் கூறி அதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், அத்தீர்மானத்தை உடனடியாக அமுல் செய்யுமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

அன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின், ஈ. சரவணபவன், சி. சிறீதரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆனால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டு ஒரு சில மாதங்கள் நிறைவுற்றுள்ள போதிலும் குறிப்பிட்ட தீர்மானம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தற்போது எம்.எவ்.ரி. அடையாளமிடப்பட்டுள்ள மகேஸ்வரி பவுண்டேசன் நிறுவனத்தைச் சேர்ந்த டிப்பர் வாகனங்கள், லொறிகள் உள்ளிட்ட வாகனங்கள் அனைத்தும் மந்திகை ஆஸ்பத்திரி ஊடாகவே மணலை ஏற்றிக் கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

மந்திகை ஆஸ்பத்திரி வீதி ஊடாக இந்த வாகனங்கள் சென்று வருவதால் நோயாளர்கள், வைத்தியசாலைக்கு நோயாளர்களை ஏற்றி இறக்கும் வாகனங்கள், அன்புலன்ஸ வண்டிகள், பாதசாரிகளாக வைத்தியசாலைக்குச் சென்று வருவோர் வாகன நெரிசலுக்கு மத்தியில் சென்று வர வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானம் அமுல் படுத்தப்படாமையினால் மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (த-273)

# சிறுவர் இல்லத்தை மூடுமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு

பருத்தித்துறை, ஜூலை 29

புலோலியில் இயங்கி வந்த கடவுளின் சொந்தக் குழந்தைகள் இல்லத்தை நேற்று முதல் மூடுமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி இல்லம் பதிவு செய்யப்படாமல் இயங்கி வந்த நிலையில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் பதிவு செய்வதற்கு அவகாசம் வழங்கப்பட்டும் இதுவரை பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இல்லத்தை மூடுவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளைப் பதிவு பெற்ற இல்லத்துக்கு மாற்றுவதற்கும், பெற்றோர்களிடம் ஒப்படைக்கக் கூடிய பிள்ளைகளை அவர்களிடம் ஒப்படைக்கும்படியும் நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-253)

# 2 லட்சத்து 30 ஆயிரம் பெறுமதியான நகைகள் கொடிகாமத்தில் கொள்ளை

தென்மராட்சி,ஜூலை 29

கொடிகாமம் பகுதியில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை வாள், கத்தி போன்றவற்றைக் காட்டி பயமுறுத்தி இரண்டு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 500 ரூபா பணத்தையும் அபகரித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் உதவித் தபால் அதிபர் செய்த முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த நடராசா சுரேஸ் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்தார்.

வழக்கினை விசாரித்த நீதிவான் மா. கணேசராஜா சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-207)

# சாவகச்சேரி லிகோரியாக் திருவிழா

தென்மராட்சி, ஜூலை 29

சாவகச்சேரி கச்சாய்வீதி புனித லிகோரியார் தேவாலய நவநாள் திருவிழா இன்று மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஓகஸ்ட் ஆறாம் திகதி சனிக்கிழமை மாலை திருப்பலி பூஜையும் திருநற்கருணை ஆராதனையும் நடைபெற்று மறுநாள் காலை திருநாட்பாடல் பலிபூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை ஆலய பங்குத் தந்தை அருட்பணி எம். யேசுரட்ணம் அடிகள் நடத்துவார். (த-207)

# தவணைப் பரீட்சை ஒத்திவைப்பு

தென்மராட்சி, ஜூலை 29

தென்மராட்சி தரம் 10, 11 வகுப்புகளுக்கு நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஓகஸ்ட் முதலாம் திகதி நடாத்தப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

30 ஆம் திகதி அவுஸ்திரேலியா நாட்டு நிறுவனத்தி னால் தரம் 10, 11 வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான பரீட்சை நடத்தப்படுவதால் தவணைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (த-207)

# சிறுவர் அரங்கமும் ஆக்கங்கள் வெளியீடும்

சிறுவர் அரங்கும் மாவை நித்தியானந்தனின் ஆக்கங்களின் வெளியீட்டு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வெள்ளவத்தை காலி வீதியில் அமைந்துள்ள கொழும்பு தேசிய கலை இலக்கியப்பேரவையில் நடைபெறவுள்ளன.

சோ.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் சபா.ஜெயராசா, கலாநிதி சி.ஜெயசங்கர், திருமதி வசந்தி தயாபரன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

உரைகளைத்தொடர்ந்து மாலை 6.15 மணிக்கு கொழும்பு தேசிய கலை இலக்கியப்பேரவையின் முட்டை நாடகம் மற் றும் "பாப்பா பாரதி" வீடியோ காட்சி ஆகியன அரங்கேறவுள்ளது.

மாவை நித்தியானந்தனின் சிறுவர்களுக்கான சின்னச் சின்ன நாடகங்கள் சட்டியும் குட்டியும் நாடகம், நாய்க்குட்டி ஊர்வல நாடகங்கள் சின்னச் சின்ன கதைகள் பாப்பா பாரதி சிறுவர் வீடியோ ஆகியன வெளியிடப்படவுள்ளது.

# பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 572 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அரசின் திவிநெகும திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம அலுவலகர்கள் ஊடாக தென்னம்பிள்ளைகள் அண்மையில் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (த-207)

# ஆங்கில தின எழுத்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். வலயமட்ட ஆங்கில தினஎழுத்துப் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

# கூட்டம் பிற்போடப்பட்டது

தென்மராட்சி, ஜூலை 29

தென்மராட்சி கல்விவலய பாடசாலை, ஆசிரியர்களுக்கு இன்று நடைபெற இருந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

# நிகழ்வுகள்

## முதியோர் சங்கக் கூட்டம்

நவாலி, ஜூலை 29

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கத்தின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து சங்கத் தலைவர்களையும் இந்தக் கூட்டத்துக்கு சமுகம் தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி. அருந்தவராசா அறிவித்துள்ளார். (ற-100)

## பழைய மாணவர் சங்க கூட்டம்

நவாலி, ஜூலை 29

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் வேலாயுதம் சக்திவேல் தலைமையில் நடைபெறும். (ற-100)

## சேவை நலன் பாராட்டு விழா

நவாலி, ஜூலை 29

வலி. தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசமும் முன்பள்ளி ஆசிரியர்களும் இணைந்து நடத்தும் வலி. தென்மேற்குப் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.கேமலா சிவசோதியின் சேவைநலன் பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சேவைநலன் பாராட்டுவிழா வலி. தென்மேற்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் காலவரையறை இன்றி ஒத்திவைப்பு

## முஸ்லிம்களின் கவனயீர்ப்பு பிரேரணையே இதற்குக் காரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

முஸ்லிம்களின் கவனயீர்ப்புப் பிரேரணையால் யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் ஆளும் தரப்பைச் சேர்ந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான அங்கிர் றோழிபதியூதீன், எம்.எம்.எம். றமீஸ், அனுமயீன் அஸ்பர், எம்.எம். எஸ். முஸ்தபா ஆகியோர் யாழ். பிரதேச செயலர் முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு, அபிவிருத்தி, உதவிகள் போன்ற நடவடிக்கைகளில் பாரபட்சம் காட்டுவதாகச் சபையில் குற்றஞ்சாட்டினார்கள்.

அத்துடன்

* மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கெனத் தனியான கொள்கைகள் அமுலாக்கப்பட வேண்டும்.

* பிரதேச செயலரின் செயற்பாடுகள், அணுகுமுறைகள் என்பவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

* முஸ்லிம்களின் விவகாரங்களுக்கென முஸ்லிம் கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு வழங்கக் கோரி கவனயீர்ப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்ததுடன் இது குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிச் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். அத்துடன் ஆளும் தரப்பு உறுப்பினர் எஸ். விஜயகாந்தும் பிரேரணைக்கு ஆதரவாகச் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.

இதனையடுத்து மாநகரசபைக் கூட்டத்தை காலவரையறையின்றி ஒத்தி வைப்பதாக முதல்வர் அறிவித்தார். (த-7)

# இரு தினங்கள் மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 29

உயரழுத்த மின் மார்க்கங்களில் திருத்த வேலைகள் காரணமாக சனி, ஞாயிறு தினங்களில் சில இடங்களில் மின் தடை அமுலில் இருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பிரதேசம், கலட்டிப் பிரதேசம், பிறவுண் வீதியில் ஆடியபாதம் வீதியில் இருந்து கலட்டிச் சந்திவரை, கம்பஸ் லேன், தலங்காவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணிவரை இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பையன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப் பகுதி ஆகிய இடங்களில் மின் தடை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)



தேர்தலில் அரசு படுதோல்வி அடைந்ததன் பின்னர், நேற்று ஊர்காவற்றுறை மேலைக் கரம்பொன் முருகமூர்த்தி ஆலயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்

# ஆஸ்பத்திரி வீதியில் கோஷ்டி மோதல் 12 பேர் யாழ். பொலிஸாரினால் கைது

## 8ஆம் திகதிவரை அவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இரண்டு குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 12 பேரை யாழ். பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்தனர்.

அவர்களை விசாரணைக்குட்படுத்திய நீதிவான் பிறேம சங்கர் கடுந்தொனியில் எச்சரிக்கை செய்ததுடன் அடுத்த மாதம் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதி மற்றும் யாழ். ரயில் நிலைய வீதி என்பன இணையும் முலைவைச் சந்தியில் உள்ள இராணுவ காவலரணுக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு இரு குழுக்களுக்கு இடையே மோதல் இடம்பெற்றது.

மதுபான விற்பனை நிலையமொன்றில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இதற்குக் காரணம் என்றும், பெண்களுடன் சேஷ்டை புரிந்தமையே இதற்குக் காரணம் எனவும் வெவ்வேறு காரணங்கள் கூறப்பட்டன.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் தர்க்கத்துடன் ஆரம்பமான இந்த மோதல் இரவு 10 மணியளவில் தீவிரமடைந்தது. இரு தரப்பினரும் போத்தல்களாலும், கற்களாலும் பரஸ்பரம் மோதிக் கொண்டனர்.

இதனால் அப்பகுதியை அண்மித்த வீடுகளின் மேலும், வீட்டு மதில்கள் மீதும் போத்தல்கள், விழுந்து நொறுங்கியதுடன், கற்களும் வீசப்பட்டன. இதனால் அந்தப் பகுதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டதுடன் பதற்றமான சூழ்நிலையும் காணப்பட்டது.

நிலைமை மோசமாகவே அவ்விடத்துக்கு நகர்ந்த இராணுவத்தினர் வானத்தை நோக்கித் துப்பாக்கியினால் சுட்டு மோதலில் ஈடுபட்டவர்களை கலைக்கும் நடவடிக்கையில் இறங்கினர்.

அத்தோடு, இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

அந்தப்பகுதியைச் சுற்றி வளைத்த ஏராளமான பொலிஸார் அங்கு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் அந்த மோதலில் ஈடுபட்டவர்களில் 12 பேரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். மோதலில் ஈடுபட்ட ஏனையவர்கள் தப்பி ஓடிவிட்டனர் எனக் கூறப்பட்டது.

அன்று இரவு முழுவதும் சுமார் 20 இற்கும் மேற்பட்ட பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நேற்றும் அப்பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். மோதல் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

# தெரு விளக்குகளைப் பொருத்தும் ஆணையே தமிழ்க் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது

## அமைச்சர் பஸில் கூறுகிறார்

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியைத் தமிழ் மக்களின் ஆணை என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

பிரதேசசபைத் தேர்தலில் வெற்றி பெற்று விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் ஆணை குறித்துப் பேசுகிறது. ஆனால் ஜனாதிபதிக்கு முழு நாடுமே ஆணையை வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் உண்மையில் தெருவிளக்குகளை பொருத்துவதற்கும், தண்ணீர் குழாய்களை அமைப்பதற்கும் தான் அதிகாரம் கொண்டது. அதற்கே கூட்டமைப்புக்கு மக்களின் ஆணை கிடைத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பின்படி மக்களின் ஆணை என்பது கருத்து வாக்கெடுப்பு மூலமோ அல்லது ஜனாதிபதி மூலமோ, நாடாளுமன்றத் தேர்தல் மூலமோ தான் பெறப்பட வேண்டும் என்றும் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களின் நிலை குறித்து அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரியும், தமிழ் நாடு முதல்வர் ஜெயலலிதாவும் சந்தித்தபோது கவலை வெளியிட்டுள்ளது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள பசில் ராஜபக்ச, அவர்கள் நட்பு ரீதியாக கவலையை வெளியிட்டிருந்தால், அதை வரவேற்பதாக கூறியுள்ளார்.

ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கைகளால் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினையை அமெரிக்கா முதலில் தீர்க்க வேண்டும் என்றும் பசில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை விட தமிழ் நாட்டில் வறுமைநிலை மோசமாக உள்ளதை தான் அறிவேன் என்று கூறியுள்ள அவர், இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் பற்றி கவலைப்பட [illegible] ஜெயலலிதா தமிழ்நாட்டில் வறுமை நிலையில் உள்ளவர்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர்களின் எந்தவொரு கரிசனையும் எமது நல்லிணக்க முயற்சிகளுக்கு தொந்தரவாக இருக்கக் கூடாது என்று பசில் ராஜபக்ச திட்டவட்டமாக கூறியுள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் குழுவில் சிறிலங்காவுக்கான உதவிகளை தடைசெய்யக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், தனது கவலை பொருளாரதார அளவீட்டில் இல்லை என்றும், இது தனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரு தகவல் அல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா இதனை நடைமுறைப்படுத்தும் என்று தான் நினைக்கவில்லை என்றும், முன்னர் ஜிஎஸ்ரி பிளஸ் சலுகையை காட்டி அழுத்தம் கொடுக்கப்பட்ட போதும், அதனால் பெரிய [illegible] ளார். (த)

உள்ளே...

12ஆம் 13ஆம் பக்கங்களில் பிரசுர மாகியுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாச் சிறப்பு மலரின் அடங்கிய

**கோயில் வரலாறு**

கட்டுரையை எழுதியவர்:

ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமான

மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதி குருக்கள் ஆவார்.

# இந்திய மீனவரை தாக்கவில்லை இலங்கைக் கடற்படை மறுப்பு

இந்திய மீனவர்கள், 30 பேர் மீது கடந்த வியாழனன்று இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக் க்கப்படும் குற்றச்சாட்டை இலங்கை கடற்படை நிராகரித்துள்ளது.

இந்திய மீனவர்கள் எவர் மீதும் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தவில்லை எனவும் ஒருபோதும் தாக்குதல் நடத்தவும்மாட்டாது எனவும் கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசலவர்ண குலசூரிய தெரிவித்தார்.

உண்மையில், படகு இயந்திரம் தத்தளித்துக் கொண்டி ருந்த இந்திய மீனவர் ஒருவரை இலங்கைக் கடற்படையினர் காப்பாற்றியதாக கடற்படை பேச்சாளர் கூறினார்.

மேற்படி படகு நெடுந் தீவுக்கு கட்டியிழுத்து வரப்பட்டதாகவும், அப்படகு திருத்தப்படும் வரை மேற்படி இந்திய மீனவரை கடற்படையினர் பராமரிப்பர் எனவும், அதன்பின் வழமைபோல சர்வதேச கடல் எல்லையில் இந்திய கரையோர காவல் படையின ரிடம் அவர் ஒப்படைக்கப்படுவர் எனவும் கடற்படை பேச்சாளர் கூறி னார்.

இதேவேளை -

இராமேஸ்வரம், வேதாரண்யம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு திடீரென வந்த இலங்கைப் படையினர் மீனவர்களின் படகுகளில் ஏறி அவர்களைத் தாக்கியதாகவும், இதில் 30 மீனவர்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக இரா மேஸ்வரம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (த)

(மற்றொரு செய்தி 8 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தண்டவாளத்தில் மாட்டிய லொறியை மோதித் தள்ளியது ரயில்! மூவர் பலி!!

ஓமந்தை ரயில் பாதையில் மாட்டிக் கொண்ட லொறி ஒன்றை ரயில் மோதித் தள்ளியதில் ஒன்று மோதியதில் லொறியில் பயணித்த மூவர் அந்த இடத்திலேயே பலியாகினர். மேலும் ஒருவர் காயமடைந்தார். நேற்றுக் காலை விபத்து நடந்தது.

கொழும்பிலிருந்து சென்ற ரயில் ஓமந்தை ரயில் நிலையத்தை அண்மித்த வேளை விபத்தில் சிக்கியது. பாதுகாப்புக் கடவை இல்லாத இடத்தில் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற விறகு ஏற்றி வந்த லொறி இயந்திரக் கோளாறால் அந்த இடத்திலேயே மாட்டிக்கொண்டது. கட்டுப்படுத்த முடியாத நிலையில் ரயில் அதனை மோதித் தள்ளியது.

மோதிய வேகத்தில் லொறி சுக்குநூறானது. ரயில் இயந்திரமும் கடும் சேதத்துக்கு உள்ளானது. சம்பவத்தில் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றும் இருவர் காயமடைந்தனர். அவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கணேசமூர்த்தி தர்மசீலன் (வயது 19), ராசன் உதயகுமார் (வயது 22) ஆகியோரே விபத்து நடந்த இடத்தில் உயிரிழந்தனர். இவர்கள் மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# அடிப்படைக் கல்வியே இல்லாது 2, 845 பேர் சிறைகளில் உள்ளனர்

கொழும்பு, ஜூலை 29

இலங்கைச் சிறைச்சாலைகளில் உள்ள 32 ஆயிரத்து 128 சிறைக் கைதிகளில் 2 ஆயிரத்து 845 பேர் அடிப்படைக்கல்வியே இல்லாத நிலையில் உள்ளனர் என்று சிறைச்சாலைகள் தலைமை அலுவலகம் தெரிவிக்கிறது.

அந்த தகவல்களுக்கு அமைய சிறைக்கைதிகளுக்கு இடையில் 46 பட்டதாரிகளும் உள்ளனர்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள 5 ஆயிரத்து 336 பேரும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளள 353 பேரும் முதலாம் தரத்திலிருந்து ஐந்தாம் தரம் வரையில் கல்வி பயின்றுள்ள 5 ஆயிரத்து 151 பேரும், ஐந்தாம் தரத்தில் சித்தியடைந்துள்ள, 7 ஆயிரத்து 65 பேரும், மற்றும் எட்டாம் தரத்தில் சித்தியடைந்துள்ள 9, 440 பேரும் சிறைச்சாலைகளில் இருப்பதாக அத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ம-22)

# இரு அடையாள அட்டைகள் ஒரே இலக்கத்தில் விநியோகம்

கொழும்பு, ஜூலை 29

ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம் இரு நபர்களுக்கு ஒரே இலக்கத்தைக் கொண்டுள்ள அடையாள அட்டைகளை வழங்கியுள்ளது.

73004180 V என்ற இலக்கத்திலேயே இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறையைச் சேர்ந்த நம்முனி ஆராச்சிலாகே வசந்த பிரேமலால் என்பவருக்கும் மற்றும் எல்பிட்டியாவைச் சேர்ந்த திஸாநாயக்க முதியான் சலாகே திலகரத்ன பண்டா என்பவருக்குமே இந்த ஒரே இலக்கத்தைக் கொண்டுள்ள அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. வசந்த பிரேமலாலுக்கு 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் 1990.09.25 ஆம் திகதியில் திலகரத்ன பண்டா என்பவருக்கு அதே இலக்கத்தைக் கொண்ட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இவரது அடையாள அட்டை மீள புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-22)

## ஐ.தே.கவின்... 
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் காரணமாக மார்ச் மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சிக்கான வாக்களிப்பு வீதத்தை 34 வீதம் வரை உயர்த்தினோம். ஆனால், இப்போது நடந்து முடிந்த தேர்தலில் கட்சிக்கான வாக்களிப்பு 22 வீதத்தால் குறைந்துவிட்டது.

மார்ச்சில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றுவதற்குக் குரல் கொடுத்த அனைவரும் ஒதுக்கப்பட்டனர்; பழிவாங்கப்பட்டனர்.

தேர்தல்களில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் கட்சியின் பிழையான செயற்பாடுகள் காரணமாக கட்சி தோல்வியைச் சந்தித்தது. கட்சியின் புதிய யாப்பு பச்சை பச்சையாக மீறப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் எமது கட்சி கடும் தோல்வியைச் சந்தித்தது. இந்த நிலைமை மேலும் தொடர அனுமதிக்கமுடியாது.

கட்சியில் உள்ள வெவ்வேறு கருத்துகளைக் கொண்டோர், பழிவாங்கப்பட்டோர், கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றுவதற்கு முயற்சி செய்வோர் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு செல்லக்கூடிய ஒரு தலைவர் எமது கட்சிக்கு இப்போது தேவை.

அவ்வாறான தலைவராகப் பிரதித் தலைவர் கருஜயசூரியவை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இன்று (நேற்று) அவரை நாம் சந்தித்துக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை ஏற்றுச் செயற்படுமாறு அவரிடம் கோரிக்கை விடுத்தோம். அந்தக் கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டார். கட்சிக்குள் அனைவரையும் ஒன்றிணைத்துப் போவதன் மூலம்தான் கட்சியை வெற்றிமிக்க கட்சியாக மாற்ற முடியும். நாம் விரும்பும் அந்த ஒன்றிணைப்பை கரு ஜயசூரிய மிகவும் திறம்படச் செய்வார் என்று நாம் நம்புகிறோம் - என்றார்.

## எம்.பிக்கள்... 
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையிலேயே 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வாக்காளர் இடாப்பு வடக்கின் மொத்த வாக்காளர் எண்ணிக்கையைக் காட்டவில்லை.

அதனடிப்படையில் மக்களின் பிரதிநிதிகளைக் குறைக்கும் தீர்மானத்தை ஏற்க முடியாது. இது நியாயத்துக்கு அப்பாற்பட்டது. எனவே, இந்த விடயம் தொடர்பாக அரசுடனும், தேர்தல்கள் ஆணையாளரிடமும் பேசுவோம் - என்றார் சுரேஷ். (உ)

## வருட இறுதிக்குள்... 
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். சுமார் முப்பது வருட காலமாக அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டத்தை ஒரே நாளில் நீக்கிவிடமுடியாது. அவசரகாலச் சட்டத்தில் உள்ள சில பகுதிகள் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன. எஞ்சியவையும் படிப்படியாக நீக்கப்பட்டு வருட இறுதிக்குள் முற்றாக அகற்றப்பட்டுவிடும் - என்றார் அமைச்சர். (உ)

## இறுதி யுத்தம்... 
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்த அலசல்கள்' என்ற தலைப்பிலான இந்த அறிக்கையை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ஜனாதிபதியிடம் கையளித்தார். நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜெயரட்ணவும் கலந்துகொண்டார். இலங்கைப் படையினர் மீது சுமத்தப்படும் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வைத்து எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும்.

போரின் இறுதிக் கட்டத்தில் பங்கேற்ற படையினர் மற்றும் படை அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள், சாட்சியங்களின் அடிப்படையிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2006 ஜூலையில் மாவிலாறில் போர் தொடங்கியதில் இருந்து 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்தது வரையான சம்பவங்கள் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன. (உ)





40 ஆவது இனிய இல்லற வாழ்வில் துணைவி லீலாவதி யுடன் அகவை 60 இல் காலடி வைத்து இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை தனது பிறந்தநாளைக் கொண்டாடும்

திரு.பொ.தம்பிஐயா

அவர்களை மேன் மேலும் பல செல்வங்கள் பெற்று நோய் நொடியின்றி பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

நாவலடி, அரியாலை,
0771513739

Dr. திரு.திருமதி அருண்பாபு -சர்மிலா
(மருமகன்-மகள்)

**தவறிவிட்டது**

லொறி வாகன இலக்கத் தகடு (NPJY 8492) மல்லாவிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**0212226022, 0774592969**

**வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் 520 சதுர அடி விஸ்தீரணம் உள்ள சகல வசதிகளும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு. ஸ்ரோராகப் பாவிக்க உகந்த பாதுகாப்பான இடம்.
தொடர்பு: Hot Line 0776029727

**ஆவலுடன் எதிர்பார்த்த அந்தண குருமார், பெண்களுக்கான சோதிட வகுப்பு**

**இளைப்பாறிய அதிபர் ஸ்ரீ.பாலச்சந்திரசர்மா**
நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும்
08.08.2011 காலை 9 மணி
12 மணித்தியால (6 நாள்) வகுப்பு 04.08.2011 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
சான்றிதழ் வழங்கப்படும்.
**இந்துக்குருமார் ஒன்றியம்**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

**பணியாளர் தேவை**

கொழும்பில் இயங்கும் பிரபல்யமான ஹோட்டல் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர் தேவை.

**உணவு பரிமாறுபவர் (Supplier)**

உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P. 0771804385


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
செ.சரத்சந்திரனின் அன்பு மாமி

**திருமதி இராஜேஸ்வரி இரகுநாதன்**

அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.
(சி-574749)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
ச.ஜீவரட்ணம் அவர்களின் அன்பு மாமி

*சரவணை தங்கம்மா*

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய வட்டம்,
யா/யாழ். மத்தியகல்லூரி.

## மரண அறிவித்தல்

**முத்தையா மகாலிங்கம் (கிளி)**
**(உரிமையாளர் நித்தி லைற்)**



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தச்சன் தோப்பு, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மகாலிங்கம் (கிளி) 26.07.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முத்தையா- அம்மாப் பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் நிசாந்தினி, நியூட்டன், உதயகீதா, துஷ்யந்தினி , நிவாஸ், தயாபரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணசேகரம் *(தம்பி)*
நியூட்டன் *(மகன்)*, சிவா *(மச்சான்)*.
தச்சன் தோப்பு,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேசிய நல்லிணக்கத்துக்கான பாதை விசாலிக்கட்டும்

நினைத்துப் பார்க்க முடியாத, அளவிடற்கரிய, மனித நேயமும் மனிதாபிமானமும் பொங்கிவழியும் மகோன்னதமான பணி ஒன்று குடாநாட்டில் நிகழ்ந்தேறி உள்ளது. நாட்டின் தெற்கு மூலையான தேவேந்திர முனையிலிருந்து வடக்கின் பருத்தித்துறை முனை வரைக்கும் இடம் பெற்ற நடை பயணத்தின் மூலம், குடாநாட்டின் புற்றுநோயாளருக்கு உதவும் பணி வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழையில் சிறு வர் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை அமைக்கும் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, நேற்று முன்தினம் 27ஆம் நாளன்று முடிவுற்ற 670 கிலோ மீற்றர் நடை பயணத்தின் மூலம் திரட்டப்பட்ட 140 மில்லியன் ரூபா குடாநாட்டில் புற்றுநோயாளருக்கான சிகிச்சை வசதிகளை நவீன மயமாக்க உதவ உள்ளது.

பரந்த மனமும் இரக்க சிந்தையும் உள்ள 13 பேர் தொடர்ச்சியாக 27 நாள்கள் நடந்து இத்தனை பெருந்தொகையைச் சேர்த்தனர். அவர்களின் நற்செயலுக்கு ஆதரவளிக்கும் வகையில் வரும் வழியில் பெரும் எண்ணிக்கையானோர் நடைபாதையில் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர்களும்- குமார் சங்கக்காரா, மஹேல ஜெயவர்தனா, அஞ்சலோ மத்தியூஸ், முத்தையா முரளிதரன், டில்கார பெர்னான்டோ ஆகியோரும் - நடை பயணத்தில் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் பங்குகொண்டனர். அதனால் நடை பயணத்தைத் தரிசித்த அவர்களின் ரசிகர்களும் பார்வையாளர்களும் பெரும் தொகைகளை அள்ளிவழங்கினர். மனித நேயம் கலந்த இன சகோதரத்துவ உணர்வுடன் ஆற்றப்படும் இந்த உதவிக்கு தமிழ் மக்களின் சார்பில் நன்றி தெரிவிக்க வேண்டிய கடமை எமக்கு எல்லோருக்கும் உண்டு.

வடக்கில் இந்த உயிர்க்கொல்லி நோய் இப்போது அதிதீவிரமாகப் பரவி வருகிறது. இந்த நோயால் பாதிக்கப்படும் நோயாளருக்கு நவீன வசதி களைச் செய்யும் திட்டங்களுக்கு உதவுவதற்காகவே நடை பயணம் மூலம் நன்கொடை திரட்டும் பணியை நலன்விரும்பிகள் இருவர் (மஹேல ஜெயவர்த்தனா, நாதன் சிவகணநாதன்) தமது உடன்பிறப்புகள் புற்றுநோயால் உயிர்பிரிந்த சோக உணர்வின் பீறிடுதலால் இந்த மனித நேயப் பணியை முன்னெடுக்க முற்பட்டார்கள். தமது சகோதர, சகோதரிகளுக்கு ஏற்பட்ட கதி ஏனையோருக்கும் நேர்ந்து விடக் கூடாது என்ற தூய்மையான உள்ளுணர்வுடன் முன்னின்று உழைத்தார்கள்; நீள் பயணத்தின் உந்து சக்திகளாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.

நல்ல மனங்கொண்ட மக்களால் வழங்கப்பட்ட நிதி உதவி நோயாளர்களுக்குப் பின்வரும் வசதிகளைச் செய்ய உதவும்:

-தெல்லிப்பழையில் கதிர்வீச்சு வசதிகளையும், நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான (ஆண்கள், பெண்களுக்கு) விடுதி வசதிகளையும் ஏற்படுத்தல்.

- குறுந்தூர கதிர்வீச்சு சிகிச்சைக் கட்டடம் அமைத்தல்.
- கதிரியக்க அயடின் சிகிச்சைக்கான கட்டடம்.
- சி.ரி.சி. சிமுலேற்றர் இயந்திர வசதியும், கட்டட வசதியும்.
- யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பெண் புற்றுநோயாளர் விடுதி அமைத்தல்; அதி கவனிப்புப் பிரிவை ஏற்படுத்துதல்.
- யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான அதி கவனிப்புப் பிரிவு அமைத்தல்.

புற்றுநோயால் பாதிக்கப்படுவோருக்குச் சிகிச்சை வசதிகளை யாழ்ப்பாணத்திலேயே செய்வதற்கான திட்டத்தின் ஒரு பகுதியே மேற்கண்டவையாகும்.

இவற்றுக்குத் தேவையான நிதியை அரசாங்கத்திடம் இருந்து பெறுவதற்குப் பல வருடங்கள் காத்திருக்க நேரிடும்.

அதனாலேயே, இந்த நடை பயணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. உத்தேசமாக 200 மில்லியன் ரூபா பணத்தைத் திரட்டுவது இலக்காகும். 140 மில்லியன் சேர்க்கப்பட்டுவிட்டது. மேலே குறிப்பிடப்பட்ட இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள், இந்த நோயாளர் திட்டங்களுக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளார்கள். மிகுதித் தொகையான 60 மில்லியன் தொகையை சேர்ப்பதற்கு பிரதான ஏற்பாட்டாளர்கள் இருவரும் தொடர்ந்தும் பாடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நடை பயணம் மூலம் தேவைப்படும் முழு நிதியையும் திரட்ட முடியுமா என்ற எதிர்மறையான சிந்தனையைத் தவிர்த்து, தாய் வழி வந்த தங்கங்களெல்லாம் நேர்வழி நின்று ஓர்வழி சென்றால் நாளை நமதே என்ற மனத்துணிவுடன், இந்த நற்பெரும் தொண்டினை முன்னெடுத்த ஏற்பாட்டாளர்கள், கருணை உள்ளத்துடன் பிறர் துன்பத்தை, வேதனையைப் போக்குவதற்கு முன்வந்த கருணையாளர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்களின் முன்னுதாரணத்தைக் குடாநாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள்.

மிகப் பிரம்மாண்டமான மனிதத் தொண்டுக்கு கைகொடுத்த தெய்வங்களாகவே குடாநாட்டு மக்கள் அவர்களை உயரவைத்துப் போற்றுவர். எந் நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு - என்ற வள்ளுவன் வாக்கை சிரமேற்கொண்டு காலாதி காலமாக நன்றி பாராட்டுவர்.

நடை பயணத் திட்டம் அளித்த வெற்றி, அரசியல் வாதிகளைச் சேர்த்துக்கொள்ளாமலே, நாட்டின் இனங்களுக்கிடையே பரஸ்பர ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் உருவாக்கலாம் என்பதற்கான முதலாவது உதாரணமாக அமைகிறது.

எல்லோரும் இந்த நாட்டு மக்களே, மன்னர்களே, என்ற நிலையை எந்தவித பிசிறுமின்றி உருவாக்க வழிகாட்டிய மிகப்பெரும் சிறப்பு, இந்த நடைபயணத்துக்கு (TRAIL) உண்டு. இத்தகைய செயலூக்கங்களே, இனங்க ளுக்கு இடையில் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் உண்டாக்கும். இந்த வழி சென்றால் நாட்டில் விரோதங்களையும் குரோதங்களையும் போக்கப் பாதை விசாலிக்கும். வெறும் அறிக்கைகளாலும் வாய்ச் சவடால்களாலும் ஆணைக்குழுக்களாலும் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க முடியாது. நாட்டையும் மக்களையும் அவர்தம் உறவையும் சீரழிக்கவே அவை உதவும்.

# நாணயக் குற்றிகள் தட்டுப்பாடு மதத்தலங்கள் மீது குற்றச்சாட்டு

## மத்திய வங்கி கூறுகிறது

கொழும்பு, ஜூலை 29

மத வழிபாட்டுத் தலங்களிலுள்ள உண்டியல்கள் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் உண்டியல்களில் நாணயக் குற்றிகள் சிக்கிக் கொண்டிருப்பதால் நாட்டில் நாணயக் குற்றிகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இவ்வாறு சிக்கிக் கொண்டுள்ள நாணயக் குற்றிகளை வெளியே கொண்டு வந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கான திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியின் மேலதிக வர்த்தக அதிகாரி திருமதி எச். பீ.ரி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் நாணயக் குற்றிகளின் தட்டுப்பாட்டுக்கு வழிபாட்டுத் தலங்களிலுள்ள உண்டியல்கள் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் உண்டியல்களில் நாணயக் குற்றிகள் சிக்கிக் கொள்வதே முக்கிய காரணமாகும். உண்டியல்களில் சிக்கிக்கொண்டுள்ள நாணயக் குற்றிகளை வெளியே புழக்கத்துக்கு கொண்டு வருவதற்காக இலங்கை மத்திய வங்கியால் பரிசளிப்புத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தியிருந்தோம்.

அதன் பின்னர் பரிசுகளை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நாணயக் குற்றிகளை சேகரிக்கத் தொடங்கியதால் எமது திட்டம் தோல்வி கண்டது.

அதுமட்டுமன்றி பல்வேறுபட்ட உற்பத்திகளுக்காக நாணயக்குற்றிகள் உருக்கப்படுவதாலும் இந்த நிலைமை உருவெடுத்துள்ளது என்றார். (ற)

# 3 லட்சத்து 21 ஆயிரம் மாணவர்கள் தரம் 5 பரீட்சையில் தோற்றவுள்ளனர்

அச்சுவேலி, ஜூலை 29

தரம் 5 புலமைப் பரீட்சைக்கு இந்த வருடம் 3 லட்சத்து 21 ஆயிரத்து 427 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இவர்கள் இயல்பு நிலையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக 2 ஆயிரத்து 772 நிலையங்கள் செயற்படவுள்ளன.

பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த வருடம் பரீட்சைக்கு தோற்றும் 3லட்சத்து 21 ஆயிரத்து 427 பரீட்சார்த்திகளில் சிங்களமொழி மூலம் 2லட்சத்து 41 ஆயிரத்து 610 மாணவர்களும் தமிழ்மொழி மூலம் 79 ஆயிரத்து 817 மாணவர்களும் தோற்றவுள்ளனர்.

பரீட்சை நிலையங்களுக்கான விநியோகம் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக 506 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் செயற்படவுள்ளன. (ம-11)

# ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு வந்தது இடமாற்றக் கடிதம்

கொழும்பு, ஜூலை 29

சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள ஆசிரியை ஒருவருக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் விதமாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாகத் தெரியவருவதாவது:

குறித்த ஆசிரியையின் சேவைக்காலம் 37 ஆண்டுகளாகும். நிவித்திகலையிலுள்ள மகாவித்தியாலயம் ஒன்றுக்கு 1973 ஆம் ஆண்டில் அவரது முதலாவது நியமனம் கிடைத்தது.

1974 ஆம் ஆண்டில் ஆசிரிய பயிற்சி தொடர்பாக அவர் மஹரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பிரவேசித்தார். பயிற்சியின் பின்னர் பலாங்கொடை மற்றும் இரத்தினபுரி பிரதேசத்திலுள்ள இரு பாடசாலைகளில் சேவையாற்றினார்.

தனது திருமணத்தின் பின்னர் 1987 ஆம் ஆண்டில் பலாங்கொடை நகரை அண்டியிருந்த பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற்று ஓய்வுபெறும் வரையிலும் அதே பாடசாலையில் சேவையாற்றினார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில், 2011-07-01 திகதியிடப்பட்டுள்ள கடிதம் ஒன்றில் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதமாக இடமாற்றம் ஒன்று வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக அவர் பெரும் ஆச்சரியத்துக்கு உள்ளாகியுள்ளார்.

அந்த இடமாற்ற உத்தரவுக் கடிதம், சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் தலைமைச் செயலாளரின் அனுமதியுடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதமாக வலயக் கல்விப் பணிப்பாளரின் கையெழுத்துடன் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## துன்பத்தை தாங்கிக் கொள்ளல் ஆன்மிக சாதனைக்கு வழி

வருகிற துன்பத்தை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள். எதையும் தாங்கிக் கொள்ளும் இயல்புதான் ஆன்மிக சாதனைக்கு அத்திபாரமாகும். சிறியதோ,பெரியதோ எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஒன்றுதான். அதுதான் எதையும் தாங்கிக்கொள்ளும் தன்மை.

நாம் சிறந்த தர்மங்களைக் கடைப்பிடிப்பதற்கு இந்த நமது உடல்தான் முக்கிய கருவியாக விளங்குகிறது. நாம் நமது உடல் ஆரோக்கியத்தை மிகவும் நல்லமுறையில் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நாம் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டிருந்தால் நமது மனம் அசுத்தமடைகிறது. மந்திர உபதேசம் பெறுவதால் மனம் பெருமளவு தூய்மையடைகிறது. மந்திர உபதேசத்தைப் பற்றி சரியாக ஒருவன் அறிந்துகொள்ளாமல் போனால், அதனுடைய முழுப்பயனையும் அவன் பெறுவதில்லை.




பலவகையான ஆன்மிக அறிவுரைகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்வார்கள். அவை எல்லாவற்றிலும் சிறிதளவு உண்மை உண்டு. ஆனால் ஒருவருடைய மனதுக்கு எது பிடிக்கிறதோ அதையே அவன் செயல்படுத்த வேண்டும்.

புத்தகங்கள் பலவற்றையும் கண்டபடி படித்துக் கொண்டிருப்பதால் பலன் எதுவும் இல்லை. சிந்தனை ஓட்டம் முறையாக இல்லாவிட்டால் மனம் அமைதியடையாது. கண்கள் உன் வசப்படுமா? உன் கட்டுப்பாட்டில் உன் கண்கள் இருப்பது உனக்குச் சாத்தியமானால் மற்ற எல்லாமே உனக்குச் சாத்தியம்தான்.

நன்றி; ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் கடலில் மூழ்கிய கப்பல்களை கண்டறிய விசேட உபகரணங்கள்

## இந்திய நிறுவனத் தலைவர் தகவல்



யாழ்ப்பாணம், ஜூலை 29

காங்கேசன் துறைமுகப் பகுதியில் புதையுண்டிருக்கும் கப்பல்களை மீட்க 500 மீற்றர் தூரத்தை 'ஸ்கான்' செய்ய நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்திய 'ரிசோல்வ்' நிறுவனத்தின் தலைவர் ஜெசி பாலியல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் மூழ்கியுள்ள கப்பல்களை மீட்கும் பணியின் ஆரம்ப நிகழ்வில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 94 ஆம் ஆண்டுக்கும் 96 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட ஆறு கப்பல்களே இதன்போது அகற்றப்படவுள்ளன. இந்தக் கப்பல்கள் ஒவ்வொன்றும் 17 மீற்றருக்கும் 99.5 மீற்றர் நீளத்துக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் என எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கடற்பகுதியில் 500 சதுர மீற்றரை 'ஸ்கான்' பண்ணக்கூடிய நவீன உபகரணங்களைக்கொண்டே இந்த கப்பல்கள் மீட்கப்படவுள்ளன.

இந்த வருடம் நவம்பர் மாதமளவில் இந்தப் பணிகள் நிறைவடையும் அதனைத் தொடர்ந்து துறைமுக அபிவிருத்திப் பணி கள் ஆரம்பமாகும் என்றார் - அவர்.(ஐ-14)

## சேவை நோக்கு...



மக்களுக்காக: யாழ்ப்பாணம் வண்ணை கலட்டியில் உள்ள எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்ட மணிமண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கைக்கான கனேடிய முன்னாள் தூதர் புலோகசிங்கம் மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைக்கிறார். (ம)

# வீதியில் கற்குவியல் போக்குவரத்து நெருக்கடி



நவாலி, ஜூலை 29

நவாலி சின்னப்பா வீதி ஓரங்களில் கற்கள் பறிக்கப்பட் டுள்ளமையால் இந்த வீதியில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமை ஏற் பட்டுள்ளது.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய் வதற்கென்று அண் மையில்ஒரு தொகை கற்கள் வீதியில் வாகனங்கள் மூலம் பறிக்கப்பட்டன.

இதனால் அடிக்கடி பல விபத்துக்களும் ஏற் பட்டு வருகின்றன.

இதனால் வாகனங்கள் செல்ல முடியாத நிலைமையும் காணப் படுகின்றது. (ம-100)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வெளிநாட்டு வைத்தியர் சேவை

தென்மராட்சி, ஜூலை 29

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்களுக்கு சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்து வெளிநாட்டு வைத்தியர்களால் பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் செயற்கை அவயங்கள் தேவைப் படுவோர் கண் விழிவெண் படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ள வசதி இல்லாதவர்கள், பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ளோர், சிறுவயதில் உதட்டுப் பிரிவு ஏற்பட்டவர்களின் பதிவுகள் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வாறான பதிவுகளை மேற்கொள்வோருக்கு வெளி நாடுகளிலிருந்து வருகை தரும் வைத்திய நிபுணர்கள் மூலம் சிகிச்சைகள் வழங்க ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பாதிப்புகள், தேவைகள் உடையோர் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

யாழ் மண்ணில் வாழும் மாணவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

ஆஸ்திரேலிய பலராட் (Ballarat) பல்கலைக்கழகத்தின் விசேட புலமைப் பரிசில்களும் கருத்தரங்கும்

கருத்தரங்கில் பங்கு கொண்டு ரூ. 200,000 வரை புலமை பரிசில்களை பெற்றுக் கொள்ளுங்கள்

University of Ballarat
Learn to succeed
SRI LANKA STUDY CENTRE
★★★★★
சிறந்த போதனை தரத்திற்காக 5 நட்சத்திரத்தினை கொண்டு ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தினால் விருதளிக்கப்பட்டுள்ளது

சிறந்த கணினித்துறை / வணிகத்துறை பட்ட படிப்புகள்

FOUNDATION - க.பொ.த. சா/தர பரீட்சை முடித்தவர்கள்
Bachelor in Information Technology
Bachelor in Business
Bachelor in Commerce
MBS - (HR, Marketing, Finance)
MSc Information Technology
MSc Information Systems
Courses by IBM

யாழ் மண்ணில் இரண்டு சிறந்த மாணாக்கருக்கு பட்ட படிப்பிற்கான முழுமையான புலமைப் பரிசில்கள்.
கருத்தரங்கிற்கு சமூகமளித்து உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்



பலராட் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கான அத்தியட்சகர் திரு. பிரயன் டிகோல் அவர்களை சந்தித்து உங்கள் கேள்விகளுக்கு விடை காணுங்கள்.

நீங்கள் யாழில் இக்கற்கைநெறிக்கு பதிவு செய்து ஆஸ்திரேலிய IBM நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராகிய கலாநிதி ஜோன் ஹார்வியிடம் பட்ட படிப்பிற்கான Offer Letter ஐ நம்முடைய கொழும்பு கிளையில் ஆகஸ்ட் 14ம் திகதி பெற்றுக் கொள்ளுங்கள்.

நம் அனைத்து தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளும் உலக பிரசித்திப்பெற்ற IBM நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டவை

கருத்தரங்கு விவரம்
இடம் : Green Grass Hotel, இல. 33, ஆசீர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 2011 ஜூலை மாதம் 30ம் திகதி (சனிக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணிக்கு
மேலதிக விவரங்களுக்கு : நிசாந்தன் (Jaffna) 071 8561536, 077 6063825

No: 113, "Habitat House", Dutugemunu Street, Kohuwala.
Tel: 0112 817317, 0115 553237
E-mail: info@ubsrilanka.lk web: www.ubsrilanka.lk
Eastern Province: 077 4056741 Kandy: 077 3066411 Jaffna: 071 8561536
ATMC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 லட்சத்து 94 ஆயிரம் பரீட்சார்த்திகள் ஓகஸ்ட் உயர்தரத் தேர்வில் தோற்றுகின்றனர்

அச்சுவேலி, ஜூலை 29

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இந்த வருடம் இரண்டு லட்சத்து 94 ஆயிரத்து 861 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். பரீட்சைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 03 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 407 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன. 22 தினங்கள் பரீட்சை நடைபெறும்.

இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என்ற வகையில் இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றும் 2 லட்சத்து 94 ஆயிரத்து 861 பரீட்சார்த்திகளில் 2 லட்சத்து 35 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவும் 59 ஆயிரத்து 859 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் தோற்றவுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் பரீட்சைக்கு ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 761 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இதில் ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 498 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவும் 4 ஆயிரத்து 263 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் தோற்றவுள்ளனர்.

பழைய பாடத்திட்டத்தின் பிரகாரம் ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 100 பேர் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 91 ஆயிரத்து 504 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாகவும் 55 ஆயிரத்து 596 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் தோற்றவுள்ளனர். பரீட்சார்த்திகள் பொருத்தமான இயல்பு நிலையில் பரீட்சை எழுதுவதற்கு வசதியாக 2 ஆயிரத்து 407 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன. இதில் ஆயிரத்து 240 நிலையங்கள் புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்காகவும் ஆயிரத்து 167 பரீட்சை நிலையங்கள் பழைய பாடத் திட்டத்தின் படி பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்காகவும் நிறுவப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களுக்கான விநியோகங்களை மேற்கொள்வதற்கும் பரீட்சை நிலையங்களில் இருந்து விடைத்தாள்களை சேகரித்தல் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக 281 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் நாடளாவிய ரீதியில் செயற்படவுள்ளன.

கடந்த வருடம் பரீட்சைக்கு தோற்றியவர்களிலும் பார்க்க இந்த வருடம் பரீட்சைக்கு தோற்றுவோரின் தொகை 60 ஆயிரத்து 309 ஆக அதிகரித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடம் பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கையும் 476 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை தொடர்பான பணிகளில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளனர்.

புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு தனித்தனியாக இணைப்பு நிலைய பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-11)

## அபிவிருத்தி குறித்த சந்திப்பு

தென்மராட்சி, ஜூலை 29

அண்மையில் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவுக்கான கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் புனரமைப்பு தொடர்பான சந்திப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எழுதுமட்டுவாழ் சந்தியில் உள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையில் சந்திப்பு நடைபெறவுள்ளதால் அனைத்துக் குடியிருப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரிவு கிராம அலுவலர் வ,வேல்முருகு அறிவித்துள்ளார்.

பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## நெடுந்தீவு கடல் போக்குவரத்து சேவை விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 29

நெடுந்தீவு குறிகாட்டுவான் கடல் போக்குவரத்துச் சேவையில் தற்சமயம் வடதாரகை - II இணைந்து கொண்டதை அடுத்து தினசரி போக்குவரத்துச் சேவை விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடதாரகை காலை 6 .15 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்குப் புறப்படும்.

காலை 7 மணிக்கு நெடுந்தீவில் உள்ள தனியார் படகு அல்லது சங்கப்படகு களில் ஒன்று குறிகாட்டுவானுக்குச் செல்லும் குறிகாட்டுவானில் இருந்து காலை 8.30 மணிக்கு குமுதினி நெடுந் தீவுக்குப் புறப்படும்.

இந்தப் படகு மீண்டும் நெடுந்தீவில் இருந்து முற்பகல் 10.30 மணிக்கு குறிகாட்டுவான் செல்லும் நண்பகல் 12.30 மணிக்கு குமுதினி குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்று அங்கிருந்து குறிகாட்டுவானுக்கு பிற்பகல் 3.30 மணிக்குப் புறப்படும்.

குறிகாட்டுவானில் இருந்து மாலை 4 மணிக்குத் தனியார் அல்லது சங்கப் படகு நெடுந்தீவுக்குப் பயணிகளுடன் செல்லும் அதன் பின்னர் வடதாரகை மாலை 5 மணிக்கு நெடுந்தீவுக்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

**எமது சொத்து...**



கௌரவம்:புலவர் ம.பார்வதி நாதசிவத்தின் பவளவிழாவும் மாவை மான்மியம் நூல் வெளியீடும் அண்மையில் இடம் பெற்றன. இதில் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா புலவருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கிறார்.

## மாவைக்கந்தன் தேர் திருவிழாவன்று அன்னதானம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் மாவைக் கந்தன் தேர்த் திருவிழா தினத்தன்று வடக்கு வீதியிலுள்ள மாவைக் கந்தன் அன்னதான சபை மடத்தில் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களால் அன்னதானம் வழங்க ஏற்பாடாகியுள்ளதாக சபையின் செயலாளர் க.நாகராசா அறிவித்துள்ளார். (எ)

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிறுவர் வைத்திய நிபுணரின் சேவை

தென்மராட்சி, ஜூலை 29

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிறுவர் வைத்திய நிபுணரின் வைத்திய சேவைகள் கிடைத்துள்ளன. பிரதி சனிக்கிழமைகளில் காலை 8. மணி தொடக்கம் கிளினிக்குகள் வைத்திய சாலையில் 26 ஆம் இலக்க அறையில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், சிறுவர்களுக்கான சிகிச்சைகளை இதில் பெறமுடியும். உடற்போசாக்கு குறைந்த பிள்ளைகள், இருதய நோய், சிறுநீரகப் பாதிப்பு உட்பட்ட பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளான குழந்தைககளை வைத்துள்ள பெற்றோர் குழந்தைகளுடன் கிளினிக்குக்கு வருகை தருமாறும், இக்குழந்தைகளுக்கு மேலதிகவைத்திய சேவைகள் தேவைப்படின் அதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. (ம-207)

## கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு செயலமர்வு

தென்மராட்சி,ஜூலை 29

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி பிரிவினர் பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான முதலுதவி பயிற்சிகள் தொடர்பான 2 நாள்கள் செயலமர்வுகளை நடத்தவுள்ளனர்.

ஓகஸ்ட் இரண்டாம், மூன்றாம், நான்காம் திகதிகளில் மீசாலை கிழக்கு திருப்புகழ் மண்டபத்தில் செயலமர்வுகள் நடைபெறும்.

பிரிவுத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் செயலமர்வுகளை தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி ச.சாந்தசீலன் ஆரம்பித்து வைப்பார். இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம், டாக்டர் எஸ்.என். அருளானந்தம் உட்படப் பலர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-207)

## வடமராட்சியில் கொமர்ஷல் வங்கியின் இரு கிளைகள்

வடமராட்சி,ஜூலை 29

வடமராட்சிப் பிரதேசத்தில் கொமர்ஷல் வங்கியின் மேலும் இரு கிளைகள் புதிதாகத் திறக்கப்படவுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலேயே இந்தப் புதிய இரு கிளைகளும் திறக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே நான்கு கிளைகளுடன் இயங்கி வந்த கொமர்ஷல் வங்கி தற்போது 12 கிளைகளைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-236)

## பட்டதாரிகள் நியமனத்துக்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஜூலை 29

நாடளாவிய ரீதியில் பட்டதாரி நியமனம் குறித்து அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று வடக்கு, கிழக்கு பட்டதாரிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

வரவு-செலவுத் திட்ட அறிக்கையைத் தொடர்ந்து 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அரச திணைக்களங்களில் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால் 5 மாதங்கள் முடிவுற்ற நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் குறித்து மௌனம் காக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

தற்போது நாடளாவிய ரீதியில் 89 ஆயிரம் பட்டதாரிகள் வேலையற்று உள்ளனர். 200[illegible] ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டு வரையுள்ள பட்டதாரிகள் நியமனத்துக்காகக் காத்திருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது.

1999 ஆம் ஆண்டில் 10 ஆயிரம் பட்டதாரி நியமனமும், 2005 ஆம் ஆண்டில் 40 ஆயிரம் பட்டதாரி நியமனமும் வழங்கப்பட்டு இன்று பல ஆண்டுகள் கழிந்தும் வேலையற்றவர்களின் நிலைமை குறித்துக்கவனம் செலுத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது.(ம-302)

## உடுவில் அ.மி.த.கவுக்கு ரூ.50 ஆயிரம் நிதி உதவி

வலி.வடக்கு,ஜூலை 29

உடுவில்அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் தேவை கருதி ரி.வி, லெமினேற்றிங் இயந்திரம் என்பவற்றைக் கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபா பன்முகப்படுத்திய வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகளை லெமினேற் செய்வதிலும் மற்றும் செயற்பாடுகளுக்கும் இந்தப் பொருள்கள் இன்மையால் மாணவர்கள் சிரமங்களுக்கு ஆளாகி வந்தனர்.

இந்த நிலையில் இந்தப் பொருள்கள் கிடைப்பதால் பாடசாலைச் சமூகம் பெரும் நன்மை அடையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றார்கள். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மனித உரிமை மீறல்கள்; இந்தியாவின் நடவடிக்கை அதிருப்தி

## அந்நாட்டு மகளிர் உரிமை அமைப்புகள் குற்றச்சாட்டு

இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்தியாவின் நடவடிக்கைகள் அதி ருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும், இலங்கையில் அதிகளவில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் அந்த நாட்டின் மகளிர் உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இலங்கை அரசு காலத்துக்கு காலம் வழங்கி வரும் வாக்குறுதிகளில் எந்த வித நம்பிக்கையும் கிடையாது. சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதாக இலங்கை அரசு வழங்கிவரும் வெற்று உறுதிமொழிகளை தொடர்ந்தும் நம்பத் தயாரில்லை எனவும் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்திய அரசின் மௌனம் கண்டனத்துக்குரியது எனவும் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் நியாயம் கிடைப்பதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (வ)

# காலியில் ரின்மீன் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஒப்பந்தம் கைச்சாத்து

காலியில் ரின்மீன் உற்பத்திக்கான தொழிற்சாலையொன்றை அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கடற்றொழில் மற் றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் கைச்சாத்தானது.

இலங்கை மீன் பிடிக் கூட்டுத்தாபனம் மற்றும் -ஹெபி குக்லங்கா பூட்ஸ்- தனியார் நிறுவனம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ள னர்.

ஒரு வருட காலத்துக்கான இந்த ஒப்பந்தத்தின்படி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 90 நாள்களுக்குள் இவ்விரு நிறுவனங்களும் இணைந்து உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக -ஹெபிகுக்லங்கா பூட்ஸ்- தனியார் நிறுவனம் 84 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளமை குறிப்பிடப்படுகிறது. (ற)

**மலிவு விற்பனை**

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள் Sony wega flat (மேல்பட்டன்), TVகள் AR 25"-16000/=, HW,BZ-18000/=, TG21-14000/=, G21Q1-11000/= BOX அம்பிளிபயர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0770440570, 0778449829 R.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி), ஆரம்ப பாடசாலை அருகில் (சீனிப்புளியடி), K.K.S. வீதி, இணுவில்.

**மணமகள் தேவை**

1976 ஆம் ஆண்டு உத்தரம்3, 8 இல் செவ்வாய் மொத்தபாவம் 62 லண்டன் P.R வந்துள்ள உயர்குல மணமகனுக்கு படித்த அழகான மண மகள் தேவை. குறிப்பு, படத்துடன் வரவும். துர்க்கா திருமணசேவை. இல9, சங்கிலியன் வீதி, நல்லூர். 021321 1814, 0778185978

# தமிழக மீனவர்கள் மீது மீண்டும் இலங்கைக் கடற்படை தாக்குதல்

கச்சத்தீவுக் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 4 பேர் பலத்த காயம் அடைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கச்சதீவுக்கு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது இலங்கைக் கடற்படையினர் மீனவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்கு தலில் 4 மீனவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்

நேற்றுக்காலை கரைக்குத் திரும்பிய மேற்படி மீனவர்கள் இதுகுறித்து தமிழக மீன் வளத்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதனிடையே இலங்கைக் கடற்படையினர் தாக்குதலில் காயமடைந்த 4 மீனவர்களும் ராமேஸ்வரம் அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒரு மாதத்துக்கு பின்னர் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை மீண்டும் தாக்குதல் மேற்கொண்டுள்ளமை மீனவர்கள் மத்தியில் பெரும் கொத்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கும் கடற்படையினருக்கும் எந்வித தொடர்பும் இல்லை என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார். (வ)

# கடவுச்சீட்டுப் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்ட ஒன்பது பேர் கைது

கொழும்பு, ஜூலை 29

கடவுச்சீட்டுக்களை விரைவாகப் பெற்றுத்தருவதாகக் கூறி மக்களைத் தவறாக வழி நடத்திய ஒன்பது தரகர்கள் கொழும்பு புஞ்சி பொரளையிலுள்ள குடிவரவு - குடியகல்வு திணைக்களத்துக்கு அருகில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக மேற் கொண்டு வந்த கண்காணிப்பு நடவடிக்கையின் பயனாகவே இந்தத் தரகர்களைக் கைதுசெய்ய முடிந்ததாக குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர்கள் நாய்கம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்:-

மக்களின் அறியாமையை சாதகமாகப் பயன்படுத்தி இத் தகைய ஏமாற்று வேலைகளில் ஈடு படுகின்ற ஒரு மோச டிக் கும்பல் எப்பொழுதும் திணைக்களத்துக்கு அருகில் நடமாடுவதாக அவதானிக்கப்பட்டது. அதனை அடுத்து இவ்வாறான நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு அவர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டதுடன் பொலிஸார் மூலமும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ற)

**INVITATION FOR EXPRESSION OF INTEREST**

**CONSULTANCY SERVICES FOR DEVELOPING A COMPREHENSIVE ENVIRONMENTAL MANAGEMENT MASTER PLAN FOR GENERAL HOSPITAL – VAVUNIYA**

1. The Secretariat – Ministry of Health, Northern Province wishes to call for Expressions of Interests (EOI) from reputed consultancy firms and business ventures capable of developing an *'Environmental Management Master Plan'* (EMMP) for General Hospital – Vavuniya. This effort is supported by UNICEF. Selected consultancy service provider or Consortium of consultancy service providers will develop the blue prints for implement EMMP and it will incorporate following categories of works:
    a) Solid Waste Management
    b) Water Treatment
    c) Waste- Water Management
    d) Sewage Treatment
    e) Energy Conservation
    f) Emission Control
    g) Preliminary Designs and Cost Estimation (BoQs) for above items ( a to f) and
    h) Implementation Plan
2. All Consultancy Service Providers/Consortium of firms with environmental management and engineering background and demonstrated proof of ability to provide both Environmental and Engineering services could apply for this assignment.
3. 'Basic Term of Reference and EOI application documents' in English may be purchased by interested bidders on the submission of a written application on a business letterhead, and upon payment of a non refundable fee of *Sri Lankan Rupees Two Thousand (LKR. 2,000.00)*. The method of payment will be by cash or bank draft drawn in favour of: ***Secretary – Provincial Ministry of Health.***
4. Interested eligible firms may obtain further information from ***Office of the Regional Director of Health Services (RDHS) – Mannar Road, Vavuniya*** on 0242222323.
5. ***Completed EOI applications must be delivered to the address below on or before 14.00hrs Friday August 12th 2011. "EOI – EMMP for General Hospital, Vavuniya"*** should be marked at top left hand corner of the envelop.
6. Only short listed firms will be invited for submission of Technical and Financial Proposals.
7. ***An Applicant Conference will be held at 10.30 hrs Friday, August 5th, 2011 at the District Secretariat Office – Vavuniya and*** a Site visit will be organized immediately after Pre bid meeting.

R.Raveenthiran,
Secretary
Ministry of Health & IM
Northern Province
55, Martin Road, Jaffna

28th July 2011

**உத்தியோகபூர்வ முடிவுகள்** — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 629
திகதி 27/07/2011

சுப்பர் இலக்கம்: 14
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 02 20 40 59

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,371,438.40 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 255 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 516 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 12,858 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 7,395 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 185,655 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 29,738 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 8,415,460.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுப்படியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 10,683,512.00

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம் - WWW.nlb.lk

ஐயப்ப சுவாமி துணை

**காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம்**

திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர

**ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்**

**இரதோற்சவ விழா**

இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை
வசந்த மண்டபப் பூசை - காலை 8.00 மணி
சுவாமி தேர்வீதி உலா -மு.ப. 10 மணி

**தீர்த்தோற்சவம்**

ஆடி அமாவாசைத் தீர்த்தம் 30.07.2011
சனிக்கிழமை
காலை 8.00 மணிக்கு சுவாமி தீர்த்தக் கரைக்கு எழுந்தருளுவார்.

ஐயப்பன் அடியார்கள் அனைவரும் ஆலய உற்சவங்களில் கலந்துகொண்டு ஐயப்பன் அருள்பெறுமாறு வேண்டுகின்றோம்.

அறங்காவலர் திருவிழா உபயகாரர்

விளம்பர அனுசரணை:
**சிறி சிவராம் ரேடர்ஸ்**
248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/5774741)

## கேகாலையில் விபத்து; ஒருவர் பலி

கேகாலை அவிசாவளை பிரதான வீதியின் தெம்பிலியாய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந் துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை லொறி ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த முச்சக்கரவண்டிச் சாரதி அவிசாவளை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த சிறுமி உள்ளிட்ட மூவர் தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### கீரிமலை முந்திய நிலைக்குத் திரும்புமா?

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தம் காவு கொண்ட மக்களுக்கு இரு வருடங்கள் கழித்து ஆடி அமாவாசை தினத்தன்று(நாளை) பொது ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடத்தப்படவுள்ளன.அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கமைய வடமாகாணத்தில் உள்ள முக்கிய சிவன் கோயில்களில் மோட்ச பூசைகள் நடைபெறவுள்ளன.

ஆடி அமாவாசை தினத்தன்று பிதுர்களை நினைந்து, அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது இந்து மதத்தவர்களது வழக்கமாகும்.வடக்கு,கிழக்கில் இந்து மக்கள் மட்டக்களப்பில் அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் தீர்த்தத்திலும், திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம் பாவநாசம் தீர்த்தத்திலும், யாழ்ப்பாணத்தில் கீரிமலை நகுலேஸ்வரம் கண்டகி தீர்த்தத்திலும் நீராடிப் பிதுர்க் கடன்களை நிறைவேற்றுவர்.

வானவியல் கணிப்புப்படி பிதுர் காரகனான சூரியனும், மாதுர் காரகனாகிய சந்திரனும் கடக ராசியில் ஒன்று கூடும் சிறப்பான நாளாக ஆடி அமாவாசை விளங்குகின்றது. எனவே, பிதுராகிய தந்தையையும், மாதுராகிய தாயையும் நினைந்து வணங்கப் பொருத்தமான நாளாக ஆடி அமாவாசை காணப்படுகின்றது.

ஆடி அமாவாசையன்று கீரிமலைக்குச் சென்று, இயற்கை நீரூற்றாக விளங்கும் கண்டகி தீர்த்தத்தில் நீராடி, திருத்தம்பலை எனப்படும் நகுலேச்சரத்தை வணங்கி, அங்கு தீர்த்த யாத்திரைக்காக எழுந்தருளிய மாவிட்டபுரம் கந்தசுவாமி யாரையும் தரிசித்து விட்டுச் செல்வது பலரதும் வழக்கமாகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமியார் தீர்த்தமாடுவதற்காக ஆடி அமாவாசையன்று கீரிமலைக்கு வருவார். இரட்டைத் திருக்கல் மாட்டு வண்டியில் அழகிய சோடனைகளுடன் அவர் தீர்த்தமாடப் புறப்படுவது கண் கொள்ளாக் காட்சியாகும். மாவிட்டபுரம் சின்னண்ணையின் மாட்டு வண்டியில்தான் சுவாமியின் யாத்திரை செல்வது வழக்கமாக இருந்தது.அவரும் சில வருடங்களுக்கு முன்னர் அமரராகிவிட்டார்.

மாவிட்டபுரத்துக்கும் கீரிமலைக்கும் சரித்திர காலத்திலிருந்தே தொடர்புகள் இருந்துள்ளன. நகுலமுனிவர் கீரிமுகம் நீங்கப்பெற்ற இடம் கீரிமலை என்பது ஐதீகம். அதேபோல குன்ம நோயினால் பாதிக்கப்பட்ட சோழ இளவரசியான மாருதப்புரவீக வல்லி கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப் பெற்றதாகவும், அவ்வேளை கதிரமலையை ஆண்ட உக்கிரசிங்க மன்னன் அவளைத் திருமணம் செய்து கொண்டதாகவும் யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் நூலில் இது தொடர்பான மேலதிக தகவல்களை அறியலாம்.

மாருதப்புரவீகவல்லி கேட்டுக் கொண்டதற்கிணங்க உக்கிரசிங்கன் மாவிட்டபுரத்தைக் கட்டுவித்தான். அங்கு கடமையாற்றுவதற்காக இந்தியாவில் அரச அந்தணர்களாக விளங்கியவர்களை இங்கு கொண்டு வந்து குடியமர்த்தி, நித்திய பூஜைகள், உற்சவங்கள் சிறப்புற நடைபெற வழிவகுத்தான். அதனால்தான் மாவையாதீன குருக்கள் மஹாராஜஸ்ரீ எனவும், நகுலேச்சர ஆதீன குருக்கள் ராஜராஜஸ்ரீ எனவும் அடைமொழியிடப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

கீரிமலை நகுலேஸ்வரமும் நளன், முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலான பல அரசர்கள் வந்து வணங்கிய இடமெனவும், விஜயபாகு மன்னன் திருப்பணிகளைச் செய்வித்தான் எனவும் வரலாறு கூறுகின்றது. நீண்ட காலமாகத் தலயாத்திரை செய்வோரின் பிரதான மையமாகக் கீரிமலை விளங்கியுள்ளது. அங்கு காணப்பட்ட மடங்கள் வருவோரை ஆதரித்தன. இன்று அந்த மடங்கள் அனைத்தும் அழிந்து போயுள்ளன.சில மடங்கள் இடித்தழிக்கப்பட்டுவிட்டன.

கீரிமலையின் சூழலும் பழைய நிலைக்குப் பொலிவடைய இன்னும் எத்தனை காலம் செல்லுமோ...? அதற்குள்ளும் திணிப்புகள் சுழல் வீச்சுகள் வராதிருக்கப் பார்த்துக் கொள்வது அவசியம்.

ஆடி அமாவாசையென்றால் காத்தோட்டிக் காயும் ஞாபகத்துக்கு வரும். மிகவும் கசப்பான காத்தோட்டிக் காய் பச்சை நிறமான சிறிய காயாகும். பற்றைகள் சூழ்ந்த பகுதிகளில் கொடியாக வளரும்.சோறு கறியுடன் காத்தோட்டிக் காயையும் வெட்டிப் பொரித்து பிதுர்களுக்குப் படைப்பார்கள்.

ஆடி அமாவாசை தினத்தில் வன்னியில் யாருமற்ற அனாதைகளாய் தெருத் தெருவாய் மடிந்து போன, அடக்கம் கூடச் செய்ய முடியாத அவலத்துள் சிக்கிய மக்களை நெஞ்சுருக நினைந்து அவரது ஆத்ம ஈடேற்றத்துக்குப் பிரார்த்திப்போமாக.

விழிச்சான் குஞ்சு.

# சொந்த இடங்களுக்குத் திரும்பும் இடம்பெயர்ந்தோரை வாக்காளர்களாகப் பதிவுசெய்யுமாறு வேண்டுகோள்

## தேர்தல் ஆணையாளரிடம் தமிழ்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 29

இந்தியாவில் உள்ள ஈழ அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கும், வடக்கு, கிழக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களில் 2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் உள்ளவர்களேயே மீளவும் பதிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் ஏனைய தமிழ்க் கட்சிகளினாலும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.


2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கை தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக் இடையிலான கலந்துரையாடல் இராஜகிரியவில் உள்ள தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன்போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சம்பூர் பிரதேச மக்கள் அந்தப் பிரதேசத்து வாக்காளர்களாகப் பதிவு செய்ய வேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப் படாத பிரதேசங்களில் 2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் உள்ளவர்களேயே மீளவும் பதிவு செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரிக்கையை முன்வைத்தார்.

இதில் மக்கள் மீளக்குடியமராத பிரதேசங்களில் பழைய வாக்காளர் இடாப்பின் படியே பெயர்கள் பதிவு செய்யப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் வாக்காளர்களாக பதிவு செய்யுமாறும், புத்தளத்தில் உள்ள முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கும் தமிழ்க் கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தேர்தல் ஆணையார் தனது சட்ட வரம்புக்கு உட்பட்ட விடயங்களையே தன்னால் செய்ய முடியும் என்றும் இது தொடர்பான சட்ட மூலத் திருத்தம் நாடாளுமன்றத்தால் கொண்டுவரப்பட்டால்தான் அதன் பிரகாரம் மேற்படி இந்தக் கோரிக்கைகளை ஆராயலாம் என்று தெரிவித்தார். (ச-15)



மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பில் உண்மையான தகவல்களின் ஆய்வு குறித்துத் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஜனாதிபதியிடம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வழங்குகின்றார். அருகில் பிரதமர் டி.எம் ஜயரத்ன காணப்படுகின்றார்.

## துப்பாக்கி முனையில் கொள்ளை

கொழும்பு, ஜூலை 29

மாராவில, ஹத்தினிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில் பணம் மற்றும் பல லட்சம் பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மாராவில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது. மின்சாரசபையின் மின்மாணி வாசிப்பாளர் போன்று வான் ஒன்றில் சென்ற வந்த நான்கு பேர் மாராவில ஹத்தினிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நுழைந்து அந்த வீட்டிலிருந்தோரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளனர். அத்துடன் எட்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் பணம் மற்றும் பல இலட்சம் பெறுமதியான தங்க நகைகளையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக மாராவில பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# உயர்தரப் பரீட்சார்த்திகளுக்கு இலவச பஸ் பிரயாணத் திட்டம்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நிராகரிப்பு

கொழும்பு,ஜூலை 29

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மட்ட மாணவர்களுக்கு இலவச பயணம் என்ற அரசின் அறிவித்தலை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குத் தகவல் அளித்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, தனியார் பஸ்களிலும் இந்த மாணவர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்யமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

பஸ்களில் பயணிக்கும்போது பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அடையாள அட்டையை மாத்திரம் பஸ் நடத்துநனரிடம் காண்பிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் தமக்கும் இது தொடர்பில் எவ்வித உடன்பாடுகளும் இல்லை என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் போது மேல் மாகாண மாணவர்களுக்கு மாத்திரம் இந்தச் சலுகை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## லஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரி இடைநீக்கம்

கொழும்பு,ஜூலை29

போதைப் பொருள் வர்த்தகர் ஒருவரிடம் லஞ்சம் பெற்றுக் கொண்ட பொலிஸ் அதிகாரி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஹங்வெல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட நபரிடமிருந்து இந்தப் பொலிஸ் அதிகாரி 35 லட்சம் ரூபா கப்பமாகப் பெற்றுக் கொண்டுள்ளார் என நுகேகொடை பொலிஸ் வலயத்திற்கு உட்பட்ட சிரேஸ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.(ச)

# சர்வதேச ரீதியில் அழுத்தம் இல்லையேல் முன்கூட்டியே யுத்தத்தை முடித்திருப்போம்

## ஜேர்மனிக்கான இலங்கை பிரதித் தூதர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29

புலிகளுக்கு எதிரான யுத்தத்தை உள்ளக - வெளியக அழுத்தங்களின் காரணமாகவே 2009ஆம் ஆண்டு வரை நீடிக்க நேரிட்டது எனவும், இல்லையேல் அதை முன்கூட்டியே முடித்திருக்கலாம் எனவும் ஜேர்மனிக்கான இலங்கைப் பிரதித் தூதுவர் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித்துள்ளார்.

பரிஸிற்கான இலங்கைத் தூதரகத்திற்கு சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வலுவான தலைமைத்துவத் [illegible]ல் இலகுவாக வெற்றி பெற முடிந்தது.

ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக் காரணமாகவே, மிக நீண்ட காலமாக நீடித்து வந்த பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது- என்றார்.

ஜகத் டயஸ் 57ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் போக்குவரத்து நெருக்கடியில் நெடுங்கேணி ஒதியமலை கிராம மக்கள்


வவுனியா, ஜூலை 29

வவுனியா மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள ஒதியமலைக் கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் சுமார் 30 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்களுக்கு அருகில் பெரும்பான்மையின மக்கள்வசிக்கின்றனர். இதனால் அந்தப் பகுதி மக்கள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகி வந்துள்ளனர். கடந்த யுத்தத்தின்போது இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர். தமது உடைமைகள் அனைத்தையும் இவர்கள் இழந்து வெறுங்கைகளுடன் இடம் பெயர்ந்து சென்று மீண்டும் குடியமர்ந்துள்ளனர்.

இவர்களின் முக்கிய தொழிலாக விவசாயமே உள்ளது. இதற்கான இடு பொருள்கள், கிருமி நாசினிகள் என்பவற்றை இந்தக் கிராமத்தில் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது. இதனால் இவர்கள் இவற்றைப் பெறுவதற்கு வவுனியாவுக்கே செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

மேலும் தமக்குரிய அன்றாட தேவைப் பொருள்களை வாங்குவதற்கு பல கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நெடுங்கேணிக்குச் செல்ல வேண்டும். ஆனால், இந்தப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்காக நடைபெறாமையால் இந்த மக்கள் மிகுந்த சிரமங்களை அனுபவிக்கின்றனர்.நொந்த நிலையிலுள்ள தம்மை மென்மேலும் சிரமத்தில் தள்ளாது தமக்கான போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்காக நடத்துமாறு இவர்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## யோகபுரத்துக்கு யோகம்...



திறமைக்குப் பரிசு:மேற்பிரிவுக்கான பேச்சுப்போட்டியில் மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்ற யோகபுரம் மகாவித்தியாலய மாணவி லோகநாதன் யுகாசா பாடசாலை அதிபர், உப அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன். (425)

## அழிந்தது மஞ்சள் கோடு

வவுனியா, ஜூலை 29

வவுனியா ரயில் நிலைய வீதியில் 100 மீற்றர் உள்வாங்கி அமைந்துள்ள சத்தியசாயி பாபா நிலையத்துக்குச் செல்லும் வீதியில் பொறிக்கப்பட்ட மஞ்சள் கோடு அழிந்துள்ளதால் வாகனச் சாரதிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மேலும் முன்பிருந்த மஞ்சள்கோடு இருந்த ஞாபகத்தில் பொதுமக்கள் வீதியைக் கடக்க முயற்சி செய்யும்போது வாகனங்கள் வேகமாகச் செல்ல முற்படுகின்றன. இதனால் ஆபத்துக்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

எனவே, அழிந்த நிலையில் காணப்படும் மஞ்சள் கோட்டை மீளவும் அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-ரி)

# முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுகள் சிறார்களால் மறக்க முடியாதவை

## வன்னிப் பிராந்திய குருமுதல்வர் தெரிவிப்பு

அக்கராயன், ஜூலை 29

முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுகள் சிறார்களின் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்து விடுகின்றன.

இவ்வாறு வன்னிப் பிராந்திய குரு முதல்வர் டி.எஸ் குகணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி,அக்கராயன் சமாதானபுரம் அமெரிக்கன் இலங்கை மிஷன் முன்பள்ளியின் வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாளில் சிறப்பான விளையாட்டுப் போட்டி ஒன்றினை முன்பள்ளி ஆசிரியர்களும் முகாமையாளரும் நடத்தி முடித்துள்ளனர்.

இந்த முன்பள்ளி நீண்ட காலமாக இயங்கி வருகிறது. போர்க்காலம், இடப்பெயர்வு என்பவற்றுக்குப் பின்பு முதல் தடவையாக இந்தப்போட்டி நடைபெற்றுள்ளது.

இந்தப்போட்டி நிகழ்வின் மூலம் முன்பள்ளியின் வளர்ச்சி நன்கு தெரிகிறது.

சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் எங்களுக்கும் ஏனையோருக்கும் சாதாரண நிகழ்வாக இருந்தாலும் அடுத்த ஆண்டு தரம் ஒன்றுக்குச் செல்லும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மறக்கமுடியாத மகிழ்ச்சியான நிகழ்வாகும்.

எதிர்காலக் கல்வி முயற்சிகளுக்கு முன்பள்ளிக் கல்வியும் விளையாட்டும் சிறார்களை வளப்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்பள்ளியின் முகாமையாளர் அருட்திரு எஸ்.ஜெயானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மெதடிஸ்த திருச்சபையின் அருட்திரு எஸ். பிரின்சன், அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் த.கண்ணபிரான், கணக்காய்வாளர் ரி.யூதராஜ், அயல் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறார்களுக்குப் பரிசுப் பொருள்கள் சான்றிதழ்கள் என்பவற்றை வழங்கினர். (க-102)


## உள்ளம் கனிந்த நன்றிகள்

உள்ளூராட்சி அதிகார சபை தேர்தல் - 2011

துவேஷம்! ஆவேஷம்!! பழிவாங்கல்!!!

ஆகிய உணர்வூட்டல்கள் மத்தியில்
இணக்கப்பாட்டுடனான அபிவிருத்தி என்ற
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின்
இன்றைய தேவையை முதன்மையாக்கி
வெற்றிலைச் சின்னத்திற்கு
வாக்களித்த வாக்காளப் பெருந்தகைகளே

தேடல் ! அறிதல்!! செய்தல்!!!



ஆகிய செயலூட்டல் மூலம்
வலிதென்மேற்கு பிரதேசத்தின்
உள்ளூராட்சி அதிகார சபைக்கு
என்னையும் வெற்றி பெறச் செய்த
தங்களின் ஆர்வமிக்க வாக்குகளுக்கு
எனது உள்ளம் கனிந்த நன்றிகள்
என்றும் உரித்தாகுக.....
நன்றியுடன்
லயன் S.J.செல்வராஜா.J.P, Mediator
(பல்துறைசார் பொதுச் சேவைப் பங்காளர்)


## யுனிசெப் நிதியுதவியுடனான திட்டங்கள் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்திடம்

வவுனியா, ஜூலை 29

வவுனியா மாவட்டத்தில் யுனிசெவ் நிதியுதவியுடனான திட்டங்களை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இந்த மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் இவற்றுக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாற்றுவலுவுள்ள வறிய குடும்பங்களிலிருந்தும் இவற்றுக்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளது.

சுயதொழில் உதவி நன்கொடை 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு 30 பேரும், மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான போக்குவரத்துக் கொடுப்பனவு ஆயிரத்து ஐநூறு ரூபாவைப் பெறுவதற்கு 34 பேரும், வீடுகளில் உட்பிரவேசிக்கும் வசதி, மலசல கூடத்தில் கொமட் அமைத்தல் போன்றவற்றுக்கு 40 ஆயிரம் ரூபா பெறுவதற்க எட்டுப்பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலர்களின் பணிப்பின் பேரில் சமூக சேவை அதிகாரிகள் உரிய கிராம அலுவலர்களுடன் இணைந்து தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்துள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டதும் இவை உரியமுறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்று சமூக சேவை அதிகாரிகள் மேற்பார்வை செய்வதோடும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-121)


## மனமார்ந்த நன்றிகள்

பருத்தித்துறை பிரதேச சபை - 2011



இன்றைய நிலையை உணர்ந்து தமிழ் இன உணர்வோடு கூட்டமைப்புக்கு வாக்களித்து அமோக வெற்றியை ஈட்டித் தந்ததுடன் எனக்கும் அதிக விருப்பு வாக்குகளை அளித்த என் அன்புக்குரிய வடமராட்சிப் பிரதேச மக்களுக்கும் அன்புக்குரிய மாணவர்களுக்கும் கலவிச் சமூகத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

பொருளியல் ஆசான் M. லோகசிங்கம்
வராத்துப்பளை, பருத்தித்துறை.

(6288)



## இலங்கையில் முதலாவது மற்றும் ஒரே ஒரு தலைமுடியியல் நிபுணத்துவ சிகிச்சை நிலையம் இதுவே

VCare இன்Dr.Hair ல் DR.HAIR V Care (Pvt) Ltd.

தலைமுடி உதிர்தல்,ஆண்,பெண் வழுக்கை, பொடுகு,இளநரை,புழு வெட்டு,Psoriasis போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் இலங்கை இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.




எதிர்வரும் 30,31 ஆகிய திகதிகளில் யாழ் கிளையிலும் ஓகஸ்ட் 3,4 ஆம் திகதிகளில் வவுனியாவிலும் பிரபல தலைமுடியியல் நிபுணர்களின் நேரடி ஆலோசனை நடைபெறவுள்ளது. முற்பதிவுகளுக்கு: 021 2220288

21,Frazerr Avenue,Dehiwala. Phone:011 4874854,2735715
162/5,Jaffna Road, Vavuiya.Tel: 024 4924940
26,Brown Road, Jaffna.021 2220288



## சேவை நலன் பாராட்டு

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தில்
கடந்த எட்டு ஆண்டு காலமாக மாகாணப்
பணிப்பாளராகக் கடமையாற்றி
ஒய்வு பெற்றுச் செல்லும்

**திரு.இ.விஸ்வலிங்கம்**
B.Sc.(Phy)Hons



அவர்களின் சேவையை மனமாரப்
பாராட்டி
வாழ்த்துவதோடு அவர் சீரும்
சிறப்புடனும்
பல்லாண்டு காலம் வாழ
உளம் நிறைந்து
வாழ்த்துகின்றோம்!
வாழ்க உங்கள் சேவை!
வளர்க உங்கள் புகழ்!

உத்தியோகத்தர்கள்,
தொழிற்றுறைத் திணைக்களம்,
வடமாகாணம்.

(6270)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் வாரமும் கண்காட்சியும் வவுனியாவில் ஐந்து தினங்கள்

மன்னார், ஜூலை 29

வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையில் தேசிய விவசாயிகள் வாரமும் கமத்தொழில் கண்காட்சியும் அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் சிறப்பான செயற்பணியின் ஓர் அங்கமான உள்ளூர் உணவு உற்பத்தியையும் நுகர்வையும் ஊக்குவிக்கும் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதிவரை இவை நடைபெறவிருக்கின்றன.




விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் அழைப்பின் பேரில் பிரதம மந்திரி டி.எம். ஜயரத்தின அடுத்த மாதம் முதலாம் திகதி இதனை ஆரம்பித்துவைப்பார்.

அன்றைய தினம் விவசாயிகள் கௌரவிப்புச் செய்யப்படும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இரண்டாம் நாள் இளைஞர், தொழில் முயற்சியாளர் தின நிகழ்வுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவிருக்கின்றன. மூன்றாம் நாள் விவசாயக் கல்வி தின நிகழ்வுகள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலும் நான்காம் நாள் விவசாய தொழில் உற்பத்திக்கும் விவசாயிகள் கருத்தரங்குக்குமான நிகழ்வுகள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலும் இறுதி நாள் நிகழ்வுகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலும் நடைபெறவிருக்கின்றன. அன்றையதினம் உணவு ஊக்குவிப்பு தொடர்பானநிகழ்வுகள்இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-601)

## புனித அன்னம்மாள் ஆலய பெருவிழா



மன்னார், ஜூலை 29

மன்னார், வங்காலை புனித அன்னம்மாள் ஆலயப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

காலை 6.15 மணிக்கு மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் திரு அன்ரனி விக்டர் சோசை தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெற்றது.

(க-601)

## வவுனியா சிறைச்சாலை கைதிகளுக்கிடையில் அதிகரித்த போதைப்பொருள் பாவனை

வவுனியா, ஜூலை 29

வவுனியா சிறைச்சாலையினுள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கிடையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சிறைச்சாலையினுள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் சிலரே போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி மோசமான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் பலர் போதைப் பொருளை உட்கொண்ட நிலையில் சிறைச்சாலையினுள் சுய நினைவற்ற நிலையில் விழுந்து கிடப்பதாகவும் தெரியவந்துள்ளது.

ஒருசிலர் வாந்தி எடுத்த நிலையில் காணப்படுகின்றனர். சிலர் சுயநினைவற்ற நிலையில் வேண்டத் தகாத செயல்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-601)

## ஆலயத் திருவிழாக்கள்

மன்னார் மடுக்கரை அளவக்கை புனித அருளாளர் யோசேவாஸ் ஆலயத் திருவிழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை தலைமையில் காலை 7.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.இதேவேளை மன்னார் முருங்கன் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாத் திருப்பலி அடுத்தமாதம் இரண்டாம் திகதி காலை இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-601)

## இதுவுமொரு விதியோ...?



விடிவு விரைவில் கிடைக்கட்டும்:முல்லைத்தீவு மாவட்டம் யோகபுரம் மகா வித்தியாலயத்தின் வகுப்பறைகள் கடந்த யுத்தத்தால் மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. *(425)*

## இறுதிப்போரில் உயிர் நீத்தவர்களுக்கு நாளை கிளிநொச்சியில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சியில் 25 இந்து ஆலயங்களில் ஆடி அமாவாசை தினத்தன்று மோட்ச அர்ச்சனையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வேண்டுகோளின் பிரகாரம் வடக்கு மாகாண ஆளுநர் இதற்கான பணிப்பை விடுத்துள்ளார்.

வடக்கில் நடந்து முடிந்த யுத்தத்தின்போது உயிர் நீத்த சகல உறவுகளினதும் ஆத்ம சாந்திக்காகவே இவை நடைபெறவுள்ளன.

இதற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முக்கிய சிவாலயங்களான உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் தேவஸ்தானம், ஜெயந்திநகர் மகாதேவ சிவனாலயம், இரணைமடு சிவலிங்கேஸ்வரர் தேவஸ்தானம், கிருஷ்ணபுரம் கமலாம்பிகை சமேத தாயுமானேஸ்வரர் சிவன் ஆலயம், புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் உட்பட 25 ஆலயங்களில் மோட்ச அர்ச்சனையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் ஆடி அமாவாசை தினமான நாளை மு.ப. 10 மணிக்கு நடை பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாணக் கலாசார உத்தியோகத்தரின் ஆலோசானைக்கு அமைய வலயக் கல்வி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

மேலும் இராமகிருஷ்ண மிஷன் இந்த நிகழ்வுகளுக்கான அனுசரணையை வழங்கவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

இதைப்போன்றே வன்னியின் ஏனைய மாவட்டங்களிலும் இத்தகைய நிகழ்வுகள் நடைபெறவிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

(க-405)

# சிறுவர்களை துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம்

## கிளி,முல்லை.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சிப் பகுதியில் 15 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் களுவத்தை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான விழிப்பூட்டல் செயலமர்வு ஒன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

இந்தப் பகுதியில் இடம் பெற்ற பாலியல் துஷ்பிரயோகங்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களாலேயே இடம் பெற்றுள்ளன.

எதிர்காலத்தில் இவ்வாறான துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதுடன் வளமான ஓர் எதிர்காலத்தையும் உருவாக்க வேண்டிய பொறுப்பு எல்லோரிடத்திலும் இருக்கின்றது.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுவர்களுக்கு உதவி செய்வதாகக் கூறி வந்த நிறுவனத்தின் பணியாளர் ஒருவரால் அந்தப் பகுதியில் உள்ள சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ஆகவே, பெற்றோர், பாதுகாவலர் சிறுவர்களை மிக அவதானமாகக் கவனித்துத் துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாக்க வேண்டும்- என்றார்.

(எ-6)

## பதவி உயர்வு பெற்ற அதிபருக்கு கௌரவிப்பு

மன்னார், ஜூலை 29

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியக் கல்லூரியில் கடந்த 17 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி தற்போது பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள அருட் சகோதரர் ஜெ.ஸ்ரனிஸ்லஸ் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் இரண்டாம் திகதி பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

(ம-601)

## ஒட்டுசுட்டான் ஆலய திருவிழாவில் பணம், நகைகள் திருட்டு

முல்லைத்தீவு, ஜூலை 29

நடந்துமுடிந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழாவின்போது நகை, பணம் என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்த்திருவிழாவன்று ஒரு பெண்மணியின் எட்டாயிரம் ரூபா பணம், தேசிய அடையாள அட்டை, வங்கிப் புத்தகம் அடங்கியிருந்த கைப்பை களவாடப்பட்டுள்ளது. பின்னர் கைப்பை பணமில்லாது ஏனைய ஆவணங்களுடன் வீசப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது. வேறொரு பெண்ணின் தாலிக்கொடியும் இன்னொருவரின் கைச்சங்கிலியும் திருடப்பட்டுள்ளன.

பொலிஸார் இறுக்கமான பாதுகாப்பை வழங்கியிருந்த போதிலும் பட்டப்பகல்வேளையில் இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றமை பொதுமக்களிடையே ஆச்சரியத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

# அனர்த்த நிவாரணக் குழுக்கள்

பூநகரி, ஜூலை 29

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தற்போது அனர்த்த நிவாரண முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் சமூக சேவைகள் அதிகாரி எஸ்.சுஜித் கிராம அலுவலர்களின் ஒத்துழைப்பைப் பெற்று இந்தக் குழுக்களை அமைத்து வருகின்றார்.

ஒக்ஸ்பாம் - பிரித்தானியா எனும் தொண்டு நிறுவனம் இந்த வருடம் மே மாதம் இது தொடர்பான பயிற்சியை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தது. இதில் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் சமூக சேவைகள் அதிகாரி எஸ்.சுஜித் கலந்து கொண்டிருந்தார்.

தற்போது அமைக்கப்படும் இந்தக் குழுக்களின் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் உதவி வருகின்றது. ஒக்ஸ்பாம் நிறுவனத்துக்கு வளவாளராகக் கடமையாற்றும் அனர்த்த முகாமைத்துவ நிபுணர் எஸ். மரியதாசன் அவர்களும் மிக விரைவில் பூநகரிக்கு வருகை தந்து இந்தக் குழுக்களின் செயற்பாட்டுக்கு உதவவுள்ளார்.(க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
29 ஜூலை 2011 வெள்

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். நண்பர்கள் அல்லது சக ஊழியர்கள், உங்களிடம் கடனாக வாங்கிய பணத்தை திருப்பித் தரலாம். அனுபவமிக்க ஒருவரின் ஆலோசனைக் கேட்டு செயற்பட முற்படுவீர்கள். அரசியல்வாதிகள் விமர்சனங்களைத் தவிர்க்க வேண்டும். சந்தோஷமான செய்திக் கேட்கலாம்.

**இடபம்:**
வழக்கமாகச் செய்து வரும் வேலை ஒன்றில், இன்று திடீரென தடை ஏற்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். அவசரச் செலவு ஒன்றை சமாளிக்க பிறரிடம் கடனுதவி கேட்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

**மிதுனம்:**
மற்றவர்களின் தயவை எதிர்பாராமல், எல்லா வேலைகளையும் நீங்களே செய்ய முற்படுவீர்கள். உடன் பிறப்புக்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம். உறவினர்கள் ஒருவர் நீங்கள் கேட்ட உதவியைச் செய்யலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். உங்களுக்காக மற்றவர்கள் சிலர் செலவு செய்யலாம்.

**கடகம்:**
மனதைப் பாதித்த சில விடயங்களை மறக்க முடியாமல் தவிக்கலாம். நீங்கள் நல்லது செய்ய முற்பட்டும், சிலர் உங்களை தவறாகப் புரிந்து கொள்ளலாம். வேலையாள்கள் கடனுதவி, பண உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம்.

**சிங்கம்:**
வீண் பழிகள் விலகி, பாராட்டுக்களைப் பெறுவீர்கள். தொழிலில் கூட்டாளிகளிடம் அனுசரணை அவசியம். அதிக நேரம் காத்திருக்க நேரிடும் என நினைத்த காரியம் ஒன்று, குறைந்த நேரத்தில் முடியலாம். பொழுது போக்கு விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

**கன்னி:**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். நண்பர்கள் தொடர்பான விடயங்களில், பட்டும் படாமல் நடந்து கொள்வீர்கள். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். தொழில் ரீதியாக புதிய அனுபவங்களைப் பெறலாம். தம்பதியர் இடையே, அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நல்ல செய்தி கேட்கலாம்.

**துலாம்:**
வீண் பயத்தைத் தவிர்த்து, எதிலும் தைரியமாகச் செயற்பட வேண்டிய நாள். பெற்றோர்கள் உங்களிடம் அதிக பாசமாக நடந்து கொள்வர். சிறு உடல் உபாதைகளைச் சந்திக்கலாம். ஒரு உறவினரைப்பற்றி, மற்றொரு உறவினரிடம் விமர்சித்துப் பேசுவீர்கள். சகோதரிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, எரிச்சல் உண்டாக்கலாம். ஆறுதலான நாள்.

**விருச்சிகம்:**
சில வேலைகளில் வேகமாக இறங்கி விட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். குடும்ப விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வதைத் தவிர்க்கவும். பிள்ளைகள் வழியில், எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் உங்களை பரிகாசம் செய்யலாம். எளிதில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று, நீண்ட நேரம் இழுத்தடிக்கலாம்.

**தனுசு:**
பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். தொல்லைக் கொடுத்த சிலரே தோள் கொடுக்க முன்வருவர். குடும்ப உறுப்பினர்கள் சிலரின் பிடிவாதமான செயற்பாடுகளைக் கண்டுகோபம் அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.


**மகரம்:**
எந்த வேலையையும் நாளை என, பிற்போட்டு வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். சிலரிடம் கலகலப்பாகப் பேசி, அவர்களின் ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களிடம் தொலைபேசியில் பேசலாம். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகளைப் பெறலாம்.

**கும்பம்:**
சில வழிகளில் தண்டச் செலவுகளை அல்லது சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் கூடும். இஷ்ட தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**மீனம்:**
கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். உங்களை கண்டு கொள்ளாமல் இருந்த ஒருவர், இன்று உதவி நாடி வரலாம். பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். நீண்ட நாள்களாக பார்க்காத உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

# அரசியல் மாற்றத் தமிழரி ஆணை

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு பல நாடுகளி
வெளியாகியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்



இலங்கையின் வடக்குப் பகுதியில் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சிறியதொரு தேர்தலாக இருந்தபோதிலும் தற்போது அது பெரும் முக்கியத்துவம் மிக்கதாகவும், பெறுமதி மிக்க குறியீடாகவும் உள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற பகுதியில் உள்ள இருபது உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

இலங்கையைத் தற்போது ஆளும் மஹிந்த அரசின் கைகளில் வட பகுதிக்கான அதிகாரம் அனைத்தும் குவிந்துள்ளன எனினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய வட பகுதி மாவட்டங்களில் யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப் பட்டுவரும் அரசின் அபிவிருத்தி மற்றும் இணக்கப் பாட்டு முயற்சிகளுக்கான முதலாவது மக்கள் கருத்து வாக்கெடுப்பாகவே தற்போது நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சித் தேர்தல் அமைந்துள்ளது.

**தெளிவான மக்கள் விருப்பம்**

இந்தத் தேர்தல் தொடர்பான பெறுபேறுகள் வெளிவந்த போது மக்களின் விருப்பம் எது என்பதும் தெளிவாகியுள்ளது.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் ராஜபக்ஷவுக்கான ஆதரவு குறையாத போதிலும் வடக்குப் பகுதியில் இந்த ஆதரவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இலங்கை அரச படைகளால் தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த, இலங்கை நாடாளுமன்றின் எதிர்க்கட்சி ஆசனத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது நடந்து முடிந்த வடக்குக்கான 20 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 17 ஆசனங்களையும், ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்று ஆசனங்களையும் பெற்றுள்ளன.

ஜூலை 23 அன்று தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 45 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் வாழும் மக்கள் தமது விருப்பத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பமாக இத்தேர்தல் அமைந்துள்ளது எனக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் சூசைப்பிள்ளை கீதபொன்கலன் தெரிவித்துள்ளார்.

**வடக்கில் எஞ்சியுள்ள யுத்தத்தின் அழிவுகள்**

25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த இலங்கையின் உள்நாட்டுப் போரானது மே 2009 இல் முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் வடபகுதியின் மூன்று மாவட்டங்களிலும் யுத்தத்தின் அழிவுகள் எஞ்சிக்காணப்படுகின்றன.

இலங்கையின் வடபகுதியில் பெரும் எண்ணிக்கையில் வாழும் தமிழ்ச் சிறுபான்மை மக்களுக்காக தனிநாடு வேண்டிப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது முற்று முழுதாக அழிக்கப்பட்டனர்.

இந்த யுத்தத்தில் அகப்பட்டுக் கொண்ட 300,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தமது வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்தனர். எண்ணுக் கணக்கற்ற மக்கள் இந்தப் போரின் போது கொல்லப்பட்டனர் மற்றும் காயங்களுக்கு உள்ளாகினர்.

> **குருதி தோய்ந்த யுத்தத்தின் பாதிப்புக்களைச் சுமந்துள்ள சிறுபான்மைத் தமிழர்கள் சிறந்த தேசிய ஒருமைப்பாட்டை அடைந்து கொள்வதற்கு அதிகார மாற்றம் என்பது மிக இன்றியமையாத ஒன்று. இதனை உணர்ந்து கொண்டு தமது ஆணையை வழங்கியுள்ளார்கள்.**

2009 இன் இறுதிப் பகுதியில், இடம்பெயர்ந்தோர் முகாங்களில் வாழ்ந்த மக்களை இலங்கை அரசு மீளக் குடியமர்த்த ஆரம்பித்தது. தற்போது 10,000 மக்கள் மட்டுமே முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் இடம்பெற்ற வன்னிப் பகுதியில் இலங்கை அரசு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. வடக்குப் பகுதியை ஊடறுத்துச் செல்லும் ஏ-09 நெடுஞ்சாலை செப்பனிடப்பட்டு வருகிறது. மின்சார வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள 80 வீதமான பயிர்செய்கை நிலங்கள் மீளவும் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து இலங்கை அரசு பல்வேறு கடன் திட்டங்களுக்குக் கீழ் வடபகுதியில் 42 மில்லியன் டொலர் பெறுமதியான நிதியைச் செலவிட்டுள்ளது என மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைய மாதங்களில் இலங்கைத் தீவில் அதிகம் கடன் திட்டங்கள் வழங்கப்படும் இடமாக வடக்குப் பகுதி அமைந்துள்ளது எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**வாழ்வைக் கழிக்க பிரயத்தனப்படும் மக்கள்**

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் வன்னி மக்கள் தமது நாளாந்த வாழ்வை கழிப்பதில் பெரும் பிரயத்தனத்தை எதிர்கொள்கின்றனர்.

யுத்தத்தின் பின் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பிய மக்களில் 63 வீதமானோர் நாளொன்றுக்கு ஒரு டொலரைக் கூடச் செலவழிக்க முடியாதவர்களாக உள்ளனர். அத்துடன், 20 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் இராணுவ நடமாட்டங்கள் அதிகம் காணப்படுவதுடன், இங்கு வாழும் மக்கள் மிக மெதுவாகவே இயல்பு நிலைக்குத் திரும்புவது போல் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல்
# த்துக்கே
# ரின்
# ன!

ல நாடுகளில் வெளியாகும் ரைம் சஞ்சிகையில்
ம்



### அபிவிருத்தியை வைத்து தேர்தல் பிரசாரம்

அரசின் தேர்தல் பரப்புரை அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இங்கு வாழும் தமிழ் மக்கள் தமக்கு எது தேவை என்பதை தாம் வழங்கிய வாக்குகள் மூலம் காட்டியுள்ளனர் என யாழ். மாவட்டத்துக்கான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

வட பிராந்தியத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் தமது ஆதரவுகளை வழங்கியதன் மூலம் மக்கள் தமது ஆணையை வழங்கியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குருதி தோய்ந்த யுத்தத்தின் பாதிப்புக்களைச் சுமந்துள்ள சிறுபான்மைத் தமிழர்கள் சிறந்த தேசிய ஒருமைப்பாட்டை அடைந்து கொள்வதற்கு அதிகார மாற்றம் என்பது மிக இன்றியமையாத ஒன்று. இதனை உணர்ந்து கொண்டு தமது ஆணையை வழங்கியுள்ளார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய சங்கம் போன்ற வலுமிக்க அனைத்துலக அதிகார சக்திகள், இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் அதிகாரப் பகிர்வு என்பது தேவைப்பாடுடைய ஒன்றாகும் எனவும், இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்த மீறல்கள் தொடர்பான அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள யுத்த மீறல்களை இலங்கை அரசு மறுத்துள்ளது. இலங்கை அரசானது வடக்கில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வென்றிருக்குமானால், தன் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்துலக அழுத்தங்களை முறியடிப்பதற்கான கருவியாக இத்தேர்தல் வெற்றியை பயன்படுத்தியிருக்கும் என பேராசிரியர் கீதபொன்கலன் தெரிவித்துள்ளார்.

ஆனால், தேர்தல் வெற்றி இலங்கை அரசுக்குச் சாதகமாக அமையாததால், அனைத்துலகத்தை தனது பக்கம் கவருவதற்கான வேறு முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொள்ளலாம் எனவும் பேராசிரியர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அதிகாரப் பரவலாக்கத்தில் உறுதியாகவுள்ள இந்தியா

யுத்த காலப்பகுதியில் இலங்கைக்கு மிகப் பக்க பலமாக இருந்த இந்தியா தற்போது அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பது ஆச்சரியமான விடயமாகும்.

கடந்த ஜூனில் கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் மற்றும் பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் ஆகியோர் அதிகாரப் பகிர்வு தொடர்பாக இலங்கை அரச அதிகாரிகளுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

2006 தொடக்கம் 2009 வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் உள்நாட்டு இறுதி யுத்தத்தின் போது, இலங்கை மீது மெற்கொள்ளப்பட்ட அனைத்துலக சமூகத்தினது அழுத்தங்களை ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் எதிர்த்து நின்றன. இதில் ரஷ்யா, சீனா ஆகிய இரண்டும் தமது ஆதரவுகளை இலங்கைக்கு வழங்கிய வண்ணமுள்ளன.

இந்த அடிப்படையில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளிவந்த பின்னர், இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்களில் அதிகம் தலையிட்ட முதலாவது நாடாக ரஷ்யா உள்ளது. சீனா போருக்குப் பின்னான இலங்கை அபிவிருத்தித் திட்டங்களில் அதிகளவான தனது நிதியை முதலீடு செய்துள்ளது.

### செல்வாக்குச் செலுத்தும் நாடுகளின் நிலைப்பாடு

இவற்றுக்கு மாறாக, அனைத்துலக சமூகத்தால் மேற்கொள்ளப்படும் நேர்த்தியான மாற்றங்களை ராஜபக்ஷ அசட்டை செய்வா ரானால் அவர் முட்டாளாகவே இருப்பார் என்பது அரசியல் அவதானிப்பாளர்களின் கருத்தாகும்.

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை அடைந்து கொள்வதற்காகவே இலங்கை மீது இந்த நாடுகள் தமது செல்வாக்கைப் பிரயோகிக்கின்றன என அனைத்துலக நெருக்கடிக்கான குழுவின் இலங்கைக்கான திட்ட இயக்குநரும் மூத்த ஆய்வாளருமான அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா போன்றவை இலங்கை விடயத்தில் சாதகமானதொரு நிலைப்பாட்டை எடுப்பதில் கூட்டாக இணைந்துள்ளனர்.

இந்த நிலையில் ரஷ்யா, சீனா அகிய இரு நாடுகளும் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் மாற்றாத நிலைப்பாட்டைக் கொண்டிருக்குமானால் அதில் எந்தவொரு பயனையும் பெற முடியாது என அலன் கீனன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றம் ஏற்கனவே இடம்பெற்றுள்ளதற்கான ஒரு அறிகுறியையே கடந்த வார இறுதியில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் கண்காணிப்பு செயற்பாட்டு அமைப்பான கபேயின் தலைவர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தோட்டாவால் ஆளப்பட்ட பிரதேசங்கள் வாக்குகளால் வென்றெடுக்கப்பட்டுள்ளன எனத் தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

" நீண்ட காலமாக நாங்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால் தற்போது நாம் அதில் நம்பிக்கை கொள்ளலாம் என இலங்கையின் யுத்தம் இடம்பெற்ற வடக்குப் பகுதியில் அமைந்துள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த வாக்காளரான" வேலாயுதம் நமணன் தெரிவித்துள்ளார். ✱

நன்றி:புதினப்பலகை

## இல்லாமல் இருப்பவர்கள்!



ஒரு பெரியவர் இருந் தார். எல்லாவகைப் பற்றுக்களையும் கடந்தவர். ஒரு நாள் ஒரு தேவதை அவர் முன்னால் திடீரெனத் தோன்றி "உங்களுக்கு வரம் கொடுப்பதற்காகத் தான் வந்திருக்கிறேன். என்ன வேண்டுமோ கேளுங்கள்?" என்றது.

பெரியவர் கூறினார்; எனக்குத் தேவைகள் இருந்த போது நீ இருக்கிற இடம் எனக்குத் தெரியவில்லை. இப்போது எனக்கு எந்தத் தேவையும் இல்லை. இந்தச் சமயம் பார்த்து நீ வந்திருக்கிறாய். மிகவும் தாமதமாக என்னைத்தேடி வந்திருக்கின்றாய். இப்போது கேட்பதற்கு எவரும் இல்லை" என்றார்.

"கேட்கிறவர் இல்லையா? என்ன சொல்கிறீர்கள்" என்றது தேவதை.

"ஆமாம், நீ யாரிடம் கேட்கின்ற வரம்வேண்டும்" என்று கேட்டார் பெரியவர். "உங்களிடம் தான்" என்றது தேவதை.

நான் இப்பொழுது இல்லவே இல்லை! நீ பரமாத்மாவையே கேள். இப்போது அவர்தான் இருக்கிறார்" என்றார்.

தேவதை மறுபடியும் அவரைப் பிடித்துக்கொண்டு "நீங்கள் ஏதாவது கேட்டே ஆகவேண்டும்" என்றதும் பெரியவர் கூறினார்; "யார் யாசிக்கிறது? யாரிடம் யாசிக்கிறது? நான் யாசித்தால் பரமாத்மாவிடம் எனக்குப் பூரண நம்பிக்கை இல்லை என்றாகிவிடும். எது முக்கியமோ அது நடக்கும். எது முக்கியமில்லையோ அது நடக்காது. உண்மையில் எது நடக்கிறதோ அதுவே முக்கியம். அதனால் நீ போய்விடு; நீ தவறான மனிதனிடம் வந்திருக்கிறாய்" என்றார்.

தேவதை விடுவதாக இல்லை. "நாங்கள் உங்களை மாதிரி மனிதனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம். யாசிக்கிறவர்களிடம் நாங்கள் போவதில்லை. யாசிக்காதவர்களிடம்தான் போவோம். ஏனென்றால் யாசிப்பவர்களுக்கு உள்ளே நாங்கள் வருவதற்கு அருகதை யான இடமே கிடையாது. யார் 'இல்லாமல்' இருக் கிறார்களோ அவர்களுக்கு உள்ளே தான் நாங்கள் வருவது வழக்கம். இதோ வந்துவிட்டோம். அதனால் அவசியம் கேளுங்கள்" என்றது தேவதை.

பெரியவர் பார்த்தார், தேவதை விடுவதாக இல்லை. நான் சொல்வதைக் கேட்காமல் கொடுத்துவிட்டுப் போ. நான் கேட்கவேண்டிய பிரச்சினை இல்லை என்றார்.

அதற்குத் தேவதை "ஐயா! உங்களுக்கு நான் ஒரு வரம் தருகிறேன். நீங்கள் இறந்தவர்களைத் தொட்டால் அவர்களுக்கு உயிர் வந்துவிடும். நோயாளியைத் தொட்டால் அவர் குணமாகிவிடுவர். கருகிப்போன மலரைப் பார்த்தால் அது மறுபடியும் மலரும் என்றார்.

இப்போது பெரியவர் கூறினார் எனக்கு இன்னொரு வரமும் கொடுத்துவிடு என்றார்.

தேவதைக்கு ஆச்சரியம். 'முதலில் யாசிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. ஆனால் ஒரு விடயம் கிடைத்த இடத்தில் விசயங்களில் சங்கிலித்தொடர் ஆரம்பமாகிவிடுகிறது. அதனால் கேட்கிறேன் இன்னும் ஒரு வரம் கொடு. அதாவது என்றால் இந்தச் சக்தியைப் பற்றிய அறிவு எனக்கு ஏற்படாத வரத்தைக் கொடு.

இறைவன் பிழைத்தால் பிழைக்கட்டும். ஆனால் அவன் பிழைத்தது என்கின்ற விபரம் எனக்குத் தெரி யக்கூடாது. நோயாளி குணமடையட்டும். ஆனால் அது எனக்குத் தெரியாமல் இருக்கட்டும். ஏனென்றால் நான்தான் பிழைக்க வந்தேன் என்கின்ற நினைப்பு எனக்கு வந்துவிடும். அந்த வேதனையை அனுபவிக்க மறுபடியும் தயார் இல்லை. அதனால் "இந்த வரத்தை எனக்குக் கொடுக்காதே; என்னுடைய நிழலுக்குக் கொடு. என் நிழல்பட்டு நோயாளி பிழைக்கட்டும். பூ மலரட்டும். நான் அப்படியே இருப்பேன்" என்றார்.

" நீ நிழல் மட்டுமாக ஆகிவிடு"

இது கீதையில் கண்ணன் சொன்ன வார்த்தை.

அகங்காரம் இல்லாத வாழ்க்கை ஆனந்தமான வாழ்க்கை.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் ஏற்கும் அரசியல் தீர்வை அரசு விரைந்து முன்வைக்க வேண்டும்

## நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் கோரிக்கை

நாவிதன்வெளி,ஜுலை 29

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை அரசு விரைந்து வழங்கவேண்டும்.

- இவ்வாறு நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் ரீ.கலையரசன் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாகத் தாம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத் தமிழ் மக் கள் நடந்து முடிந்த பல தேர்தல்களில் தமிழ் இனத்தின் உரிமைக்காகவும், தமிழ்த் தேசியத்திற்காகவும் வாக்களித்துள்ளனர். காரைதீவு, திருக்கோவில் பிரதேச சபைக்கான முடிவுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. இதற்காக எமது மக்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்கு மக்கள் தன்மானத் தமிழர்களாக நடந்து கொண்டுள்ளனர். ஏற்கனவே அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிரதேச சபைகளைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பே கைப்பற்றியது. அதுபோல் ஒத்தி வைக்கப்பட்டு நடைபெற்று முடிந்த தேர்தலிலும் இரு பிரதேச சபைகளையும் அம்பாறை மாவட்டத்தில் அதுவே கைப்பற்றியுள்ளது.

தமிழ்த் தேசியத்திற்கு உரம் ஊட்டும் வகையில் எமது மக்கள் உறுதியுடன் செயற்பட் டுள்ளனர்.

இந்த நிலையில் எமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணி திரண்டு, சர்வதேசத்திற்கும் இந்த நாட்டிற்கும், அரசுக்கும் நல்ல செய்தியை விடுத்துள்ளனர்.

எனவே, அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகளை இதயசுத்தியுடன் தொடர வேண்டும்- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சம்மாந்துறையில் குடிசைகள் தீக்கிரை



மட்டக்களப்பு,ஜுலை29

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பட்டி, இஸ்மாயில்புர கிராமத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்த 15 குடிசைகள் கடந்த செவ்வாய்க்கிழமை இனந் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இஸ்மாயில்புர கிராமத்தில் தற்காலிகமாக 150 இற்கும் மேற்பட்ட குடிசைகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## திருமலை சிறைச்சாலையை புனரமைக்க நடவடிக்கை

திருகோணமலை, ஜுலை 29

திருகோணமலை சிறைச்சாலையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சிறைச்சாலையின் அதி காரிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள விடுதி களைத் திறந்துவைக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

இந்தச் சிறைச்சாலையை எதிர்காலத்தில் முழுமையான சிறைச்சாலையாகப் பார்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

இந்தப் புனரமைப்புப் பணிகள் 2013 ஆம் ஆண்டுக்குள் நிறைவடையவுள்ளது- என்றார். (ச)

## ஆர்ப்பாட்டம்...



தம்பலகாமம் பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்யக் கோரி பிரதேச செயலகத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர். கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் ,கிழக்கு மாகாண சபை உதவித் தவிசாளர் திருமதி ஆரியவதி கலப்பதி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரிடம் கலந்துரையாடுகின்றனர். (ச)

## சட்டவிரோத கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

அம்பாறை,ஜுலை29

பொத்துவில், அறுகம்பை, உல்லை மற்றும் பாணம போன்ற கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பொத்துவில் பிரதேசத்தில் கடற்கரையை அண்மித்த பகுதியில் 10 மீற்றர் தூரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தற்காலிக மற்றும் நிரந்தரக் கட்டடங்கள் அகற்றப்படவுள்ளன.

புதிய கட்டடங்களை நிர்மாணிப்போர் பிரதேசசபை, பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின் முன் அனுமதி பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வீதிகளுக்கு பெயரிட்ட அரபு எழுத்துக்கள் அழிப்பு

காத்தான்குடி நகர சபைப் பிரிவிலுள்ள வீதிகளுக்கு நகர சபையினால் பெயரிடப்பட்ட விளம்பரப் பலகைகளில் உள்ள அரபு எழுத்துக்கள் இனந்தெரியாதோரினால் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதி விளம்பரப் பலகைகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு ஆகிய நான்கு மொழிகளிலும் வீதியின் பெயர் எழுதப்பட்டிருந்தது. இதில் அரபு எழுத்து மாத்திரம் இனந்தெரியாதோரால் அழிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை யார் செய்தார்கள் என்று எமக்கு இன்னும் தெரியவில்லை என நகர சபைத் தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தெரிவித்துள்ளார். (ச)

## திருமலையில் மான்கள் அழியும் ஆபத்து

### வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவிப்பு


திருகோணமலை,ஜுலை29

திருகோணமலை கோட்டையை அண்மித்துள்ள பிரதேசங்களில் வாழும் மான்கள் பொதுமக்களின் அசாதாரண நடவடிக்கைகள் காரணமாக அழிவடைந்துவரும் நிலைமை தற்போது தோன்றியுள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திருமலை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை மாவட்டத்துக்கான உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இந்த நிலையில், அவர்களால் எறியப்படும் பொலித்தீன் உறைகளை உட்கொள்வதாலேயே மான்கள் உயிரிழப்பதாக இந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

மான்களின் பாதுகாப்பு நிமித்தம் உல்லாசப் பயணிகளினால் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கிய பதாதைகள் பல்வேறு இடங்களிலும் வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை குறித்து அவர்கள் கவனத்திற் கொள்வதில்லை என்று வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திருமலை மாவட்ட அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## 2 ஆவது நீளமான பாலம் உப்பாறில் நிர்மாணம்



திருகோணமலை,ஜுலை29

இலங்கையில் இரண்டாவது மிக நீளமான பாலம் கிண்ணியா, ஏ-15 வீதி உப்பாறு கிராமத்தின் கடல் நீரேரியில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் மிக நீளமான முதலாவது பாலம், கிண்ணியாவுக்கும் சீனக்குடாவுக்கும் இடையில் நிர்மாணிக்கப்பட்டது.

இந்தப் பாலத்தின் நீளம் சுமார் 396 மீற்றர் தூரம் ஆகும். தற்போது கிண்ணியா, உப்பாறு கிராமத்தில் நிர்மாணிக்கப்படும் பாலம் சுமார் 375 மீற்றர் தூரம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்படும் போது திருகோணமலை - மட் டக்களப்பு பயணம் மிகக் குறுகிய நேரத்தில் சென்றடைய முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கிண்ணியா மீன்பிடித் துறை நாளை திறப்பு

மட்டக்களப்பு,ஜுலை29

கிழக்கில் மீனவர்களுக்கு சமாதானத்தின் பிரதிபலனை உரிமையாக்கும் வகையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

மீன்பிடி நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்னவின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ,கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், மீன்பிடி நீரியல் வளங்கள் பிரதி அபிவிருத்தி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்தத் துறைமுகம் திறக்கப்படும் பட்சத்தில் இங்கு 400 படகுகள் ஒரே நேரத்தில் தரித்து தமது தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடியதாக இருக்கும். இங்கு 6 குளிரூட்டும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைமுகத்தில் மீன்பிடி வலைகள் கட்டுமிடம், எரிபொருள் நிலையம், மீன் விற்பனை நிலையம், கூட்ட மண்டபம், சிற்றுண்டிச் சாலை என்பனவும் அமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தனுக்கு இன்று தேர்

இலங்கையின் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து வடக்கு முகமாக சுமார் பதினைந்து கிலோ மீற்றர் தொலைவில் காங்கேசன் துறை வீதியிலுள்ள மாவிட்டபுரம் என்னும் இடத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்த புராதனமான முருகன் ஆலயங்களுள் இதுவும் ஒன்று.

இன்றைக்கு ஆயிரத்து இருநூற்றைம்பது வருடங்களுக்கு மேலான பழைமை வாய்ந்தது இந்த ஆலயம். இங்கு மாருதப்புரவீகவல்லி வழிபட்டுத் தன் நோய் நீங்கப் பெற்றாள் என்னும் ஒரு வரலாற்றுச் செய்தியும் உண்டு.

உக்கிரப்பெருவழுதி என்னும் ஓர் அரசன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். அவனுடைய மகள் மாருதப்புரவீகவல்லியை குதிரை முகமும் குன்ம வியாதியும் ஒருங்கே வருத்தின. வைத்தியங்கள் பல செய்தும் அவள் நோய் குணமாகவில்லை. இறுதியில் இலங்கையின் வடபாலுள்ள கீரிமலைக்குச் சென்றாள். அங்கே தவம் புரிந்த நகுல முனிவரை வணங்கி அவர் ஆசியுடன் கீரிமலையில் தீர்த்தமாடினாள். பின் கோயிற்கடவைப் பிரதேசத் தில் கோயில் கொண்ட கந்தசுவாமியரை வணங்கி கோயில் தீர்த்தமாகிய நன்னீரூற்றும் சமுத்திர நீரும் சங்கமிக்கும் இடத்தில் நீராடினாள். பல தடவை வணங்கி வர குதிரை முகமும் குன்ம நோயும் நீங்கப் பெற்றன. இதனால் இவ்விடம் மாவிட்டபுரம் எனப் பெயர் பெறலாயிற்று.

தீராப் பிணி தீர்த்த முருகன் மீது ஆறாக் காதல் கொண்ட மாருதப்புரவீகவல்லி அவனுக்கென ஓர் அழகிய ஆலயத்தை அமைத்தாள். ஆரம்பத்தில் இவ்வாலய கர்ப்பக்கிரகத்தில் வேல் மட்டுமே வழிபடப்பட்டு வந்தது. அவற்றுடன் கந்தசுவாமியால் வள்ளி, தெய்வானை விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்ய விரும்பிய மாருதப்புரவீகவல்லி அவற்றை இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகத் தருவித்தாள்.

திருப்பணி வேலைகள் பூர்த்தியான பின் ஓர் ஆனி மாத உத்தர நட்சத்திரத்தில் கந்தசுவாமியாருக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலயமும் இடிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் ஆட்சி முடிந்து ஒல்லாந்தர் ஆட்சி தொடங்கவே மூலஸ்தானத்தில் ஒரு வேலை வைத்து வழிபாடு செய்து வந்தனர். 1815 இல் கந்தசுவாமிகள் திருவுருவை வைத்து மகா கும்பாபிஷேகம் செய்தனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆலயம் இருவாசல் கொண்டது. முகப்பு கிழக்குப்புறமாகவும் மேற்குப்புறமாகவும் உள்ளது. இந்தக் கோயிலின் உயர்ந்த இராஜகோபுரம் மேற்குப் பக்கத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட பெரிய இராஜகோபுரம் இதுவே ஆகும். அழகிய சிற்பங்கள் ஆலயத்தின் அழகை மேலும் மெருகூட்டுகின்றன. இவ்வாலயம் மூன்று திரு வீதிகளைக் கொண்டது. ஆலயக் கொடித்தம்பம் முழுவதும் வெள்ளியாற் செய்யப்பட்டது. அழகும் பொலிவும் கொண்ட இவ்வாயலத்தின் விருட்சம் காஞ்சிமா விருட்சம் என்பதாகும்.

இவ்வாலயத்தின் மஹோற்சவம் ஆண்டுதோறும் ஆனி மாத பூர்வபட்ச சஷ்டியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து நாள்கள் நடைபெறுகின்றன. இவ் உற்சவங்களுள் மஞ்சம் மற்றும் கைலாச வாகன உற்சவம், சப்பரம், தேர், தீர்த்தம் என்பன சிறப்பானவை. தேர்த்திருவிழாவன்று பஞ்சரதங்கள் பவனி வரும். இவற்றில் முறையே விநாயகர், சிவபெருமான், கந்தசுவாமியார் ஆறுமுகப் பெருமான் சண்டேசுவரர் என்னும் மூர்த்திகள் பவனி வருவர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமியாரின் தீர்த்த உற்சவம் ஆடி அமாவாசை தினத்தன்று இடம் பெறும். கீரிமலையிலுள்ள கண்டகி தீர்த்தத்துறையில் காலை வேளையில் சுவாமி தீர்த்தமாடுதல் இடம் பெறும். தீர்த்தமாடியபின் சுவாமி கீரி மலையில் அன்று அந்திவரை இருந்து அருள்புரிவார்.

**வ.சிவாஜி,** கரணவாய் கிழக்கு

புரட்டாதி மாத விஜயதசமியன்று மாவிட்டபுரம் முருகப் பெருமான் அருகிலுள்ள துர்க்காதேவி ஆலயத்துக்கு எழுந்தருளி வன்னி வாழை வெட்டும் நிகழ்வும் சிறப்பானது. 1829 ஆம் ஆண்டு முதல் இவ்வழமை இந்தக் கோயிலில் நடைபெறுகிறது. இன்று தேரேறும் அபிசேஷக் கந்தப் பெருமான் மக்களின் துன்பங்களை அழித்து வாழ்வளிக்கப் பிரார்த்திக்கின்றோம். ✱

# பிதிர்க் கடன்கள் தீர்க்க ஆடி அமாவாசை

அமாவாசை என்பது அமா + வாசி என இரு பிரிவாக நோக்கப்படுகிறது. ''அமா '' என்பது ஓரிடத்தில் பொருந்தியது என்றும் ''வாசி'' என்பது சேர்ந்திருப்பது அல்லது உறவாடுவது என்றும் பொருள்படும். அதாவது சூரியனும் சந்திரனும் ஓர் இராசியில் சேர்ந்திருக்கும் நாளே அமாவாசை என்பர்.

வானியலும் சோதிடமும் விஞ்ஞானமும் இணைந்த விளக்கங்களைக் கொண்டது ஆடி அமாவாசை. சூரியனும் சந்திரனும் ஒரே பாதையில் பூமிக்கு நேராக வரும்போது அமாவாசைத் தினம் உண்டாகிறது. சந்திரன் சூரியனிலிருந்து பிரிந்து பூமியைச் சுற்றி வருகின்ற மார்க்கத்தில் ஆடி மாதத்தில் புவிக்கும் சூரியனுக்கும் 180 பாகையில் வரும்போது ஏற்படும் அமாவாசைத் திதி ஆடி அமாவாசைத் தினம் எனப்படுகிறது.

சூரியனும் சந்திரனும் ஒரே இராசியில் வரும் புனிதமான அமாவாசை நாள் தந்தையை இழந்தவர்களால் நோற்கப்பட வேண்டிய விரததினம் ஆகும். உயிர்களுக்கு சுகமே பாகமாகிய மாறுதலை உணர்த்தும் நாள் என் றும் இந்நாள் குறிப்பிடப்படுகிறது.

**நாளை ஆடி அமாவாசை**

சகல தேவர்களும் அமாவாசைத் தினத்தில் அதிதிகளாவர். அன்று நோன்பு நோற்றலும், விரதம் காத்தலும் சிறந்ததும் இறைவனுக்கு மகிழ்ச்சியளிப்பதும் பெருமை தருவதுமான நன்நாளாகும்.

இறந்தவர்களின் தூலவுடம்பும் சூக்குமவுடம்பும் பிறவிக்குக் காரணமான வினை எல்லாம் தகனக்கிரியை, அந்தியேட்டிக் கிரியை இவற்றால் நீங்கிவிடும். அபுத்தி பூர்வமாகச் செய்தன அந்தியேட்டி தகனக் கிரியைகளால் மாறும். புத்தி பூர்வமாகச் செய்தன அனுபவித்தேயாக வேண்டும்.

உயிர் சபிண்டீகரணம் என்னும் கிரியையினாலே சிவலோகத்தை அடையும். அங்கு பிதாவின் உயிர் ஸ்கந்த சொரூபமாக இருக்கும். பாட்டனுடைய உயிர் சபிண்டீகரண மண்டபத்திலே ஸ்கந்த சொரூபியாக இருக்கும். முப்பாட்டனுடைய உயிர் கணாதிபதத்தில் காணாத சொரூபியாக இருக்கும். இவர்களுக்குத் தலைவர்களாக ஸ்கந்த, ஷண்ட, கணாதீசர் என்னும் மூவர் அதி தெய் வங்களாக விளங்குவர்.

இவர்கள் தான் பிதிர்த் தேவதைகள் என்று அழைக்கப்படுகின்றனர். அத்தேவதைகளை ஆராதனை செய்து வழிபடுவது சிரார்த்தம் எனப்படும். நிர்வாண தீட்சை பெற்றவர்களின் பிதிர்த்தேவதைகள் ஈசர், சதாசிவர், சாந்தர் எனப்படுவர்.

இறக்கின்ற கால நேரங்களைப்

**தேனூரான்**

பொறுத்ததாக உயிர்களை நற்பதவியடையச் செய்வதற்குச் சிரார்த்தம் இன்றியமையாததாகும். ஒவ்வொரு அமாவாசையும் தந்தை வழி பிதிர்க் கருமத்துக்கு விசேடமானது. எனினும் ஆடி அமாவாசை மிகவும் புனிதமானதும் விசேடமானது மாகும்.

அமாவாசை நாள்களில் கடலில் தீர்த்தமாடுவது மிகவும் நல்லது. கடல் நீரை பாவத்தைக் கழுவும் பரிசுத்த நீராகக் கருதி இறைவன் அவர்களுக்கு முத்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டி நீராடல் வேண்டும்.

புனிதத் தலங்களில் இவ்வாறு நீராடி விரதம் இருக்கும் மரபு பல ஆலயங்களில் விளங்குகிறது. நமது நாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள சைவ மக்கள் கீரிமலைத் தீர்த்தத்திலும் மட்டக்களப்பு பகுதியில் மக்கள் மாமாங்கத் தீர்த்தத்திலும் கொழும்பு சைவ மக்கள் முகத்துவாரத்திலும் நீராடித் தமது பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவர். ✱

# நன்றி யாருக்கு?

ஒரு முஃமின் எப்பணியையும், இறைவனின் திருப்தியை நாடியே செய்கின்றான். வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அதற்காகப் பெருமை கொள்ள மாட்டான். எல்லாம் தனது முயற்சி களுக்குக் கிடைத்த பலன் என்று கருதாமல் அல்லாஹ்வின் முன் நெற்றியைத் தாழ்த்தி மனமுருகிப் பிரார்த்திப்பான்.

யாமூக் போர் இஸ்லாமிய ஜிஹாத் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. ரோமானியப் போர் வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடன் போர் செய்யக்களத்துக்கு வந்திருந்தார்கள். அந்தப் போர் வீரர்களில் முப்பதாயிரம் பேர் வெற்றியா தோல்வியா இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடுவோம் என்று வீர சபத




மெடுத்து வந்திருந்தார்கள். போர்க் களத்தை விட்டு புறமுதுகிட்டு ஓடும் எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதற்காகக் கால்களைச் சங்கிலியால் பிணைத்திருந்தார்கள்.

பல்லாயிரக்கணக்கானவர்களுடன் சிறிய, பெரிய குருமார்களும் சிலுவையைக் கையில் ஏந்திய வண்ணம் படையின் முதல் வரிசையில் நின்று யேசுபிரானின் பெயரை உரத்துக் கூறிப் படையினருக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் மிக உக்கிரமான போர் நடந்தது. ஆனாலும் உரோமானியர்களின் படைபலமும், போர்ச் சாதனங்களும், முஸ்லிம்களிடம் பொங்கியெழுந்த ஈமானிய உணர்ச்சி வெள்ளத்தின் முன் பயனற்றுப் போயின.

அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது இந்த அபார நம்பிக்கையும் அவர்களுக்கு ஷஹாதத் மீது இருந்த ஆழ்ந்த பற்றும் நெகிழ்ந்து கொடாத நெஞ்சுரமும், உரோமானியர்களின் ஆசைகளைத் தவிடுபொடியாக்கின. அவர்களால் நிலைகொள்ள முடியவில்லை. கிட்டத்தட்ட ஓர் இலட்சம் பேர், அப்போரில் மடிந்தார்கள். கலீஃபா உமர் (ரலி) அவர்களுக்கு வெற்றிச் செய்தி எட்டியதும் ஸஜ்தாவில் வீழ்ந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

**கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம்**

வெற்றி மேல் வெற்றி வந்து குவிந்தாலும், அவற்றுக்காக நன்றி செலுத்துவதற்கும், மகிழ்ச்சி ஆரவாரம் கொண்டாடுவதற்கும் இஸ்லாமிய வழிமுறை இதுதான். வெற்றிக் களிப்பில் பிறரின் மனம் புண்படும் படி நடந்து கொள்வதும், களியாட்டங்களில் ஈடுபடுவதும், அசிங்கமானதும், அருவருக்கத்தக்கதுமான சுலோகங்களை முழங்கி வீண் கூச்சல் போடுவதும் இஸ்லாமிய மரபு அல்ல. ✱

## கல்வித் சுடர் விடைகள்

### பரீட்சை இல. 11 இல் வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) 3 | 02) 1 | 03) 2 | 04) வடக்கு |
| 05) திறப்பு | 06) 1 | 07) 2 | 08) 2 |
| 09) 1 | 10) 3 | 11) 3 | 12) 1 |
| 13) 1 | 14) 2 | 15) 3 | 16) 2 |
| 17) 3 | 18) 3 | 19) 3 | 20) 2 |
| 21) 2 | 22) 2 | 23) 1 | 24) 1 |
| 25) 2 | 26) 2 | 27) 3 | 28) 2 |
| 29) 1 | 30) 3 | 31) 1 | 32) 3 |
| 33) 1 | 34) 2 | 35) 2 | 36) 8 |
| 37) 567 | 38) 3 | 39) 1 | |

40) எழுபத்தைந்தாயிரத்து ஐந்நூற்று ஐந்து.

(புள்ளிகள் 40× 2.5= 100)

### பரீட்சை இல. 11 இல் வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 1) பரந்த வயல்கள். தென்னந் தோப்புகள். வேறுமரங்கள்.
2) மரங்கள் செடிகள் 3) படி/அடி 1. நான் தினமும் காலையில் படிப்பேன்.
2. மாடிப்படியினால் ஏறிச்சென்றேன். 4) இடர்/இன்னல்/அல்லல்
5) மரங்களும்,செடிகளும் 6) கண்டு, எழுந்து 7) நிகழ் காலத்தை
8) கவரும்
02. சூரியன்
03. சிறைச்சாலை
04. 1) கோபம் சிந்தனைக்கு இடையூறு 2) இறைவனின்-மகிமை
05. 1) Television 2) Museum
06. 1) விளையாட்டு முற்றம் 2) சிற்றுண்டிச்சாலை 3) மக்கள் சந்தைக்கு வருகிறார்கள் 4) நூலகம்
07. 1) 4 2) 4 3) 1 4) 3 5) 2 6) 1 7) 2 8) 1 9) 3 10) 1 11) 1 12) 3
08. 1) வெண் ஊமத்தை 2) வல்லாரை 3) மஞ்சள்
09. 3kg 10. 1 1/2 மணித்தியாலம் / 1 மணித்தியாலம் 30 நிமிடம் / 90 நிமிடங்கள்
11. 26m 12. 1250 $m^2$ 13. 1. 1025/= 2. 405/= 3. 3 4. 250
14. பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் க
# தேர்த்திருவிழாச் சிற



## ஆலய வரலாறு

ஈழத்திருநாட்டிலே வரலாற்றுக்கும் அப்பாற்பட்ட மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமியார் திருப்பதி தேவஸ்தானத்தின் 39ஆவது ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய அடியேனது குருவருளுடன், கந்தப் பெருமானின் திருவருள் கிடைக்க ஆசீர்வதித்து வாழ்த்துக்களும் தெரிவிக்கிறேன். ஈழத்திருநாட்டிலே கோவிற்கடவை என்னும் கிராமத்தில் ஆரியரும், நாகரும் இவர்கள் வழித்தோன்றல்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வேல்பெருமானும், சிவலிங்கமும் வைத்து வழிபாடு நடத்தி வந்தனர்.

பல அரசர்களின் அரசாட்சிக் காலங்களில் சைவத்துக்கும் தமிழுக்கும் எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்பட்டது. சோழர்காலம், பல்லவர்காலம், பாண்டியர் காலம், வன்னியர் காலம், கண்டி அரசர்கள் காலம் என்பவற்றில் பல மாற்றங்களைக் கண்டோம். மாவிட்டபுரக்காலம் 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்கிறார்கள். கலிங்க தேசத்து அரசனின் புத்திரியாக கனகசுந்தரி பிறந்தாள். தீர்த்தசேவையின்போது ஹயக்கிரீவமுனிவரை ஏளனம் செய்ததனால் முனிவர் கோபங்கொண்டு மறு பிறவியில் கனகசுந்தரியானவள் குதிரை முகத்துடன் குன்மநோயுடன் பிறக்க வேண்டுமென சாபமிட்டார். கனகசுந்தரி தனது தவறை மன்னித்தருள வேண்டுமென மனமிரங்கி நிற்க, ஈழநாட்டின் வடபால் அமைந்துள்ள கோவிற்கடவை என்னும் ஸ்தலத்தில் முருக வழிபாட்டினால் சாபவிமோசனமாகி சுகவாழ்வு வாழ்வாய் என முனிவர் மனமுவந் தருளினார். இதன்பிரகாரம் மன்னவன் திசை உக்கிரச்சோழனுக்குப் புத்திரியாகப் பிறந்து, அங்கசுந்தரி எனும் பெயருடன் வாழ்ந்து வருகையில் பருவ வயதளவில் முனிவரிட்ட சாபம் தொடுதற்கு ஆரம்பித்தது. இதனால் குதிரை முகம் பெறப்பட்டாள் அங்கசுந்தரி. அசரீரி வாக்கின் பிரகாரம் ஈழநாட்டுக்கு வந்த அங்கசுந்தரி கோவிற்கடவையில் ஆரியர், நாகர் இவர்களினால் பூஜை செய்யப்பட்டு அனுகிரகித்துக் கொண்டிருக்கும் வேல் முருகப் பெருமானையும் சிவலிங்கப் பொருமானையும் வழிபட்டு குதிரைமுகம் நீங்கப் பெற்று அந்தத் தலத்துக்கு குதிரைமுகம் விட்டபுரம்[ மாவிட்டபுரம் ] எனப்பெயரிட்டு தனது தந்தை உக்கிரப்பெருவழுதிக்கு அறிவித்து சிதம்பரம் தீஷிதர் பரம்பரயினரையும், காங்கேயமூர்த்தியும், ஏனை சிப்பந்திகளையும் கயாத்துறை எனும் துறைமுகத்தில் இறக்கி மாவிட்டபுரத்தில் பிரதிஷ்டை செய்து ஆலய திருப்பணி செய்வித்து வந்தாள். முருகப்பெருமான் காங்கேயமூர்த்தி கயாத்துறையில் இறங்கியதனால் இன்றும் கயாத்துரை காங்கேசந்துறை எனப்பெயர்பெற்று விளங்குகிறது.

யாதுமினியீர்,

மருவுமடியார்கள் வினைதீர்த்து அவர்கள் தம் மனதில் விளையாடும் வெற்றிவேல் சேவல்கொடி சகிதம் மரகத மயூரவாகனன் கலியுகவரதன் அடியவர்கள் துன்பங்களைக் களைந்து அனுக்கிரகித்துக் கொண்டிருக்கும் மஹாவல்லி கஜவல்லி சமேத ஸ்ரீ கந்தசுவாமியாரது திருப்பாதங்களைப் போற்றி மேலும் தங்கள் யாபேருக்கும் அபரிமிதமாக அனுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து இதய சுத்தியுடன் தரும் விண்ணப்பம். மாவைக்கந்தன் ஆலயம் ஆயிரம் வருடங்கள் பழைமையானது. ஈழ நாட்டின் முதன்மையானது. ஏனைய ஆலயங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது. சைவர்களது கேந்திர முக்கியத்துவம் கொண்டது: குமார தந்திர ஆகம சாஸ்திர விதிகளுக்கு அமைந்தவாறு அந்தணர்கள் ஆற்றும் கிரியைகளது செயற்பாடுகள் மூலமாகச் சைவர்களைப் புண்ணிய சீலர்களாக வாழ வகை செய்தும், நித்திய கர்மானுஷ்டானங்களை நடத்தி அதன்வழி அன்பைப் பெருக்க அன்பு மூலம் அருளமுதம் பெற்று உள்ளத் தெளிவு கொண்டு, உயரிய மனிதனாக வாழவும் ஆற்றுப்படுத்தும் ஸ்தாபனமாக மாவையாலயம் நிலை பெற்று வருகின்றது என்பதை யாவரும் அறிவர். 15ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும் தொடர்ந்து ஒல்லாந்தரும் ஈழநாட்டு வழிபாட்டு ஸ்தலங்களைத் துவம்சம் செய்து அழித்தபோதும் சைவப்பெரு மக்கள் மௌன விரதங்களால் சிவமயமான வாழ்வினைக் கைக்கொண்டு அகமகிழ்ந்தே இருந்தனர். இப்போது வடகீழ் மாகாணக் கோயில்களை மதப்பற்றற்றோர் சமய

## கோயிற் கடவையே மாவிட்டபுரமாக

மாவைக்கந்தன் திருத்தலத்தையும் அதனை அடுத்துள்ள பகுதிகளையும் சேர்ந்த நிலப்பரப்பு " கோயிற் கடவை" என்று பெயர் பெறுகின்றது. "கோயிற் கடவை" என்ற நூலை எழுதி மாவிட்டபுரம் பாரதி இல்லத்தில் உள்ள பிரம்மஸ்ரீ இரா. சுந்தரராஜசர்மா அவர்கள் வெளியிட்டார். இந்த நூலில் மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன் துறை ஆகிய இடங்களின் சிறப்புக்களை எல்லாம் எடுத்துக் காட்டியுள்ளார். மாவை முருகன் காங்கேசன் துறைமுகத்தில் இறங்கிய சரித்திரம் உணர்த்தப்பட்டிருக்கிறது. மாவை முருகன் காங்கேசன் துறையில் தெப்பத் திருவிழாவை நடத்திய மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் ஐயாவின் சிறப்புக்களை எடுத்துக் கூறியுள்ளார். மேலும் மாவை முருகன் கரந்திருக்கும் செய்தியை சபாபதிக் குருக்களின் கனவிலே முருகப் பெருமான் தோன்றி உணர்த்தியுள்ளார். இதன் பெறுபேறாக கோயிலின் புனருத்தாரணத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விளாங்குளம் என்னும் இடத்தில் இருந்து கருங்கல் எடுக்கப்பட்டு கருங்கற் திருப்பணியாக ஆலயம் கட்டப் பட்டது. ஆனி உத்தர நாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்பணி 1782 இல் ஆரம்பிக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் கச்சேரியில் கோயிற் பதியில் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மேலும் முன்னர் " கீரிமலை சிவன் கோயில் "திருத்தம்பலேஸ்வரன் கோயில்" என அழைக்கப்பட்டது. இதற்குச் சமீபத்தில் கதிரையாண்டவர் கோயிலையும் கட்டுவித்ததோடு, கோயில்களை முறையாக நிர்வகிக்கக் காசிப்பிராமணரான நீலகண்டாசாரியாரின் மூன்றாங்குமரன் வாமதேவாசாரியனையும், அவன் கன்னியாகிய விசாலாட்சி அம்மையையும் அழைப்பித்து அங்கீகாரம் முதலிய செய்யவேண்டிய பல வசதிகளையும் கொடுத்துதவினான். இந்தவிடத்தை மக்கள் "கோயிற்கடவை" என வழங்கலாயினர் என மாவிட்டபுரத் தல வரலாற்று நூலில் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் ஐயா குறிப்பிடுகின்றார். கோயிற் கடவையே இன்று மாவிட்டபுரமாகக் காட்சி தருகின்றது.

**சைவத்திரு.கா. சிவபாலன்**

## ஆனந்தக் கோலம் காண வாரீர்

ஈழ மணித் திருநாட்டின் மகுடம்போல் விளங்கும் சைவமும் தமிழும் தழைத் தோங்கும் யாழ்ப்பாணத்தில் முருக வழிபாட்டின் மேன்மையையும் தொன்மையையும் நிலைநாட்ட பல முருகன் ஆலயங்கள் இருப்பினும் வரலாற்றுப் பெருமையும் தெய்வீக சிறப்பும் கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமையப் பெற்றது மாவிட்டபுரம் கந்தசுவாமித் திருக்கோயிலாகும்.

இந்தக் கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று மிகவும் கோலாகலமாகவும் பக்திச் சிரத்தையோடும் நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த ஆலயத்தில் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் பஞ்சரதபவனி நடைபெற்றது எவராலும் மறக்க முடியாது. நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்தப் பஞ்சரதபவனி கடந்த 20 ஆண்டுகளாக நடைபெறுவது இல்லை. அதுவும் மிக விரைவில் நடைபெற இந்தவேளையில் பிரார்த்திக்கின்றோம். இன்று வள்ளி - தெய்வானை சகிதம் சண்முகப் பெருமான் தேரிலே ஏறிவரும் ஆனந்தக் கோலாகலம் காண்பதற்குப் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

எனவே சைவ அன்பர்கள் அனைவரின் வாழ்வும் சிறக்க முருகப் பெருமானின் திருத்தேர்வடம் பற்றி இழுக்க வருக! வருக! என வரவேற்று வாழ்த்துகின்றோம்.

இறைபணியில் நிற்கும்
மாவைக்கந்தன் மாஹோற்சவ பூசைத் தொண்டர் சபை.

### வலி வடக்கு மக்களுக்கு
### ஒளி கொடுக்க வாரீர்

மாபெரும் மண்ணாம் மாவைதனிலே நீரன்று
மாருதப்புரவீக வல்லியின் " மாமுகம் மாற்றியவரே
மாவிட்ட புகழ் வீச வீற்றிருந்த நின்னை மாயமாய் மறையச் செய்தனரே அன்று

மாட்சிமை பெற்று நாமின்று மீண்டும் நீர் மாவையில் நல்லாட்சி செய்திடவே கூடிநின்
மாண்பினை மாந்தர்க்கு நல்கிடவே இன்று மாபெரும் வடம் பிடித்து இழுக்கின்றோம் தேரினை

"மாவிட்டபுரமும் "கீரி" மலையும் கீர்த்தி பெற்றிடவே மங்கா வரங்கள் நல்கிய அப்பனும் மகனும்
மறைந்தது ஏனோ இம் மண்ணில் இதுவரை மன்றாடுகின்றோம் நாமின்று தேரேறும் மைந்தனை

மங்காப் புகழுடன் மாவையும் கீரிமலையும் மாநிலங்களாய் மீண்டும் மலர்ந்து மாண்புறவே
மாபெரும் தேரேறி இன்று மாவையிலும் மகா தீர்த்தமாடி மகா சிவனுடன் நாளை கீரிமலையிலும்

மாபெரும் கீர்த்தியையும் வல்லமையையும் நல்கிடுவீர் மகா சிவராத்திரியையும் மகோற்சவங்களையும்
மறையாமல் காத்து எக்காலமும் மகிழ்வுடன் நாம் மக்களாய் வாழ்வோம் இப்புண்ணிய பூமியிலே.

**தெல்லிபூர் தேவி**

## சிறப்புற வாழ்த்துவோர்:

மலர் அமைப்பு
கதிர்


OM MURUGA CERAMICS AND HARDWARES
கந்தையா சுவேந்திரன்
K.K.S. றோட்,
மாவிட்டபுரம்.

SENTHURAN MULTI SHOP
K.K.S. றோட்,
மாவிட்டபுரம்.

KARTHIKEYAN TRADERS
சேனாதிராஜா ஷர்மிலன்
K.K.S. றோட்,
மாவிட்டபுரம்.

மீண்டும் உதயம் KUSHIBA
21 வருடங்களின் பின் மாவிட்டபுரத்தில்
KUSHIBA DISTRIBUTORS
ஆரம்பமாகியுள்ளது என்பதை அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.
KUSHIBA DISTRIBUTORS
K.K.S. றோட், மாவிட்டபுரம்.

SRI MURUGAN STORES
K.K.S. றோட்,
மாவிட்டபுரம்.

மாவிட்டபுரம்
கந்தசுவாமி கோயில்
மாவை ஆதீன
இசை வேளாளர்
மாவிட்டபுரம்.

தர்மசாஸ்தா குருகுலம்
மாவிட்டபுரம்
அதிபர்
தா.மகாதேவக்குருக்கள்.

செ.இராசரட்ணம்
(SRP பம்புகள்)
நீர் இறைக்கும் இயந்திர உதிர்ப்பாக
உற்பத்தியாளர்,
கே.கே.எஸ்.வீதி,
தாவடி, கோண்டாவில்.

சுவாமி பால சுவாமியார்
(பாம்பன் சுவாமிகள் சிஷ்யன்)
ராமநாதபுரம் தமிழ்நாடு,
மாவட்டம்-1

VKS IYAR
அன் கோ
தெற்கு வீதி,
மாவிட்டபுரம்
கந்தசுவாமி கோயில்.


மீண்டும் மாவைக் கந்தன் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று பஞ்சரத பவனியாகவரும் கந்தனைக்காண திருப்பணி உதவிசெய்ய விரும்புபவர்கள் கீழ்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்

மஹாராஜஸ்ரீ ந.ஐ.இரத்தினசபாபதிக் குருக்கள், ஆதீனகர்த்தா பிரதமகுரு, ஸ்ரீகந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், ஸ்ரீலங்கா. தெ.பே: 0213210349

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசுவாமி கோயில் சிறப்புமலர் – 29.07.2011





நெறிகளுக்கு யோக்கியமற்ற ஈனர்கள் இடித்துப் பொடியாக்கியுள்ளார்கள். கீரிமலை, மாவிட்டபுரம், திருக்கேதீஸ்வரம் இன்னும் ஆலயங்களும் இடிபாடுக்குள் திட்டமிட்ட செயற்பாடுகளால் பெருஞ் சேதங்களுக்காளாயின. இருப்பினும் சைவமக்கள் உள்ளங்களை எவராலும் இடித்துப் பொடியாக்க இயலவில்லை. ஏனெனில் சமயக் குரவர்கள், சமயத் தொண்டுகளைக் கிரமாகப் பேணி ஏனையோருக்குப் போதித்து முன்னெடுத்தவர் களுடைய ஆசிகளாலும் நாம் செய்த தான, தரும புண்ணியங்களாலும் நன்னெறிபோற்றி வாழ்ந்த வாழ்க்கைகளின் பயனாகவும் இன்னும் பல பேறுபெற்ற புண்ணியங்களாலும் அனைவரது சிவ சிந்தனைகளை அழிக்கவும் இயலவில்லை என் செய்வது அதர்மத்தை எதிர்த்து தர்மத்தைக் காக்கவேண்டுமே. எனவே சைவ ஆலயத்தில் நித்திய, நைமித்திய, காமிய பூசைகள், உற்சவங்களை நடத்த வேண்டிய அனுசரணைகள், தேர், சம்பரம், வாகனங்கள், காணாமல் போயிருக்கும் உற்சவ மூர்த்திகளுடன் 150 கிலோ பெறுமதி வாய்ந்த உலகப் பிரசித்திபெற்ற வெள்ளிக்கொடி ஸ்தம்பக் கவசங்கள் என்பவற்றைச் சேகரித்து பழைய ஸ்தானத்தில் கோயில் செயற்பாடுகளை ஒழுங்கு படுத்த வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்துள்ளது. இவற்றுக்கு அடியார் பெருமக்களின் உளங்கனிந்த ஆதரவுகள் வேண்டப்படுகின்றன. சமுத்திரத்திலிருந்து நீர் நீராவியாக வானுயர்ந்து அங்கிருந்து சிறு சிறு துணிகளாகச் சேரும் நீரே பெருவெள்ளம்- இந்த உலகத்தில் உள்ள சைவ மக்கள் மனம் வைத்தால் அவர்களது எண்ணங்கள் வான் தேவர்களிடம் சென்று அந்தத் தேவர்கள் மூலமாகவும் வேண்டிய வளங்கள் வெள்ளம்போல் பெறலாம். இவ்வாறு யசுர்வேத வாக்கியம் கூறுகிறது. தேவர்களது [illegible]களுக்காகவே இந்தப் பூவுலகில் ஆலயங்கள் தோறும் யாகங்களும் நடைபெறுகின்றன. எனவே அடிபோற்றி அல்ல முடிசூட்டவல்ல அடியார்க்கு நல்ல பெருமானாக அமைந்த இந்த ஆலய மாவைக்கந்தன் கொலுவீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்தலமுமாயிற்று. சைவர்களது சமய, சமூக,கலை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாத்து அவற்றை முன்னெடுத்ததுச் செல்ல அதற்கான வழிமுறைகளையும் ஆற்றுப்படுத்தி கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் வகையில் அனைத்துச் செயற்பாடுகளும் இந்த ஆலய நடைமுறைகளில் வகுக்கப்பட்டுள்ளன. எனவே இத்த கைமையான இந்த ஆலயத்தைச் சீராகவும் சிறப்பாகவும் தெய்வீக மாகவும் வளர்ச்சி பெறச் செய்ய வேண்டுமென ஒரு கால் மனதில் சிந்தித்து அயலவர்களையும் அவ்வாறு சிந்திக்குமாறு ஆற்றுப்படுத்தி உற்சாகமூட்டி அதற்கமைவாக உங்கள் கைங்கரியங்களையும் உதவுமாறு இத்தால் விண்ணப்பிக்கிறேன். பிறப்பு, வளர்ப்பு,மூப்பு,இறப்பு எனும் சுழற்சிக்குள்தான் மனிதன் வாழ்வு அமைகின்றது என்பதுதான் உண்மை. இந்தப் பிறப்பு, இறப்பிற்கிடையே ஆற்றும் சேவைகள் தொண்டுகள் தான் தர்மங்களாக அமைந்து எமது ஆகாமிய வாழ்வுக்கு துணைதரும். இதனைச் சகல சாஸ்திர நூல்களும் எடுத்துக் கூறுகின்றன. இந்தவகையில் தங்களையும் சிவபுண் ணியச் செயல்கள் மூலம் தர்மங்களைச் செய்து இன்புறுக என ஆற்றுப்படுத்தும் தொண்டுகள்கூட அந்தணர்களாகிய எமக்குண்டு. எனவே மாவை ஆலயச் சிவத்தொண்டுகளை நினைத்து தகுந்தாற்போல் தர்மங்கள் ஆற்றுக என விண்ணப்பிக்கிறேன். தயை கூர்ந்து எமது அழைப்பை ஏற்று வேல் முருகன் புகழ் விளங்கும் நீள்பெருங்கோவிலைத் தன்னகத்தே கொண்டிருக்கும் மாவைக் கந்தனது திருவருளுக்கும் பாத்திரமாகுக எனவும் வேண்டுகிறேன். ஆகவே ஒரு விநாடி முருகப்பெருமானை மனதில் தியானித்து உங்களது விருப்பத்துக்கு அமைவாக எமக்காதரவு தந்து எமது முயற்சிக ளுக்கு உதவுமாறு இத்தால் இரந்து நிற்கிறேன். இதற்காக உங்களுக்கு சகல ஐஸ்வர்யங்களையும் மாவை முருகப்பெருமான் தந்துதவ வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன். மீண்டும் ஆசீர்வதித்து தங்களது அன்பான பேராதரவுகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அயிலும் மயிலும் அறமும் நிறமும்
அழகுமுடைய பெருமான் மாவைக்கந்தனை நினைந்து உதவுக
வீரபாகு தேவர் முருகப் பெருமானிடம் வேண்டிய வரம்போல் நாமும்
பல வரங்களைப் பெற்றுய்வோமாக
கோல நீடிய நீதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலையிந்திரரை சிலைக்கனவிலும் வேஃகேன்
மாலயன் பெறுபதத்தையே பொருளென மதியேன்
சால நின்பதந்தன்பையே வேண்டுவன்றமியேன்

கந்தபுராணம்

## மாவைக் கந்தனின் அருளாட்சி...

மாருதப் புரவீக வல்லியின் குதிரை முகம் நீங்கிய
மாவிட்டபுரம் பதிதனிலே அபிடேகக் கந்தனாய்
அருட்காட்சியளிக்கும் ஆறுமுகனே! வெள்ளி வேல் தாங்கும் உன்
கரங்களால் இறைஞ்சி நிற்கும் பக்தர் கோடிக்கு எல்லையிலா
கருணைதனை அள்ளி வழங்கும் எழில் வீரா!
நம் அவலங்கள் அடியோடு மண்ணிலே மறைய கோடிமுறை
உமைப் பணிந்தோம் தத்தம் இடத்தில் தமிழர் நாம்
மீண்டேகி சித்தம்களிக்க உனைத் தேடி வந்தோம்
மீண்டும் நீ பஞ்சரதப் பவனி வந்து எமக்கு அருளாட்சி செய்திடுவீர்.

ஆரணி.

## தேரேறி வருவாயெம் மாவையழகா

அமரர்தமை வாட்டிவதை செய்தகோலம்
அகலாத துயராலே தினமும் வாடி
இமவான்தன் மகளுக்கும் மகனாய்வந்த
இன்பநெடு வேலோனே காங்கேயனே
மாவையினில் எம்மிடர்கள் தீர்க்கவென்றே
மாருதப் புரவீக வல்லிதந்த
சிவைமைந்தா சிங்கார வேலாவெங்கள்
திருவிடத்தில் தேரேறி வருவாயப்பா

ஆறுபடை வீடுடைய அழகன் நீயே
அன்றமரர் குலம்காத்த பெருமான் நீயே
வீறுடனே வருசூரன் உடலை வீழ்த்தி
வீரமயில் வாகனமாய்க் கொண்டதீரா
ஆறுதலை யழகனேயென் அப்பாநீயும்
ஆனந்த மானமயில் மீதிலேறி
கூறுமிரு மாதரொடும் குன்றாவருளை
நல்கியுமே நற்றேரில் வருவாயப்பா

சு.குகதேவா, தெல்லிப்பழை.

## செஞ்சொற் செல்வரின் செய்தி



வரலாற்றுப் பெருமை மிக்க உன்னத திருக்கோயில் மாவைக்கந்தன் ஆலயம். தமிழ்வேந்தர் காலத்துத் தலையாய கோயில். சோழர்கள் நினைவு அர்ப்பணமாக எழுந்த அடையாளச் சின்னம். கடந்த காலப் போரில் அழிந்து அநாதரவாகிய இந்தக் கோயிலை மீள எழுச்சிபெற உழைத்தவர் அமரர் மகாராஜ் து.சண்முகநாதக்குருக்கள் அவர்கள். சைவ மக்களே! சைவத் தமிழரின் வரலாற்றுக் கோயிலை மீளவும் கட்டியெழுப்ப உங்கள் உதவிகளை வழங்கி உறுதுணை செய்யுங்கள். பஞ்சரத பவனி நடைபெற்ற கோயில். எல்லாத் திருத்தேரும் உருக்குலைந்து காட்சியளிக்கிறது. வெள்ளிக் கொடித் தம்பத்தில் கொடியேறிய கோயில், அனைத்தும் இழந்த நிலையில் மீளக் கோயிலை நிர்ணயம் செய்து முழுமைப்படுத்த வேண்டிய நிலையில் ஆலய அறங்காவலர்கள் காத்திருக்கிறார்கள். மாவைக் கந்தனின் திருவருள் அறியாதவர்களில்லை. அனைத்து அடியவர்களும் தூய எண் ணத்தோடு மாவைக் கந்தன் திருப்பொலிவு காண உழைக்க வேண்டும். திருத்தேர் நாள் அருள் கொடுக்கும் ஆறுமுகனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

ஆறு.திருமுருகன், தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

769 சிற்றூர்திச்சேவை
சங்க உறுப்பினர்கள்,
மாவிட்டபுரம்.

ஸ்ரீ முருகன் கபே
K.K.S. றோட்,
மாவிட்டபுரம்.

KANTHAN
STORES
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

தெல்லிப்பளை
MPCS
கே.கே.எஸ்.றோட்,
தெல்லிப்பளை.

ராஜா களஞ்சியம்
சகல விதமான பெயின்ட் வகைகள்,
ஹாட்வெயர் பொருள்கள் யாவும் ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு.

காங்கேசன்துறை சிமெந்து
தொழிற்சாலை அன்னதான
சபையினர்
மாவிட்டபுரம், கந்தசுவாமி கோயில்.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

டோரா, டூபாய் அலுமினியம் பிற்றிங்கில்
அனுபவமுள்ளவர்களினால் சிறந்த முறையில்
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
சீலன் அலுமினியம் பிற்றிங்
இல.54, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி.
தொ.பே: 0214902561, 0789119220

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்
அனைத்தையும்
ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
ஸ்ரீகாளி கிறீம் ஹவுஸ்
கட்டுவன் றோட்,
மல்லாகம்.

ஜெயா சிவில்
எஞ்சினியறிங்
கொன்ஸ்ரக்சன்.
K.K.S. றோட்,
தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 1954.04.14
இறப்பு: 2010.08.08



இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடமோ ஒன்றாகின - அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்....

இன்று (29.07.2011)
வெள்ளிக்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறும் ஆத்ம
சாந்தி நிகழ்வில்
கலந்துகொள்ளுமாறு உற்றார்,
உறவினர், நண்பர்கள்
அனைவரையும்
அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சின்னத்தம்பி துரைராசா**
திதி: சதுர்த்தசி

நி.மு- பலாலி தெற்கு, வயாவிளான்
த.மு- மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

மனைவி- சிவமலர்,
மகள்-மதனிகா

(சி/574731)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி





**அமரர் செல்லையா நடராஜா**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
திதி : சதுர்த்தசி (29.07.2011)

ஆண்டுகள் ஐந்தானாலும்
ஆறாத் துயரில் கண்ணீர்
சொரிய நின்று உங்கள்
நினைவால் வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

தோற்றம்: 05.08.1945
மறைவு: 23.07.2006

சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(சி/574718)

---

## காணி விற்பனைக்கு

மட்டுவில் சரசாலை வீதியில் துர்க்கையம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வழியில் 500 யார் தொலைவில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு: 0775924262

(6275) (45)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலிருக்கும்
லான் மாஸ்ரர் (SISANG) SI- 4
XXX உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0773464139 (யாழ்ப்பாணம்)

## கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

ஒரு கிழமை, 2 கிழமை, 3 கிழமை, 4 கிழமை ஊர்க்கலவன் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

விவரங்களுக்கு: கிருஷ்ணா பாம்
S. கிருஷ்ணகுமார், T.P. 0772338084
மானிப்பாய். (சி/57473) (25-53-45)

## நாய் விற்பனைக்கு

அல்சேசன் பெண் நாய், வயது 3
விற்பனைக்குண்டு

தொடர்பு: 0777245077

## காணி விற்பனைக்குண்டு

உடுவில், ஆலடிக்கு அருகில் டிரான்ஸ் போமர் வீதியில் ஈச்சந்தனை வளவு 10 பரப் புக் காணி, கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778864348.(தரகர் தேவையில்லை)

## ஓம் சக்தி ஜோதிட நிலையம்

ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி
தொ.பே.: 0779759393
0756794959

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர், ஜோதிடம் என்பன நல்ல முறையில் கூறுவார்.
சந்திக்கும் நேரம்: காலை 7 மணி, இரவு 7மணி
தொடர்பு : அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி,
இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(6145)

---

## விற்பனையாகிறது

A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உகந்த வழிகாட்டி நூல்கள், மாதிரி வினாத்தாள்கள்

★ தமிழ் 12, 13 - 5 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்
புலவர் இளங்கோ - 490/-
★ பொருளியல் - 3 மாதிரி வினாத்தாள்கள்
விரிவான விடைகளுடன் எஸ்.ஸ்ரீராம் - 350/-
★ பொருளியல் அறிமுகம் 2-2 டனி அத்தப்பத்து - 450/-
★ வணிகக்கல்வி 13-1 எஸ்.சிவேசன் - 300/-
★ பொதுச் சாதாரணப் பரீட்சை வினாத்தாள் வி.தபேந்திரன் - 50/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொடர்புகளுக்கு :

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
இல.234, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2573

**லங்கா புத்தகசாலை**
F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர,
கொழும்பு - 12. தொ.பே: 0112341942

(574706)

---



## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி

திதி: அபரபக்க
சதுர்த்தசி 29.07.2011

மனம் மகிழ:
13.08.1946

நெஞ்சம் நெகிழ:
10.07.2010

**திருமதி பாலசுப்பிரமணியம் நாகம்மா**

ஓடிப்போனதம்மா ஒரு வருடம் ஒரு கணமும் உங்களை மறந்ததில்லை நாம் இங்கு - அம்மா என்று அழைப்பதற்கு யாரும் இல்லை ஆறாது தவிக்குதம்மா எங்கள் உள்ளம் அன்பு தவழும் உங்கள் முகம் அதை நினைக்கையில் துடிக்குதம்மா எங்கள் மனம் உங்கள் நினைவைச் சுமையாக்கி விட்டு வந்த கடன் முடித்து வானுறையச் சென்ற எங்கள் குடும்பக் குலவிளக்கை என்றென்றும் நினைத்திருக்கும்

விளானை, களபூமி,
காரைநகர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(6259)

---

## ஈர விழிகளுடன் ஆண்டு இரண்டு..
29-07-2011

**செல்வி அமலின் குயிலினி மங்களதாஸ்**

துளிராய் 1986.04.05
விதையாய் 2009.07.29



எங்கள் அன்புச் செல்வமே..
எமையெல்லாம் தவிக்க விட்டு
எங்கே சென்றாயம்மா?
சித்திரை மாதத்தின் சித்திரமே,
காலமெல்லாம் சிரித்திருப்பாய் என
கற்பனைகள் பல எண்ணி,
உன் காட்சிகளைக் காண்பதற்காய்
கனவு பல கண்டிருந்தோம்.
காலனவன் கபடத்தால்
கண்ணீரால் நனைகின்றோம்.
உன் ஆன்மா இறைவனோடு
ஒன்றித்திருக்க பிரார்த்திக்கின்றோம்..



இவர் இறைவனோடு மகிழ்ந்திருக்க வேண்டி
றக்கா வீதி புனித திரேசாள் ஆலயத்தில்
இன்று (29-7-11) பி.ப. 4.45 மணிக்கு
ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து
கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இ. மங்களதாஸ்
இல.5, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/6195)

---

## Calling for Tender
## Teaching Hospital, Jaffna

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00 am on 15.08.2011. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 01.08.2011 on payment on non refundable deposit.

| No | Nature of Work | Grade | Non Refundable Deposit |
|---|---|---|---|
| 01 | Repairs of Dental Clinic roof | C9 | Rs.1,000 |
| 02 | Repairs of SHO Quarters Male toilet stage 1 | C8 | Rs.1,500 |
| 03 | Renovation of SHO Quarters tiling Work. Male site - stage 2 | C8 | Rs. 1,500 |
| 04 | Renovation of SHO Quarters Male site Aluminium, Electrical & Roofing Work - stage 3 | C9 | Rs.1,000 |
| 05 | Renovation of SHO Quarters Male site painting Work - stage 4 | C9 | Rs.1,000 |
| 06 | Renovation of SHO Quarters Female toilet - stage 1 | C9 | Rs.1,000 |
| 07 | Renovation of SHO Quarters Female site tiling Work - stage 2 | C8 | Rs. 1,500 |
| 08 | Renovation of SHO Quarters Female site Aluminium, Electrical & Roofing Work. - stage 3 | C9 | Rs. 1,000 |

02. Tenders will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.

03. Tender forms are issued only to the contractor who has valid registration in Grade C 8 / C9 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD criteria and valid membership of National Constructors Association of Sri Lanka (NCCASL)

04. Sealed Tenders may be dispatched either by registered post or be hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00 am on 15.08.2011.

05. Tender Documents may be inspected free of charge at the Residence Engineer`s Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

The Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital
Jaffna.

(C/574729)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலயம்

தென்மராட்சிப் பிரதேசம் சைவத் திற்கும் பக்திக்கும் சிறப்புமிகுந்த பகுதியாகும். எந்தவொரு கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் இங்கு ஆல யம் இல்லாத இடமே கிடையாது. ''கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம்'' எனும் முதுமொழிக் கமைய தாங்கள் வாழும் பகுதிகளில் அல்லது தங்கள் குடும்பத்துக்கென்றே ஆலயம் அமைத்து வழிபடும் பெருமை மிக்கவர்கள் தென்மராட்சி மக்கள்.



இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் நுணாவில் மத்திய பகுதியில் வைரவர் கோயில் ஒன்று வடக்கு நோக்கி ''கிராதியடி வைரவர் கோயில்'' என்ற பெயரோடு சிறு குடிலாக வெள் ளிக்கிழமை தோறும் விளக்கு வைத்து வணங்கும் ஆலயமாக உருவாக்கப் பட்டது. இந்த ஆலயத்தைச் சேர்ந்த நிலபுலங்கள் நுணாவில் கிழக்கில் கத்தாப்பு மரத்தடி என்னும் பகுதியில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த அந்தணர் குலத்தவருக்கும் சொந்தமாக இருந்தது. இந்தப் பகுதி வாழ் மக்களும் அந்தணர்களும் வைரவர் கோயி லில் விளக்கு வைத்து வணங் கியும் விசேட காலங் களில் பொங்கல் பூசைகள் செய்து வழிபட்டு வந் தனர்.

இவ்வாறு பூஜித்து வந்த அந் தணர் பரம்பரை யில் வந்துதித்தவர் ஸ்ரீசந்தன ஐயர் என்பவர். இவரும் தமது மூதாதையர் போன்று வைர வப் பெருமான் மீது மிகவும் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வந்தார். தமது காலத்தில் குடிசையாக இருந்த வைரவர் ஆலயத்தில் தமது செல வில் வலதுபுறம் விநாயகருக்கும் இடது புறம் முருகப் பெருமானுக்கும் நடுவில் வைரவப் பெருமானுக்குமாக ஓர் இடத்தில் மூன்று ஆலயங்களையும் அமைத்து நித்திய பூஜை வழிபாடு கள் நடத்தி வந் தார். இவரது காலத் தில் இவர் குலத் தில் வழிவந்த ஒரு வருக்கு இறை வன் கனவில் அருள் பாலித்து தற் பொழுது முருகன் ஆலயம் அமைந் துள்ள இடத்தில் ஞானசத்தியாகிய வேலுடன் ஓர் வயோதிபர் உட்கார்ந் திருப்பதைக் கண்டார். அதன்படி அந்த இடத்தில் ஓர் முருகன் ஆலயம் அமைக்க வேண்டும் எனும் எண்ணம் மனதில் இருந்தும் பொருள் இல்லாத காரணத் தால் அந்த இடத்தில் முருகனுக்கு ஓர் ஆலயத்தை அமைக்கத் தொடங்கி சிறிது சிறிதாக அதற்கு வேண்டிய திருப் பணிகளை மேற்கொண்டு வந்தார்.

சந்தண ஐயருக்கு வயது சென்ற தால் அவரது பிள்ளைகளான சபாரத் தின ஐயர், குமாரசாமி ஐயர், பொன் னுத்துரை ஐயர் ஆகியோர் ஆலய திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். இவர்கள் தொழில் வளம் கருதி ஒவ்வொருவரும் ஒவ்வோர் திசையாகச் செல்ல அந்த இடத்துக்கு மார்க்கண்டேய ஐயர் என் பவர் ஆலய பூஜைகளைச் செய்து வந்தார்.

இந்தப் பகுதியில் உள்ள மக்களின் தெய்வ வேண்டுதல்களையும் இவரே

**ஐயந்தன்**

ஆலயத்தில் நிறைவேற்றிக் கொண்டு டிருந்தார். இவரது காலத்தில் பெரிய வர்களின் பக்தி மேலீட்டினால் தெய்வ தரிசனங்கள் கிடைக்கப்பெற்றன. அந்த வகையில் தற்போது அம்பாள் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் பூரண கும்பத் துடன் ஓர் வயோதிப அம்மையார் வீற்றி ருந்த காட்சி தென்பட்டது. அந்த இடத்தில் அம்பாளுக்கு ஆலயம் அமைத்து பூரண கும்பம் வைத்து அம்பாளை வழி பட்டு வருகின்றனரர். வைரவருக்கு பொங் கல் வழிபாடு செய்யும் காலத் தில் அடியார் கள் அம்பிகையையும் மறப்பதில்லை.

இந்த வழிவந்த அந்தணர் பரம்பரை யில் வந்த சபாரத்தின ஐயர் கண்டி மாநகர் கதிரேசன் ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசைகளை தனது சகோதரர் களுடன் சேர்ந்து நடத்தி வந்தார். பொருள் வரவு குறைந்த அந்தக் காலத்தில் தமது குடும்பச் செலவுகளுடன் தமது பரம்பரை ஆலயத்தின் நன்மை கருதி உழைப்பின் ஒரு பகுதியை வைரவர் ஆலயத்துக்கு அர்ப்பணித்து வந்தனர். ஆலயத்தை பெரிய அளவில் சிறப்பாக அமைக்க முடி யவில்லையே என்ற கவலை அவ ருக்கு இருந்து கொண்டே இருந் தது.

காலம் செல் லச் செல்ல ஆலய வளர்ச்சியும் சிறிது சிறிதாக முன்னே றிக் கொண்டிருந் தது. சபாரத்தின ஐயர் காலத்தில் அவரின் சகோ தரர்கள், பிள்ளை கள் வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல சபாரத்தின ஐயர் குடும்பமே இந்தக் கோயிலை பராமரிக்க வேண் டிய பொறுப்பு ஏற் பட்டது. அவரது மூத்த மகனான நாகேஸ்வர ஐயர் தெய்வ நம்பிக் கையும் பக்தியும் கொண்டவர். இவருக்கு இந்த ஆலயத்தை தமது முன்னோர் கூறி யபடி நன்றாக அமைக்க வேண் டும் என்ற எண் ணமும் வேரூன் றியிருந்தது. அத் துடன் கண்டி கதி ரேசனைப் பூஜை செய்யும் பணி யினை பக்தியோடு செய்து கொண்டு அவன் அருளோடு கொடுக்கும் பொரு ளின் பெரும் பகு தியை ஆலயத் துக்குச் செலவிட்டு வந்தார்.

(தொடரும்)


## நன்றி நவில்கின்றேன்

### உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்

**2011 ஜூலை 23**

வலி.தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் 15 ஆம் இலக்க வேட்பாளராக போட்டியிட்ட **என்.வி.சுப்பிரமணியம்** (நுணசை வீதி,மாதகல்) ஆகிய நான் மாபெரும் வெற்றி பெறுவதற்கு தங்களது பெறுமதி மிக்க வாக்குகளை அள்ளித் தந்துதவிய அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் தோளோடு தோள் நின்று வாகன மற்றும் பொருளுதவிகளைச் செய்த அன்பர்கள், நண்பர்கள், உறவுகள் மற்றும் உடன் பிறப்புக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த பலகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



என்.வி.சுப்பிரமணியம்
நுணசை வீதி, மாதகல்
தொ.பே: 0778588624

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2243 திகதி 27-07-2011

ஆங்கில எழுத்திற்கும் Z

வெற்றி எண்கள் 02 09 35 59

போனஸ் இல: 14

ஜக்பொட் பரிசு ரூ. 16,355,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 215545 | 20/- | 4,310,900/- |
| 2 இல | 15391 | 100/- | 1,539,100/- |
| 3 இல | 338 | 1,000/- | 338,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8668 | 40/- | 346,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 606 | 1,000/- | 606,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,355,125/- | - |
| 1 இல + போனஸ் இல | 10267 | 100/- | 1,026,700/- |
| 2 இல + போனஸ் இல | 493 | 500/- | 246,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 423 | 200/- | 84,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 10 | 1,500/- | 15,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | 251759 | | 10,363,520/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 341 | | 270,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 252100 | | 10,633,520/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஜூலை 30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 16,943,925/-

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை

ரத்தரங் வரம

வெற்றி எண்கள் 04 06 48 62

ஆங்கில எழுத்திற்கும் A

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 340 | 500/- | 170,000/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுண் தங்கக்காசு 35 | - |

இந்த சனிக்கிழமை தங்கக் காசுப் பொதி 37 தங்க நாணயங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை

## எங்கள் அம்மாவின் முதலாம் ஆண்டு நினைவு



### திருமதி கந்தையா பூரணம்

திதி: சதுர்த்தசி (29.07.2011)

"எங்கள் அன்னையே!
பிரிவின் வலி கொடியது
பிரிந்தபின் நினைவின்
வலியும் கொடியது"

தாயே!
உண்ணாமல், உறங்காமல்
எங்களுக்காக வாழும்
காலம்வரை வாழ்ந்த உங்களை
நினைக்கையில்
கண்களும் கண்ணீர்க்
கதைகள் சொல்லுதம்மா!

அம்மா!
இன்று ஆண்டு ஒன்று பூர்த்தியிலே
கை கூப்பிச் சிரம் தாழ்த்திச்
செலுத்துகின்றோம் கண்ணீரால்
எங்கள் அஞ்சலியை
ஏற்று எங்களை ஆசீர்வதித்திடுங்கள்.

அம்மா!
இறைவன் பாதக்கமலங்களில்
உங்கள் ஆத்மா சாந்தி பெறுக!

உங்கள் நினைவுடன்:
கணவர், மகன்,
மகள்மார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I,000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் கொழும்பு தமிழ்ப் பாடசாலைகள் புறக்கணிப்பு

## அனுமதிக்க முடியாது என்கிறார் பிரபா கணேசன் எம்.பி.

கொழும்பு,ஜூலை 29

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத் தில் எந்தவொருதமிழ்ப் பாடசாலையும் உள்ளடக்கப்படவில்லை. இதனை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது .

-இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தமிழ், சிங்களம், முஸ்லிம் பாடசாலைகள் உள்ளடக்கப்படவேண்டும் என உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கமைய, இந்தத் திட்டத்தில் கொழும்பு தெமட்டகொட விபுலானந்தா பாடசாலையும், கொட்டாஞ்சேனை சாந்த அந்தோனியார் ஆண்கள் பாடசாலையும் உள்ளடக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சுக்கு நான் சிபாரிசு செய்திருந்தேன்.

சிபாரிசு செய்ததையடுத்து, கொழும்பு வலயத்திலிருந்து மாகாணக் கல்வி அமைச்சுக்கு இவ்விரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட போதிலும் மாகாணக் கல்வி அமைச்சில் இவ்விரு பாடசாலைகளும் நீக்கப்பட்டு இதற்குப் பதிலாக சிங்களம், முஸ்லிம் பாடசாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. சிறுபான்மை பாடசாலைகளுக்கு இடமளிப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொழும்பு வலயத்தில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் மாத்திரமே இந்தத் திட்டத்துக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. எந்தவொரு தமிழ்ப் பாடசாலைகளும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பாடசாலைகளின் விகிதாசார அடிப்படையில் நான்கு தமிழ்ப் பாடசாலைகளும், நான்கு முஸ் லிம் பாடசாலைகளும் சேர்க்கப்பட வேண்டும். எனினும், இந்த விடயத்தில் மாகாண கல்வி அமைச்சினால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன,பிரதியமைச்சர் விஜித முனிசொய்சா ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்- இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தன்னை விடுவிக்கக் கோரி

# முன்னாள் போராளி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூலை 29

தன்னை விடுதலை செய்யுமாறு கோரி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்தச் சந்தேகநபர் தனது சட்டத்தரணி ஊடாக உயர் நீதிமன்றில் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேகநபருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது.

இதனால் சந்தேகநபரின் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கொழும்பு உள்ளிட்ட பொது மக்கள் நிறைந்துள்ள பகுதியில் நாசகார செயல்களில் ஈடுபட்டார் என குற்றம் சுமத்தப்பட்டு தீவிரவாத தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வாகரையில் பொறிவெடிகள் மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 29

வாகரையில் ஆறு பொறிவெடிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை படையினரால் மீட்கப்பட்டன. பனிச்சங்கேணியிலுள்ள பாலத்தை அண்மித்த பிரதேசத்தில் காணியொன்றை துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டவேளை இந்த பொறிவெடிகள் எடுக்கப்பட்டுள்ளன. (ச)

# பல்கலைத் தலைவர்கள் ராஜினாமாச் செய்ய தற்காலிகத் தடை ஆணை நீடிக்கப்பட்டுள்ளது

கொழும்பு,ஜூலை29

பல்கலைக்கழக திணைக்களத் தலைவர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வதை தற்காலிகமாக தடைசெய்யும் ஆணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

பல்கலைக்கழக திணைக்களத் தலைவர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்வதற்கு எதிராக மூன்று பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றபோதே இந்தத் தடையுத்தரவு நீடிக்கப்பட்டது.

பல்கலைக்கழக திணைக்கள தலைவர்களின் ராஜினாமா கடிதங்களை ஏற்பதற்கு பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழக பேரவை அங்கத்தவர்களுக்கு விதித்திருந்த தடையையும் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர, வயம்ப, றுகுணு ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறையில் இருந்தபடியே கப்பம் கோரல் அதிகரிப்பு

சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் குற்றவாளிகள் அங்கிருந்து கொண்டே கப்பம் கோரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த புறநகர்ப் பகுதிகளில் இவ்வாறு கப்பம் கோரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுத்து லட்சக்கணக்கான பணம் கப்பமாக கோரப்படுவதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றவாளிகளின் மிரட்டல்களுக்கு அஞ்சி பல வர்த்தகர்கள் கப்பமாக கேட்கும் பணத்தை செலுத்தி விடுகின்றனர். கப்பம் கோரும் நபர்கள் தங்களது வங்கிக் கணக்கிற்கு பணத்தை வைப்புச் செய்யுமாறு கோருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயலக்ஷ்மி கனகரட்ணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயலக்ஷ்மி கனகரட்ணம் 26.07.2011 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கனகரட்ணத்தின் (இளைப்பாறிய வங்கி முகாமையாளர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - யோகாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கிரிதரன் (Ashok steel Industries), ஜெயரஜனி (Australia), சுபாஜினி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் பாலகுமாரன் (Attorney - at - law), காலஞ்சென்ற விக்னராஜா மற்றும் வரதலக்ஷ்மி, யோகலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, இந்திரலக்ஷ்மி, சிவகுமாரன் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ராஜசுந்தரம், ராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் செந்தூர்கதிர், பிரபா சங்கர், Dr.அருள்லிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் இந்திகா, சுவஸ்திகா, கீர்த்திகா, ஷயன், நித்தியலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது No.9, Meford crescent, Dehiwela இல்லத்தில் 28.07.2011 இலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 31.07.2011 அன்று இறுதிக்கிரியைகள் நடைபெற்றபின் காலை பொரல்லை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கிரிதரன்

தொழில் புரிவோர்க்கான மற்றும் பாடசாலை மாணவர்களுக்குமான பகுதி நேர கணினி வகுப்புக்கள் ஆரம்பமாகிறன

IDM
Affiliated Campus
Jaffna Branch

* DIBM
* Dip in ICT
* CCNA

பதிவுகளுக்கு முந்துங்கள்
# 216 Navalar Road, Jaffna, Sri Lanka
T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

ජාතික සම්පත
ஜாதிக சம்பத Jathika Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் - 143
திகதி - 27.07.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து C | அதிர்ஷ்ட இலக்கம் 09 | வெற்றி இலக்கம் 7 3 8 5 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 09 | 7 | 3 | 8 | 5 | 2 | ரூ. 22,570,263.00 | பரிசு - |
| 1 பரிசு | | 09 | 7 | 3 | 8 | 5 | 2 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 7 | 3 | 8 | 5 | 2 | ரூ. 100,000.00 | பரிசு 05 |
| 3 பரிசு | | | | 3 | 8 | 5 | 2 | ரூ. 10,000.00 | பரிசு 41 |
| 4 பரிசு | | | | | 8 | 5 | 2 | ரூ. 1,000.00 | பரிசு 385 |
| 5 பரிசு | | | | | | 5 | 2 | ரூ. 50.00 | பரிசு 3,792 |
| 6 பரிசு | | | | | | | 2 | ரூ. 20.00 | பரிசு 36,557 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 7 | 3 | 8 | 5 | | ரூ. 1,000.00 | பரிசு 39 |
| 8 பரிசு | | | 7 | 3 | 8 | | | ரூ. 100.00 | பரிசு 388 |
| 9 பரிசு | | | 7 | 3 | | | | ரூ. 50.00 | பரிசு 3,859 |
| 10 பரிசு | C | | | | | | | ரூ. 20.00 | பரிசு 15,152 |
| 11 பரிசு | C | 09 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1,730 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,962,530.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சுப்பர் பரிசு
ரூ. 23,102,666.00

SHAMROCK - யாழ்
A/L 2013, 012
கலை, வர்த்தக, கணித, விஞ். பிரிவுகளுடன்
Eng. & G.I.T
புவியியல்
S. ஜீன்சியா B.A. (Geo.Spl)
அரசியல்
* Eng. med. 6 to 11
* Eng lit. 10 & 11

Hunters
Trusted Quality Since 1911
ஹண்டர் அன்ட் கம்பனி பிஎல்சி
மூன்று நாள்
சேல்
சர்வதேச புகழ்பெற்ற தயரிப்பு வகைகள் குறைக்கப்பட்ட விலைகளில் வீட்டு மற்றும் தோட்ட தயாரிப்புகள், கைத்தொழில் மற்றும் மென் பொறியியல் தயாரிப்புகள், சைக்கிள்கள், உபகரணங்கள்
2011 ஜூலை 28, 29, 30
காலை 9 - மாலை 7
at the following showroom
யாழ்ப்பாணம்
320 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை: 021-4923112.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு: தமிழின விடியலுக்கான ஒளிக்கீற்று

## சந்திரிகாவின் கருத்துக்கு நம்பிக்கை தெரிவிக்கிறார் திருமாவளவன்



சென்னை,ஜூலை29

தமிழர்கள் மீது கருணை கொண்டு தமிழர்களுக்குரிய அதிகாரங்களை பகிர்ந்தளிக்கலாம் என்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வெளியிட்ட கருத்து அதிர்ச்சியையும் அதேநேரம் தமிழ் இனத்துக்கு ஆதரவான நம்பிக்கை ஒளிக்கீற்றையும் ஏற்படுத்தியுள்ளது என்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்க நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழு இலங்கை அரசுக்கு வழங்கி வந்த நிதி உதவியியை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென முடிவெடுத்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

இனப்படுகொலைக் குற்றவாளி கும்பலை போர் குற்றவாளிகளாக விசாரிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இந்த அறிவிப்பின் மூலம் இலங்கை அரசுக்கு எதிரான மனநிலை அனைத்துலக சமூகத்திடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிரான பொருளாதாரத் தடையாக இல்லாமல் போர்குற்றங்களை விசாரிப்பதற்குரிய ஓர் முன் நிபந்தனை அறிவிப்பாகவே விளங்குகிறது. எனினும் அமெரிக்க நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழு இத்தகைய முடிவெடுத்திருப்பதை விடுதலைச் சிறுத்தைகள் வரவேற்று பாராட்டுகிறது.

இந்த சூழ்நிலையில் இது தனிமனித அரசியலில் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவுகளா அல்லது சர்வதேச வலைப்பின்னலின் அடிப்படையிலான வெளிப்பாடா என்பது தெரியவில்லை. ஆயினும் சந்திரிகாவின் அறிவிப்பும் அமெரிக்க நாடாளுமன்றத்தின் முடிவும் சற்று ஆறுதல் அளிக்கிறது.

இதிலிருந்து தமிழ் இனத்துக்கு ஆதரவான நம்பிக்கை ஒளிக்கீற்று பிறந்துள்ளது. குற்றவாளிகளை அனைத்துலக நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தி, விசாரித்து தண்டிக்க முடியும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# இலங்கை தமிழர் படுகொலை குறித்த இறுவட்டுக்களை ம.தி.மு.க. விநியோகம்

இலங்கை தமிழர் படுகொலை தொடர்பான இறுவட்டுகளை பொதுமக்களிடம் இலவசமாக ம.தி.மு.க.வினர் வழங்கினர்.

இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட போரில் சிங்கள ராணுவத்தின் தாக்குதலில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். போரின் போது சரணடைந்த விடுதலைப் புலிகளை நிர்வாணமாக்கி சித்திரவதை செய்து படுகொலை செய்தனர்.

இலங்கை ராணுவத்தின் இத்தகைய செயல்களை சனல் 4 என்ற தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அதேபோல் இலங்கையில் போர் குற்றம் நடைபெற்று உள்ளது என்று ஐ.நா. அறிக்கை வெளியிட்டது.

இதன் அடிப்படையில் ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோ இலங்கை தமிழர் படுகொலை குறித்த இறுவட்டைத் தயாரித்து வெளியிட்டார்.

இந்த இறுவட்டுக்களை தமிழகம் முழுவதும் ம.தி.மு.க.வினர் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றனர்.

திருச்சியில் நீதிமன்ற வளாகம் முன்பாக பொதுமக்களுக்கு இறுவட்டுகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ம.தி.மு.க. மாநில சட்டத்துறைச் செயலாளர் வீரபாண்டியன் தலைமை தாங்கினார்.

முதல் கட்டமாக 1,000 இறுவட்டுகள் விநியோகிக் கப்பட்டன. இதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை காந்தி சந்தைப் பகுதியில் வழங்கப்பட்டன.

# ஆசியாவின் உயரிய மகசேச விருதுக்கு 2 இந்தியர்கள்

ஆசியாவின் மிக உயரிய மகசேசே விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 5 பேரில் 2 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் புகழ்பெற்ற அதிபராக விளங்கியவர் மகசேசே.

1957 ஆம் ஆண்டில் இடம் பெற்ற விமான விபத்தில் பலியான அவரது பெயரில் ஆசியாவின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு ஆண்டு தோறும் இந்த விருது வழங்கப்படுகிறது.

ஆசியாவின் மிக உயர்ந்த விருதாகக் கணிக்கப்படும் நோபல் பரிசு அளவுக்கு இந்த விருது மதிப்புமிக்கது. இந்த ஆண்டுக்கான மகசேசே விருதுக்கு 5 பேரின் பெயர்களை விருது அறக்கட்டளையின் தலைவர் கார்மென்சிடா அபெலா, பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று முன்தினம் அறிவித்தார். பிலிப்பைன்சின் ஏ.ஐ.டி.எப்.ஐ. என்ற அறக்கட்டளை தலைவர் ஹசானின் ஜைனி, குறு நீர்மின் சக்தி தொழில்நுட்பத்தை பிரபலப்படுத்திய த்ரி மும்புனி ஆகியோரும், கம்போடியாவில் ஜனநாயகத்தை ஏற்படுத்த பாடுபடும் கவுல் பனா என்பவரும் இந்த ஆண்டின் மகசேசே விருது பெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



இந்தியாவுக்குச் சென்ற பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ரபானி கவுரை, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, டில்லியில் வரவேற்றார்.

# ஜெயலலிதா, நரேந்திர மோடிக்கு அல்-குவைதா கொலை மிரட்டல்

சென்னை,ஜூலை29

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி ஆகியோருக்கு அல்-குவைதா அமைப்பினர் கொலை மிரட்டல் விடுத்துக் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் புகழ்பெற்ற கேரள கோயில்களான குருவாயூர் கிருஷ்ணர் கோயில் மற்றும் ஸ்ரீபத்மநாபசுவாமி கோயில்களில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்போவதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதம் குருவாயூர் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மிரட்டல் விடுத்தவர்கள் தாம் அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். அதேநேரம் இந்தக் கடிதம் சென்னையிலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இருப்பிடத்திற்கு மேலும் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு இந்தக் கொலை மிரட்டல் கடிதம் குறித்த விவரம் அனுப்பப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவருக்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஈழ அகதிகள் 151 பேர் ஆந்திராவில் கைது

## சந்தேகத்துக்கிடமாகத் தங்கியிருந்தனராம்

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த 151 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உள்ளூர் மக்கள் கொடுத்த தகவலை அடுத்து துணி என்ற இடத்தில் லோவா என்ற மலைப் பகுதிக் கிராமத்தில் அமைந்துள்ள தலுபுலம்மன் ஆலயச் சுற்றாடலில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைப் பேசுவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

பத்து நாள்களுக்கு முன்னர் விசாகப்பட்டினத்தில் இருந்து வந்த இவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து உள்ளூர் பொலிஸார் விசாரணை நடத்திய பின்னர் குடிவரவு அதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பினர்.

இதையடுத்து சென்னை மற்றும் விசாகப்பட்டினத்தில் இருந்து சென்றுள்ள குடிவரவு அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை இவர்களிடம் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த இவர்களில் பாபா ராம்தேவ் ஆலயத்தில் புனர்வாழ்வு பெற்ற சிறுவர்களும் உள்ளடங்கியுள்ளனர் என்றும், மேலதிக விசாரணைகள் நடத்தப் படுவதாகவும் ஆந்திர பொலிஸார் கூறியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிலரிடம் மட்டுமே செல்லுபடியான கடவுச்சீட்டு இருந்துள்ளது. எட்டு கடவுச்சீட்டுகளை குடிவரவு அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதேவேளை, இதுகுறித்து பேட்டாபுரம் பொலிஸ் அதிகாரி கரனம் குமார் கூறுகையில்:

இவர்களில் பலர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா வந்து சென்னையைச் சுற்றியுள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்கள் என்றும், யாத்திரையாகவே இங்கு வந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# புலிகள் பயன்படுத்திய கார்? பொலிஸார் கைப்பற்றினர்

ராமேஸ்வரம்,ஜூலை29

விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களால் பயன்படுத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் கார் ஒன்று இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள ராமேஸ்வரம் நகரத்தில் வைத்து கியூ பிரிவுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்குத் தப்பிச் செல்கின்ற நடவடிக்கைகளுக்கு புலிகள் இந்தக்காரை பயன்படுத்தி இருக்கலாம் என்று பொலிஸார் பெரிதும் சந்தேகிக்கின்றனர். மேற்படி காரின் இலக்கம் கோயம்புத்தூரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸார் தீவிர புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

# ஈழமக்கள் இழந்த பூமியை மீட்டுக்கொடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிரதமரிடம் உலகத் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்தல்

டில்லி,ஜூலை29

ஈழ மக்கள் இழந்த பூமியை மீட்டுக் கொடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உலகத்தமிழ் கூட்டமைப்பு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மேற்படி சந்திப்பில் பின் வரும் விடயங்கள் அடங்கிய கோரிக்கை மனு ஒன்றைக் கையளித்துள்ளது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் தண்டிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். முள்ளிவாய்க்கால் போரின்போது கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழர்கள் இன்றும் முள்வேலிகளுக்குள் அவல நிலையில் உள்ளதை நீக்கி, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

போரில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு உரிய முறையில் மறுசீரமைப்புப் பணிகள், கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, போன்றவற்றை வழங்க வேண்டும். ஈழமக்கள் இழந்த பூமியை மீட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

தமிழக மீனவர்களை இலங்கைப் படையினர் தாக்குவதை நிறுத்த வேண்டும். இதற்கு இந்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். போன்ற கோரிக்கைகள் அந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சுமார் 15 நிமிடம் நீடித்த இந்தச் சந்திப்பில், மேற்கண்ட அனைத்துக் கோரிக்கைகளையும் பரிசீலிப்பதாக பிரதமர் வாக்குறுதி அளித்ததாகத் தெரிகிறது.

இந்தச் சந்திப்பின்போது உலகத் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் வா.மு. சேதுராமன், தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் தங்கபாலு, முத்தமிழ் பேரவை இரா.முகுந்தன், பெங்களூர் தமிழ்ச் சங்க மீனாட்சி சுந்தரம், உலகக் கவிஞர் பேரவையின் சீத்தா, மருத்துவர் காஞ்சி விமுனா மூர்த்தி, தமிழ்ப்பணி வா.மு.சே. திருவள்ளுவர் ஆகியோர் உடன் இருந்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாய் வடக்கு, கொடிகாமம்
# அருள்மிகு ஒட்டங்கேணி ஸ்ரீ மகா கணபதி ஆலய
## தேர்த்திருவிழா சிறப்புமலர் - 29.07.2011



### ஆலய மஹோற்சவக் குருக்களின் அருள் ஆசிச் செய்தி



" அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய தொப்பை அப்பனைத் தொழவினை அறுமே"

அருள் மிகு ஒட்டங்கேணி வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ மகா கணபதி ஆலய மஹோற்சவப் பெரும் சாந்தி விழாகடந்த 21.07.2011 ஆடித் திங்கள் 5ஆம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. இன்று மிகச் சிறப்பாக ரததோற்சவத் திருவிழா நடைபெறவுள்ளது. எம் பெருமான் ரதத்தில் ஆரோக ணித்து வீதி உலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். அடியார்கள் அனைவரும் பெருமானது நல்லருளாலே சகல ஐஸ்வரியங்களும் பெற்று மனமகிழ்ச்சியோடு பல்லாண்டு வாழப் பிரார்த்திப்பதோடு தேர்த்திருவிழா சிறப்புடன் நிகழ எனது அருள் ஆசிகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

" மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் "

குமாரவித்தக ஜோதி,
சுப்பிரமணிய ஏரகன்
சிவஸ்ரீ வெ. தில்லையம்பலக் குருக்கள்,
மஹோற்சவ பிரதமகுரு.

### காப்பு

கச்சாயூர் ஒட்டங்கேணி கணபதியே உன்னருளால்
மெச்சுபுகழ் வாழ்க்கை மேவிடுவோம் - இச்செகத்தில்
என்றும் நாமுன்னை மறவாது துதித்துவர
நன்றே நயந்தளிப்பாய் அருள்.

### விநாயகரின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்

எம் முன்னோர்கள் வழிபட்டு வந்த எங்கள் குலதெய்வமான ஒட்டங் கேணி விநாயகப் பெருமான் கொடியேற்றத் திருவிழா நடைபெற்று திருவிழாவின் உச்ச தினமான இன்று (29.7.2011) வெள்ளிக்கிழமை காலை ரததோற்சவ திருவிழா நடைபெறவுள்ளது. மெய்யன்பர் அனைவரும் கலந்து எம்பெருமானுடைய திருவருளைப்பெற்று நல்லாயுள் நற்சுகங்கள் பெற ஒட்டங்கேணி விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து அமைகிறேன்.

க. சுப்பிரமணியம்,
பரிபாலன சபைத் தலைவர்

### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



மெய்யடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஒட்டங்கேணி கணபதி மஹோற்சவ திருவிழாவில் பிரதம அர்ச்சகராகப் பணியாற்ற எம் பெருமான் திருவருள் பாலித்தமையை பெரும்பேறாகக் கருதுகிறேன். அடியார்களின் திருத்தொண்டும் திருப்பணிகளும் மேலோங்கி வருவதைக் கண்டு மன நிறைவடைகிறேன்.

எமது இந்த ஆலயம் மென்மேலும் வளர்ச்சியடையப் பிரார்த்திப்பதோடு அனைத்து அடியார்களும் எம்பெருமானின் திருவருள் பெற்று சகல செல்வங்களும் பெற்று நற்சுகத்துடன் வாழ எனது நல்லாசிகளை வழங்குவதில் மனநிறைவடைகிறேன்.

சி. சசிஐயா (சசி)

### திருவிழா சிறப்புறப் பிரார்த்திக்கின்றோம்

அருள் மிகு ஒட்டங்கேணி விநாயகப் பெருமானின் தேர்த்திருவிழா உபயகாரராகிய அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் பிள்ளைகள் சார்பாக தேர்த் திருவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மன நிறைவடைகின்றேன்.

எல்லாம் வல்ல ஒட்டங்கேணியான் திருவருளால் தேர்த்திருவிழாவைக் காண கோடி கண்கள் வேண்டும். " அரோகரா" என்ற ஒலியும் வானைப் பிளக்க வேத மந்திரங்களும் மங்கள வாத்தியங்களும் இசைக்க எம்பெருமான் திருத்தேரில் பவனி வரும் காட்சியைக்காண அனைத்து அடியார்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம். தொடர்ச்சியாக வரப்போகின்ற எல்லா வருடங்களிலும் தேர் உற்சவ விழா சிறப்புற அமைய எம்பெருமானின் திருவருள் கிட்ட வேண்டும் என்றும் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

அ. உருத்திரானந்தன்,
தேர்த்திருவிழா உபயகாரர், கச்சாய் வடக்கு, கொடிகாமம்.

### நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

பண்ணிசை பாடும் யாழ். நகர் தென்பால் தென்மராட்சி கொடிகாமம், கச்சாய் வடக்கில் அமைந்துள்ள இந்த ஆலயம் சகல வசதிகளும் கொண்ட ஆலயமாகத் திகழ்வதுடன், கடந்த ஆண்டு தொடக்கம் மஹோற்சவத் திருவிழா நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு இன்று (29.7.2011) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற தேர்த் திருவிழாவில் அனைத்து அடியார்களும் கலந்து வடம் பிடித்து தேர் இழுத்து சொல்லாலும், செயலாலும், எண்ணத்தாலும் ஒன்றுபட்டு நல்வாழ்வு வாழ எம் பெருமான் நல்லருளை நமக்கெல்லாம் அருள் பாலிக்கப் பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

சு.க. நவரத்தினம்,
பரிபாலன சபைச் செயலாளர்.

COLOMBO PEST CONTROL SERVICE



நிலக்கறையான், எலி, கரப்பெத்தான்துளம்பு, இலையான் ஆகியவற்றிலிருந்து விடுதலை வேண்டுமா இன்றே நாடுங்கள்.
COLOMBO PEST CONTROL SERVICE
இல. 527 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 0212207007
0777666684

கோயில் அபிஷேகப் பொருள்கள்
வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிறி வெற்றிலைக் கடை
சந்தை உட்புறம்,
கொடிகாமம்.

வதனி நகை மாடம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம். 22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
கண்டி வீதி, கொடிகாமம்.
0778002724

பலசரக்குப் பொருள்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
உதயகுமார் களஞ்சியம்
இல. 1, சந்தை உட்புறம்,
கொடிகாமம்.

சிற்றுண்டி வகைகளும், தேநீர், குளிர்பானங்களும் சுகாதார முறைப்படி பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
மயூரா உணவகம்
கண்டி வீதி, கொடிகாமம்.

பலசரக்குப் பொருள்கள் கட்டடப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
மணியம் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
கண்டி வீதி, கொடிகாமம்.
0777448329.

ஒட்டங்கேணி பிள்ளையார் அனைவருக்கும் அருள்பாலிப்பாராக
Milk White Soap Industries.
K.K.S. Road,
Jaffna.

இற்றைக்கு இரு தசாப்த காலமாக கொடிகாமப் பிரதேச மாணவர்களின் கல்விக்கு ஒளியூட்டி வருவது
கிருஷ்ணா கல்வி நிறுவனம்
(O/L- A/L) கலைப்பிரிவு வரையிலான அனைவருக்கும் திறமை மிக்க ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்பட்டு வருகின்றது.
கண்டி வீதி, கொடிகாமம்.

மின்சார உபகரணங்களும் கையடக்கத் தொலைபேசிகளுக்கும் யாழ்-கொழும்பு சொகுசு வாகன ஆசன பதிவுகளுக்கும், போட்டோப் பிரதி சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
ரூபன் எலக்ரிக்கல்ஸ்
இல.1, கண்டி வீதி கொடிகாமம்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான நவீனரக ஆடைத் தெரிவுகளை உங்கள் எண்ணம் போல் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள
"அருள் புடவையகம்"
கச்சாய் வீதி, கொடிகாமம்.

With the Best Compliments From
சிவகஜன் பதிப்பகம்,
காவிகோயில் வீதி,
கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்தின் தனிநாட்டுக்கு கோரிக்கை; அரபுத் தலைவர்களிடம் ஆதரவு கோரப்படுகிறது



ஜெருசலேம், ஜுலை 29 அரேபிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள்தான் பலஸ்தீன தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனப் பலஸ்தீன அதிகாரப்பூர்வ அதிபர் முகமது அப்பாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல்-பலஸ்தீனப் பிரச்சினை பல ஆண்டுகளாக நிலவி வருகிறது. மத்திய கிழக்கு நாடான இஸ்ரேல் ,சர்ச்சைக்குரிய பலஸ்தீன பகுதிகளை கடந்த 1967ஆம் ஆண்டு முதல் ஆக்கிரமித்து வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள ரமல்லாஹ், மேற்குக்கரைப் பகுதியான காஸா உள்ளிட்டவைகளை அடக்கிய பலஸ்தீனப் பகுதிகளைத் தனி நாடாக்க கோரிக்கை வலுத்து வருகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளும் இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்து வருகின்றன. இதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகூ, பலஸ்தீன சுதந்திரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையில் இஸ்ரேலில், பாலஸ்தீன எல்லைப் பகுதியில் குடியிருப்புப் பகுதிகளில் பெரும் இட நெருக்கடி ஏற்படுவதைக் கண்டித்தும், பாலஸ்தீன பிரச்சினைக்கு முடிவு காணக் கோரியும் இளம் இஸ்ரேலியர்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் கள் அமைதி வழியில் நேற்று முன்தினம் அறப்போராட்டம் நடத்தினர்.

முன்னதாக இந்தப் பிரச்சினைக்கு அமெரிக்காவின் அதிபர் ஒபாமா அரசு தகுந்த நடவடிக்கை எடுக்காமல் கைவிரித்துவிட்டது. பலகட்டப் பேச்சுக்கள் தோல்வியுற்றன. இற்கிடையே பலஸ்தீனம் தனிநாடு தொடர்பான பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு தொடர்பாக ஐ.நா.வின் பொதுச்சபையில் வரும் செப்ரெம்பர் மாதம் விவாதம் நடக்க இருக்கிறது.

இது குறித்து பலஸ் தீனத்தின் அதிகாரப்பூர்வ அதிபர் முகமது அப்பாஸ் கூறுகையில்:

அரேபிய நாடுகளின் தலைவர்கள் பலஸ்தீன பிரச்சினைக்கு ஆதரவு தர வேண் டும் என்றார்.

## போலி யுவான் வைத்திருந்த கும்பல் தலைவனுக்கு மரணதண்டனை

பீஜிங், ஜுலை 29 சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் 170 மில்லியன் மதிப்புடைய போலி யுவான் தாள்களை வைத்திருந்த 16 பேர் அடங்கிய கும்பலொன்று, பொலிஸிடம் பிடிபட்டது.

அந்தக் கும்பலில் உள்ள அனைவருக்கும், 54 ஆயிரத்து 400 டொலர் அபராதமும், கும்பலின் தலைவனுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. ஏனைய 15 பேருக்கும், பல்வேறு வகையாக சிறைத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

# பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் ஆடம்பர ஆடைகள் தீ வைப்பு

இஸ்லாமாபாத்,ஜுலை 29 பாகிஸ்தானின் வஜிரிஸ்தான் பகுதியில் உள்ள வானா என்ற இடத்தில் ஆடம்பர ஆடைகள் தலிபான் தீவிரவாதிகளால் தீயிட்டு அழிக்கப்பட்டன.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் உள்ள வஜிரிஸ்தான் பகுதியில் வாழும் மக்களுக்கு பழமைவாதிகளான தலிபான் தீவிரவாதிகள் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். அதன்படி பெண்கள் அதிநவீன ஆடைகளை அணியக் கூடாது. அதற்கான துணிகளை வாங்கக் கூடாது என அறிவித்து இருந்தனர். அதையும் மீறி தெற்கு வஜிரிஸ்தானில் வானா என்ற இடத்தில் ஆடம்பர ஆடைகள் விற்கப்பட்டன.

அதையறிந்த தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் வானா கடை வீதியிலியிருந்த கடைகளில் புகுந்து பெண்கள் அணியும் ஆடம்பர ஆடைகளை பறி முதல் செய்து அவற்றை நடுவீதியில் குவித்து பெற்றோல் ஊற்றி தீ வைத்து எரித்தனர்.

இதையும் மீறி இது போன்ற ஆடைகள் மற்றும் துணிகளை விற்கும் கடைக்காரர்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என அறிவித்தனர்.

இவை தவிர கமெராவுடன் கூடிய கைத்தொலைபேசி விற்கவும் தடை விதித்துள்ளனர். அதையும் மீறிவிற்கும் கடைக்காரருக்கு தலா ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என அறிவித்தனர். விற்பவர்கள் மட்டுமின்றி அவற்றை வாங்குபவர்களுக்கும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

இந்த அறிவிப்பை 2 மாதங்களுக்கு முன்பே தலிபான் தீவிரவாதிகள் வெளியிட்டனர். ஆனால் அதைப் பொருட் படுத்தாமல் கடைக்காரர்கள் விற்றதால் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

## எயர்பஸ் விமானத்தில் திடீர் கோளாறு மயிரிழையில் 202 பேர் உயிர் தப்பினர்




துபாய், ஜுலை29 மும்பையில் இருந்து துபாய் எமிரட்ஸ் எயர் பஸ் விமானம் ஒன்று 187 பயணிகள் மற்றும் குழந்தைகள், ஊழியர்கள் என 202 பேருடன் நேற்று துபாய்க்கு புறப்பட்டது.

இந்த விமானம் மும்பை விமான நிலையத்தில்இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் விமானத்தின் இயந்திரப் பகுதியில் எண்ணெய் கசிவு ஏற்பட்டு இருப்பதை விமானி அதிஸ்டவசமாகக் கண்டுபிடித்தார்.

இதுபற்றி விமானி உடனடியாக மும்பை விமான நிலையத்துக்குத் தகவல் கொடுத்தார். அதைத்தொடர்ந்து விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இதனால் விமானத்தில் பயணம் செய்த பயணிகள், ஊழியர்கள் என 202 பேர்மயிரிழையில் உயிர் தப்பினர்.

## சீனாவில் 89 குழந்தைகளைக் கடத்த முயன்ற இரு கும்பல்களைச் சேர்ந்த 369 பேர் கைது


பீஜிங், ஜுலை 29 சீனாவில் கடத்தப்பட இருந்த 89 குழந்தைகளை பொலிஸார் மீட்டனர். இதில், ஆள்கடத்தல் தொழிலில் ஈடுபட்ட இரு கும்பல்களைச் சேர்ந்த, 369 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தைத் திட்டம் அமுலில் உள்ள சீனாவில், ஆள்கடத்தல் தொழில் சமீப காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த பெப்ரவரியில் ஆள்கடத்தல் தடுப்புப் படை உருவாக்கப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், இந்த மாதம் பொலிஸார் நடத்திய திடீர் சோதனையில், வியட்நாமில் இருந்து சீனாவின் குவாங்ஷி மற்றும் குவாங்டாங் மாகாணங்களில் விற்பதற்காகக் கடத்திவரப்பட்ட குழந்தைகள் மீட்கப்பட்டன. குழந்தைகளை கடத்தியவர்களில் பெரும்பாலனோர் வியட்நாம் நாட்டவர்கள்.

அதே போல் மற்றொரு நடவடிக்கையிலும் குழந்தைகள் மீட்கப்பட்டனர். மொத்தமாக இரு நடவடிக்கைகளிலும், 89 குழந்தைகள் மீட்கப்பட்டன.

இந்தக் குழந்தைகள் அனைத்தும் 10 நாளில் இருந்து எட்டு மாதம் வரையிலான வயதுடையவை. இந்த இரு சம்பவத்திலும், ஆள்கடத்தல் தொழிலில் ஈடுபட்ட இரு கும்பல்களைச் சேர்ந்த, 369 பேர் கைது செய்யப்பட்டனர்.



அமெரிக்க கடன் பிரச்சினை குறித்து ஆளும் ஜனநாயகக் கட்சித் தலைவர் ஹாரி ரெய்டு பேட்டியளித்தார்.

## பிரிட்டன் மீது லிபியா கண்டனம்

திரிபோலி, ஜுலை29 தமது நாட்டிலுள்ள கிளர்ச்சியாளர்களை தனியான அரச அதிகாரமுடைய அமைப்பாக பிரிட்டன் அங்கீகரித்தமைக்கு லிபியா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் லிபிய கிளர்ச்சியாளர்களை ஏற்கனவே சட்ட ரீதியாக அங்கீகரித்துள்ள நிலையில், பிரிட்டனும் இந்த அறிவிப்பை வெளியிட் டுள்ளது.

இது ஒரு முன்மாதிரியற்றதும், பொறுப்பற்றதுமான விடயம் என லிபிய அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் காலித் கைய்யூம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீதிமன்றத்தின் ஊடாக இதனை மாற்றுவதற்கான முயற்சிகளை லிபியா மேற்கொள்ளும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தற்கொலைப் படைத் தாக்குதலில் காந்தஹார் மாநகராட்சி மேயர் பலி

காந்தஹர், ஜுலை 29 ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் மாநகராட்சி மேயர் ஒருவர் கொல்லப்பட்டார். ஆப்கானிஸ்தானில் உள்ள தெற்கு மாகாணங்களில் மிகப் பெரிய நகரங்களுள் ஒன்றான காந்தஹர் நகரின் மேயர் குலாம் ஹைதர் ஹமீதி. இவர் அமெரிக்க குடியுரிமை பெற்றவராக இருந்த போதிலும் அதிபர் ஹமீத் கர்சாயின் நம்பிக்கைக்குரிய நெருங்கிய உதவியாளர் .

இந்தநிலையில் நேற்று முன்தினம் காந்தஹர் பகுதிகளில் சட்டவிரோதமாக அனுமதியின்றி கட்டடங்கள் கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பகுதிகளை பார்வையிட் சென்ற அவர் [illegible] பகுதிகளில் கட்டப்பட்டிருந்த கட்டடங்களை இடித்துத் தள்ளும்படி மாநகராட்சி உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.அத்துடன் சம்பவ பகுதிகளை பார்வையிட்டு கொண்டிருந்த போது தலிபான்கள் திடீரென மேயர் ஹமீதி மீது மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் மேயர் [illegible] மேலும் இரு குழந்தைகள் இந்தத் தாக்குதலில் பலியானதாக காந்தஹார் நகர காவல்துறைத் தலைவர் அப்துல் ரஸாக் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த இருவாரங்களுக்கு முன்புதான் அமெரிக்கப்படைகள் விலகிக் கொள்ள முடிவு செய்தன. அன்றிலிருந்து அதிபர் கர்சாயின் சகோதரர் அகமது கர்சாய், மற்றும் கர்சாயின் அந்தரங்க ஆலோசகர் முகமது கான் என இரு முக்கிய தலைவர்கள் தற்கொலைப்படை த் தாக்குதலுக்குப் பலியாகினர். தற்போது காந்தஹர் மேயர் கொல்லப்பட்டுள்ளார். இரண்டு வாரங்களில் மூன்று தலைவர்கள் பலியானது கர்சாயின் அரசியல் நடவடிக்கைக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத் தியுள்ளதாக அந்நாட்டு அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான வலைபந்தாட்டம்; போராடித் தோற்றது வடக்கு அணி

வலி.வடக்கு, ஜூலை 29

இலங்கை விளையாட்டு அமைச்சால் மாகாண அணிகளுக்கு இடையே நடத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண அணி பலத்த போராட்டத்தின் பின்னர் தோல்வியை தழுவிக்கொண்டது.

கொழும்புறொறிங்டன்வலைப் பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மேல் மாகாண அணியும் வடமாகாண அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் இறுக்கமாக இருந்த போதிலும் நேரம் செல்லச் செல்ல போட்டி மேல் மாகாண அணிக்கு சார்பாக புள்ளிகள் கிடைக்கப் பெற்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் 29:21 புள்ளிகள் என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் புதிய உத்வேகத்துடன் வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக்கொண்டார்கள்.

ஆனாலும் போட்டி வேகமாகக் காணப்பட்ட போதிலும் மேல்மாகாண அணியின் கைகளே மைதானத்தில் மேலோங்கிக் காணப்பட்ட நிலையில் 32:26 புள்ளிகள் என்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மேல் மாகாண அணி 61:47 புள்ளிகள் என்ற அடிப்படையில் வட மாகாண அணியை வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாட தகுதிபெற்றுள்ளது.

வடமாகாண அணியில் யாழ். மாவட்ட வீராங்கனைகள் அதிகம் இடம்பெற்று இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(ஐ-86)

# பாடசாலைகள் வலைபந்தாட்டம்; அராலி சரஸ்வதி மூன்றாமிடம்

யாழ்ப்பாணம்ஜூலை 29

'நெஸ்லே' நிறுவனத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்பட்ட வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

உடுவில் மகளிர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை எந்த அணி வெற்றி பெறும் என்று தெரியாத அளவுக்கு மாறி மாறி புள்ளிகளைப்பெற்ற போதிலும் இறுதிக்கட்டத்தில் அராலி சரஸ்வதி வித்தியாலயம் சற்று வேகமாக விளையாடி புள்ளிகளை பெற்றுக்கொண்டது.

ஆட்ட நிறைவில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 7:5 புள்ளிகள் என்ற அடிப்படையில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியை வென்று மூன்றாம்இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ஐ-86)


# பாஷையூரில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பாஷையூர் விண்மீன் கோஸ்ரியின் 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் உள்ளூர் அணிகளுக்கு இடையில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஆறாம் திகதி பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை ஆரம்பமாகி மாலை வரை ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டியில் 20 இற்கும் மேற்பட்ட உள்ளூர் அணிகள் பங்கு கொள்ளவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-23)



வவுனியா கல்வியியற்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கு இடையேயான தடகளப்போட்டியில் 19 வயது ஆண்கள் பிரிவில் 4X100, 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் தங்கப்பதக்கத்தை பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி வீரர்கள். (23)

# மன்னார் பாடசாலைக்கு உயரம் பாய்தல் மெத்தை

வலி.வடக்கு, ஜூலை 29

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பாடசாலைக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத்துறையை வளர்த்தெடுக்கும் முகமாக வருடாந்தம் பாடசாலைகளின் தேவைகளை அறிந்து கல்வித் திணைக்களம் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வருகின்றது.

இந்த வகையில் இந்த ஆண்டு வட மாகாண கல்வி அமைச்சின் ஈ. எஸ்.டி.எப்.பி நிதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு இந்த மெத்தை வழங்கப்பட்டுள்ளது. (ஐ-86)

# பாடசாலைகளின் 15 வயது பிரிவுக்கு உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, ஜூலை 29

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் வருடாந்தம் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

வருடாந்தம் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் சுற்று யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு யாழ். மாவட்டத்தில் நடைபெறுவதும் வழமை.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள் யாழ்.மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்க இணைப் பாளரும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியருமான பேர்ட்டிபெனிஸ்ரருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலைகளுக்கு தனிப்பட்ட முறையில் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(ஐ-86)

# யாழ். சென்றல் நிறுவுநர் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.மத்திய கல்லூரி நிறுவுநர் தினத்தை ஒட்டி கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளையும் மறுநாளும் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழகம் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

கல்லூரிகளின் பழைய மாணவர்கள் சங்கங்களின் அணிகளுக்கு இடையில் 6 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்டதாக இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இறுதியாட்டம் ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெறும். இந்தப் போட்டியில் 12 அணிகள் பங்கு கொள்கின்றன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-23)

# கோப்பாய் மாணவன் சாதனை படைத்தார்



அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் நாதன் சுமன் 13 வயதுப்பிரிவில்100, 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தையும் மற்றும் மாகாண மட்டத்தில் சிறந்த ஓட்ட வீரனுக்கான பதக்கத்தையும் கேடயத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ஐ)

# மாகாண மட்ட பெண்கள் மரதன் வெற்றிபெற்ற வீராங்கனைகள்

வலி.வடக்கு, ஜூலை 29

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலைகளின் பெண்களுக்கு மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

பி.விமலாதேவி (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), எஸ்.தீபா (தர்மபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி), ஆர். சாலினி (சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), கே.மரியகொறற்றி (எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்), எம். ஜெயந்தினி (இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ஜே.வனஜா (கல்மடு மகாவித்தியாலயம்), எஸ். மேரி சுஸ்மிகா டயஸ் (மன்னார் புனித வளனார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எ.ரேணுகா (கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), எ.அனா (மன்னார் எழுத்தூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), பி.ரேணுகா (ஓமந்தை மத்திய கல்லூரி). (ஐ-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் உதைப்பந்தாட்ட லீக் அங்கத்துவ கழங்களுக்கு இடையே நடத்தும் விலகல் முறையிலான உதைப்பந்தட்டச் சுற்றுப் போட்டியில் இரு ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் விருமாறு:

- பிற்பகல் 3.45 மணி - பாசையூர் சென்.அன்ரனிஸ் 'பி' பிரிவு எதிர் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழகம்.
- 5 மணி - பாரதி வி.க எதிர் குரு நகர் பாடும்மீன் வி.க. (ஐ-23)

# 13 வயது மெய்வன்மை போட்டியில் வென்ற வீராங்கனைகள்

வலி.வடக்கு, ஜூலை 29

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் முதல்நான்கு இடங்களைப் பெற்ற 13 வயதுப் பிரிவு பெண்கள் பிரிவில் வீராங்கனைகளின் விவரம் வெளியாகியுள்ளது. அந்த விவரம் வருமாறு:

**100 மீற்றர்** -பி.கிரிசாந்தினி (14.9 செக்கன். வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி), கியூ.றொசிபாலெம்பேட் (மன்னார் சென். அனாஸ் மகாவித்தியாலயம்), எஸ்.டிலக்சி வவுனியா வடக்கு செக்கடிபுலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), ஜீ.மேரிகெலன்றோசி (மன்னார் சென்லூட் மகாவித்தியாலயம்).

**200 மீற்றர்** - கியூ.றொசிபா லெம்பேட் (31.7 செக்கன்- மன்னார் சென். அனாஸ் மகா வித்தியாலயம்), பி.கிரிசாந்தினி (வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி), எ.அபிநயா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), எஸ். பிரியவேணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**உயரம் பாய்தல்**- கே.சுகன்யா 1.21 மீற்றர் - வவுனியா தெற்கு கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம்), எஸ்.பிரியவேணி- (யாழ்ப்பாணம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கே.பௌத்திரா (கிளிநொச்சி முற்கொம்பன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), வி. பௌத்திரா (கிளிநொச்சி கிழக்கு இராமநாதபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை).

**நீளம் பாய்தல்** -வி.சாத்வீகா 4.09 மீற்றர் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), எஸ்.டிலக்சி (வவுனியா வடக்கு செக்கடிப் புலவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), ஜீ.மேரிகெலன் றோசி (மன்னார் சென்.லூசியா மகாவித்தியாலயம்), கியூ. றெசிபா லெம்பேர்ட் (மன்னார் சென். அனாஸ் மத்திய மகாவித்தியாலயம்).

**4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்** - யாழ்ப்பாணம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வவுனியா வடக்கு ஓமந்தை மத்திய கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்குள்ள வீரர்களும் எங்களுடன் விளையாடுவர்

## - இவ்வாறு கூறுகின்றார் மஹேல ஜெயவர்த்தன

யாழ்ப்பாணம், ஜூலை 29

இந்தப் பிரதேச வீரர்களும் எங்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடுவார்கள். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன 'உதயனுக்கு' தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடை பயணத்தின் இறுதி நாள் நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த மஹேல ஜெயவர்த்தன 'உதயனுக்கு' விசேட செவ்வியொன்றைத் தந்தார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நான் இங்கு வந்ததையிட்டு மிகவும் சந்தோசமடைகின்றேன். இங்குள்ள மக்கள் மிகவும் நல்லவர்கள் அத்துடன் அமைதியை விரும்புபவர்களும் கூட. கிரிக்கெட் அணியை மிகவும் நேசிக்கின்றனர். இந்தப் பிரதேசத்து கிரிக்கெட் வீரர்கள் ஒரு நாள் எங்களுடன் எமது அணியில் விளையாடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

"இங்குள்ள மக்கள் மிக வும் நல்வர்கள் அத்துடன் அமை தியை விரும்புபவர்களும் கூட. கிரிக்கெட் அணியை மிகவும் நேசிக்கின்றனர். இந்தப் பிர தேசத்து கிரிக்கெட் வீரர்கள் ஒரு நாள் எங்களுடன் எமது அணியில் விளையாடுவார்கள்"

ஆஸ்திரேலியாவுடனான தொடர் குறித்து கருத்துத் தெரிவித்த மஹேல, ஆஸ்திரேலியாவுடனான தொடர் எமக்கு பெரும் சவாலானது. அத்துடன் மிகக் கடுமையானதாக இருக்கும். நாங்கள் மிகச் சிறந்த ஆட்டத்தை இந்தத் தொடரில் வெளிப்படுத்துவோம் என்று நம்புகின்றேன். இந்தத் தொடரை நாங்கள் நாட்டுக்காக வென்றே தீருவோம் - என்றார். (15)

# தூதரின் விருந்து வீரர்கள் வெறுப்பு

லண்டன், ஜூலை 29

டோனியின் அறக்கட்டளை சார்பில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, இந்திய தூதர் கொடுத்த விருந்தை சக வீரர்கள் புறக்கணித்ததாக புகார் எழுந்துள்ளது. இதனை இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) மறுத்துள்ளது.

இந்திய அணித்தலைவர் டோனி, தனது மனைவி சாக்ஷியின் பெயரில் வசதியற்ற குழந்தைகளின் நலனுக்கான அறக்கட்டளை ஒன்றை நடத்தி வருகிறார். இதற்கு நிதி சேகரிக்கும் விதத்தில், கடந்த 18 ஆம் திகதி லண்டனில் நிகழ்ச்சி நடந்தது. இதில் இந்திய வீரர் சச்சின் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். இதன் மூலம், அறக்கட்டளைக்கு ரூ. 3.25 கோடி வசூலானது.

இந்த நிகழ்ச்சி இப்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதாவது ஜூலை 18 அன்று இங்கிலாந்துக்கான இந்திய தூதர் நாலின் சூரி, வீரர்களுக்கு விருந்து கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக 100 அழைப்பிதழ்களை விநியோகித்து, கிரிக்கெட் மற்றும் அரசியலில் முன்னணியில் உள்ள 200 பேரை அழைத்துள்ளார். இதில் பங்கேற்காமல், வீரர்கள் டோனியின் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளனர். இதனால் தனது நிகழ்ச்சியை ரத்து செய்த நாலின் சூரி, இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படி, இந்திய வெளியுறவுத்துறைக்கு கடிதம் எழுதியுள்ளார்.

விருந்துக்கான திகதியை முடிவு செய்யுமாறு, கடந்த 2011 ஏப்ரல் மாதத்தில் இருந்தே பி.சி.சி.ஐயிடம் கேட்டுக் கொண்டோம். ஜூலை 18 என்ற திகதியை பி.சி.சி.ஐ தான் எங்களிடம் முதலில் தெரிவித்தது. இதன் பிறகு தான் அழைப்பிதழை அச்சடித்தோம். ஆனால் கடைசி நிமிடத்தில் டோனியின் நிகழ்ச்சி குறுக்கிட்டதால் விருந்தில் வீரர்கள் பங்கேற்கவில்லை. தற்போது புதிய திகதி கொடுக்குமாறு, தூதரகத்தை பி.சி.சி.ஐ கேட்டுக் கொண்டுள்ளது. அநேகமாக நான்காவது டெஸ்ட் ஆட்டம் நடக்கும் போது விருந்து நிகழ்ச்சி நடக்கலாம்.

இந்தச் செய்தியை பி.சி.சி.ஐ செயலர் சீனிவாசன் மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

இந்திய வீரர்கள் விருந்தை புறக்கணித்தனர் என்ற செய்தியில் எந்த உண்மையும் இல்லை என்பதை, பி.சி.சி.ஐ தெளிவுபடுத்த விரும்புகின்றது. இந்திய தூதரகம் குறிப்பிட்ட ஜூலை 18 ஆம் திகதியில், டோனியின் நிகழ்ச்சியில் பங்கேற்க ஆறு மாதங்களுக்கு முன்பே, வீரர்கள் முடிவு செய்திருந்தனர்.

இதற்குப் பதிலாக விருந்தை ஜூலை 25 ஆம் திகதி வைத்துக் கொள்ளலாம் என்று பி.சி.சி.ஐ ஏற்கனவே அவர்களிடம் தெரிவித்து இருந்தது. ஆனால் இந்த திகதியில் வேறு ஒரு நிகழ்ச்சி இருப்பதாக இந்திய தூதரகம் மறுப்பு தெரிவித்தது. இதனால் இந்திய அணி இங்கிலாந்து சென்றதும், சூழ்நிலைக்கு ஏற்ப நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்தோம்.

இதையடுத்து இந்திய அணி முகாமையாளர் அனிருத் சவுத்ரி, லண்டனில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை சந்தித்து, வீரர்கள் இந்தியா திரும்பும் போது, அதாவது ஓகஸ்ட் மாதத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார். மற்றப்படி இந்திய தூதர் விருந்தை, வீரர்கள் புறக்கணித்தனர் என்ற செய்தி முற்றிலும் தவறானது - என்றார். (15)

# ஹர்பஜன் எதற்கு?

லோட்ஸ், ஜூலை 29

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் இருக்கின்றார். அவரது பந்து வீச்சு பலவீனமாக இருக்கின்றது. அவரது சுழற்பந்து வீச்சு எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு எந்த நெருக்கடியும் கொடுக்கவில்லை. அவரை இந்திய அணியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

ஹர்பஜன் சிங்கிற்கு பதிலாக அமித் மிஸ்ராவை சேர்க்க வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். லோர்ட்ஸ் டெஸ்ட் ஆட்டத்தில் ஹர்பஜன் பந்து வீச்சு திருப்திதரவில்லை. அவர் 56 ஓவர்கள் பந்து வீசினார். ஒரு விக்கெட் மட்டுமே கைப்பற்றி உள்ளார்.

இந்த தருணத்தில் அமித் மிஸ்ராவை அணியில் சேர்ப்பது குறித்து இந்தியக் கிரிக்கெட் சபை ஆய்வு செய்ய வேண்டும். லோர்ட்ஸ் ஆடுகளத்தில் ஹர்பஜன் பந்து வீச்சு, மிக மெதுவாகவே சுழன்றது. ஆனால் அதே நேரத்தில் இங்கிலாந்து அணியின், சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் மிக அற்புதமாக பந்தை சுழலச் செய்தார்.

மிஸ்ரா அருமையான பந்து வீச்சாளர். ஐ.பி.எல். கிரிக்கெட் அவரது திறமையை பார்த்து வியந்து உள்ளேன் என்று அக்ரம் தெரிவித்தார். லோர்ட்சில் சகீர்கான் காயம் காரணமாக 13.3 ஓவர்கள் மட்டுமே வீசினார். இதுவும் கூட இந்திய அணி 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கக் காரணமாக அமைந்தது என்றும் அவர் தெரிவித்தார். வசிம் அக்ரம் தற்போது வர்ணனையாளராக உள்ளார். (15)

# எப்படி நாம் தோற்போம்...?

லண்டன், ஜூலை 29

சொந்த மண்ணில் அதிக வலுவுடன் உள்ள இங்கிலாந்து அணியை இந்தியா தோற்கடிக்க முடியாது.

உலக கிரிக்கெட்டின் மன்னராக வலம் வருகின்றோம். எங்களை பிளவுபட்ட இந்திய கிரிக்கெட் அணி தோற்கடிக்க முடியாது என்று முன்னாள் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் இயன் பொத்தம் தெரிவித்தார்.

லோர்ட்ஸ் வெற்றிக்கு பின்னர் இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்திய அணி காயம் பிரச்சினை கவலையில் உள்ளது. இந்த நிலையில் எங்களை தோற்கடிப்பதை பற்றி நினைக்கலாமா? என்றும் அந்த 55 வயது முன்னாள் வீரர் கேட்டுள்ளார்.

லோர்ட்ஸில் 202 ஓட்டங்கள் அடித்த பீற்றர்சன் ஆட்டத்தை மறக்க முடியாது என்றும் பொத்தம் தெரிவித்தார். ஸ்டூவர்ட் புரோட் லோர்ட்ஸின் 2 இன்னிங்ஸிலும் 7 விக்கெட்டுக்கள் எடுத்துள்ளார். அவரது சாதனை மூலம் எனது விமர்சனத்தை வாய் மூட வைத்து விட்டார் என்றும் பொத்தம் ஒப்புக் கொண்டார்.

25 வயது பந்துவீச்சாளர் தொடர்ந்து திறனை மேம்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தி உள்ளார். கிரிக்கெட், இந்திய கிரிக்கெட் சபைக்கு மட்டும் உரியது அல்ல என்றும் அவர் விமர்சித்தார். முடிவு மறு ஆய்வு முறையை நாங்கள் அனைவரும் ஆதரிக்கிறோம் என்று பொத்தம் தெரிவித்தார். (15)

# இலக்கை நெருங்குகின்றோம்

## - ஸ்ரோரஸ்

லண்டன், ஜூலை 29

'டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்து அணி, விரைவில் முதலிடத்தைப் பெறும்' என்று, இங்கிலாந்தின் டெஸ்ட் அணித்தலைவர் ஸ்ரோரஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஸ்ரோரஸ் கூறியதாவது:

லோர்ட்ஸில் நடந்த முதலாவது டெஸ்டில், வெற்றி பெற்றது அதிக மகிழ்ச்சி அளிக்கின்றது. இது எங்களுக்கான மிகப் பெரிய ஆட்டமாகவே கருதுகின்றேன். முதலிடத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு தற்போது எங்களுக்கு கிடைத்துள்ளது என்று நினைக்கின்றேன். இந்தியாவுக்கு எதிரான மீதமுள்ள ஆட்டத்திலும் வெற்றி பெற்று முன்னணியாக திகழ்வோம் என்ற நம்பிக்கை உள்ளது.

லோர்ட்ஸ் மைதானத்தில் விக்கெட் வீழ்த்துவது என்பது மிகவும் கடினமான ஒன்று. இதில் எங்களுடைய பந்து வீச்சாளர்களின் செயற்பாடு மிகவும் அருமையாக இருந்தது. இதனால் அடுத்து வரும் ஆட்டங்கள் அனைத்திலும் எங்களுக்கான வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

கடைசி நாள் ஆட்டத்தில் இந்திய அணி, தேநீர் இடைவெளிக்கு முன்னர் ஐந்து விக்கெட்டுக்கள் இழந்திருந்தது. இதன் பின்னர் கடினமான மற்றும் அறிவுப்பூர்வமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை எங்கள் வசமாக்கினோம். பீற்றர்சன் அதிக ஈடுபாட்டுடன் விளையாடியதனால் இரட்டைசதம் அடித்து அசத்தினார்.

இக்கட்டான நேரத்தில் சிறப்பாக பந்துவீசி அணியை வீழ்ச்சியிலிருந்து மீட்டனர் புரோட் மற்றும் அன்டர்சன் - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிரங்க கேள்வி -2011

யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் இராமசாமி மண்டபத்திலிருந்து அகற்றப்பட்ட வெவ்வேறு அளவுகளில் உள்ள மொத்தம் 33 பழைய யன்னல்கள் விற்பனையின் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. 29.07.2011 ஆம் திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் இவற்றை பாடசாலை நேரத்தில் நேரில் பார்வையிட்டு ரூபா 1000.00 செலுத்தி கேள்விப் பத்திரத்தை வலிகாமம் வலயக் கல்வி அலுவலக கட்டடப் பகுதியில் பெற்று சமர்ப்பிக்கலாம். 04.08.2011ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கேள்வி திறக்கப்படும். சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி பத்மநாதன்



கரவெட்டி வடக்கு, காளையன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கேரதீவு வீதி, கோவிலாக் கண்டி, கைதடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பத்மநாதன் கடந்த (27.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா பத்மநாதனின் (ஓய்வுபெற்ற அதிபர், JP, சாயி கல்வி நிலைய இயக்குநர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா- ரம்மியாவதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்திரவதனியின் பெறாமகளும், வள்ளிநாயகி- சுப்பிரமணியம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிவதாசன், சந்திரராணி, சிவபாலன் மற்றும் சிவநாயகி(மக்கள் வங்கி, வெள்ளவத்தை), குணாளன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரி, ஜெயராசா ஆகியோரின் மைத்துனியும், முருகானந்தன் (பிரான்ஸ்), சிவானந்தன்(லண்டன்), கதிர்காமநாதன்(லண்டன்), கிருபானந்தன் (அமைதிபுரம் தமிழ் வித்தியாலயம், துணுக்காய்), பத்மரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கெங்கா(பிரான்ஸ்), ராஜி(லண்டன்), அஜி(லண்டன்), நளினி(பிரதேச வைத்தியசாலை- கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரான்ஸில் வசிக்கும் ஸ்டீபனி, கெவின் மற்றும் லண்டனில் வசிக்கும் கோபிசன், மதுசன், அபிரா, வைஸ்ணவி, கிரீஸ், மகிளினி, கீர்த்தனன்(மாணவர்கள், சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கிரிபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரான்ஸில் வசிக்கும் சிவராசா, சேத்திரபாலன், சேத்திரகுமார், சத்தியபாமா, சத்தியநாதன் ஆகியோரின் சிறிய தாயும், சிவஜா, நெறிஜா, அனுஜா, சிவஜன், சிவகஜன் ஆகியோரின் மாமியும், தனுஜா, உதயணன், கார்த்திக், பிரசன்னா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சாயி கல்வி நிலையம்,
கேரதீவு வீதி, கோவிலாக்கண்டி. (6307)

தகவல்:
குடும்பத்தினர்.

## மனமார்ந்த நன்றிகள்

### துணுக்காய் பிரதேச சபைத் தேர்தல் - 2011



தமிழ் இன உணர்வோடு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) அமோக வாக்களித்து என்னை இரண்டாவதாக வெற்றிபெறச் செய்து தன்மானம் காத்த என் அன்புக்கினிய வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

என்றென்றும் நன்றியுடன்
சபாரத்தினம் செல்வரத்தினம் J.P.
வளநகர்,யோகபுரம்.

## குழியில் விழுந்து குழந்தை மரணம்

வடமராட்சி,ஜூலை 29

இரண்டு வயதுக் குழந்தை ஒன்று, மின் தூண் நாட்டுவதற்காக வெட்டப்பட்ட குழியில் விழுந்து மரணமானது.

உடுத்துறையைச் சேர்ந்த காமராஜ் சர்மிலா என்ற குழந்தையே இவ்வாறு மரணமானது.

நேற்றுமுன்தினம் மாலை குழந்தையை நீண்ட நேரம் காணாமையினால் பெற்றோர் தேடியபோது அது மின் தூண் நாட்டுவதற்காக வெட்டப்பட்ட குழியில் குற்றுயிராக இருந்த நிலையில் மீட்கப்பட்டது.

அன்றைய தினம் மாலை 7 மணியளவில் இந்தக் குழந்தை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அது இறந்துவிட்டது.

மரண விசாரணையின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-236-190)

## தையல் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சை

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து மாற்று வலுவுள்ளோருக்கு தையல் பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது.

பயிலுனரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளதால் ஆர்வமுள்ள மாற்று வலுவுள்ளோர்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு ஜெய்ப்பூர் நிறுவன தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

(எ)

## ஒட்டங்கேணி ஸ்ரீ மகா கணபதியின் தேர்த்திருவிழா இன்று

கொடிகாமம் ஜூலை 29

கொடிகாமம் கச்சாய் வடக்கு ஒட்டங்கேணி ஸ்ரீ மகா கணபதி திருவிழா கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறுகிறது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(எ)

**தமிழ், ஆங்கில மொழி மூலம்**

**பிரத்தியேக/குழு வகுப்புகள்**

தரம் 2-8 மாணவர்களுக்கான ஆங்கில தமிழ் மொழி மூலமான வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு:-
0750889689

**கடை வாடகைக்கு**

இராமநாதன் வீதி, கலட்டிச் சந்திக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு. பலசரக்குக் கடை நடத்தக் கூடியது.
தொடர்பு- குணம்,
இல.47, இராநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

யாழ். நகரில் Restaurant ஒன்றின் அனைத்து சாமான்களும் விற்பனைக்கு உண்டு. கிழமை நாள்களில் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-
0777222422, 0714299935

**பு/ஸி பரீட்சைக்குத் தயாரா**

இந்தமுறை விசாகா, றோயல்,trinity- FWC பாடசாலை வினாத்தாள்கள் [விடைகளுடன்] உயிரியல், கணிதம், வர்த்தகப் பாடங்களுக்கு செய்து பார்ப்பது மிக அவசியம். வீடு வந்து தரப்படும் ஏற்பாதர்வு [illegible] வித்யா சுழற்றுங்கள் 0777730838, 2264814

## பகிரங்க கேள்வி -2011

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பாவிக்க முடியாத நிலையிலுள்ள 140'X30' நீள அகலம் கொண்ட நில மட்டத்துக்கு மேல் வகுப்பறைக் கட்டடத்தை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. 29.07.2011ஆம் திகதியில் இருந்து ஒரு கிழமைக்குள் நேரில் பார்வையிட்டு ரூபா 1000.00 செலுத்தி கேள்விப்பத்திரத்தை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகக் கட்டடப் பகுதியில் பெற்று சமர்ப்பிக்கலாம். 04.08.2011ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கேள்வி திறக்கப்படும். சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்இலங்கை

### உயர் பட்டப்படிப்புகள் பீடம்

### விசேட மீள் பரீட்சை- முதுமாணி கற்கை நெறிகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் பின்வரும் முதுகலைமாணி கற்கை நெறிகளின் முதலாம் இரண்டாம் அரையாண்டு பரீட்சைக்கு தோற்றி குறித்த பாட அலகுகளில் சித்தியடையாத மாணவர்களுக்கும், கற்கை நெறியை பூர்த்தி செய்து முதலாம் இரண்டாம் அரையாண்டு பரீட்சைக்கு தோற்றத் தவறிய மாணவர்களுக்கும் விசேட மீள் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1. பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி (M.A. in Public Administration)
2. பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கை நெறி(M.A. in Cultural Studies)

தகுதியானவர்கள் விண்ணப்பப் படிவத்தினை உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்று **26.08.2011** இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

27.07.2011 (ரி/574751) பதிவாளர்.

## எமது மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

### வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை- மானிப்பாய்



23.07.2011இல் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) சார்பில் போட்டியிட்ட எம்மை வெற்றி பெறச் செய்து எம்மையும் பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவு செய்த எமது மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இருகரம் கூப்பி தெரிவித்துக்கொள்கிறேன்.

சு. பரமகுரு,
சாவல்கட்டு, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

## Computer Express

### Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 3000/= |
| * Dip.in Programming Language | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

**Advances Courses**

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

பதிவுகளுக்கு முந்துங்கள்

Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm

Batch I - 29.07.2011 9am or 3Pm Batch II - 30.07.2011 9am or 3Pm
Batch III - 31.07.2011 9am or 3Pm Batch IV - 03.08.2011 9am or 3Pm

C,C++,Java,Java script,VB,Html
University Of Madras Bsc

பல்கலைக்கழக மாணவர்களுக்கான Diploma in Computerized Accounting Packages
விரிவுரையாளர் - Ashok

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூடச்சொன்னவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் குறித்து 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப்படத்தை வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சனல்-4 தொலைக் காட்சியே இப்போது மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இலங்கையில் வைத்து இராணுவ அதிகாரி ஒருவரிடமும் சிப்பாய் ஒருவரிடமும் பெறப்பட்ட தாக சனல்-4 கூறும் வாக்குமூலங்கள் அங்கிய 13 நிமிட செய்தித் தொகுப்பு ஒன்று நேற்றுமுன்தினம் ஒளிபரப்பப்பட்டது.

அதில், விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சரணடைந்த போது அவர்களைச் சுட்டுக் கொல்லும்படி கோத்தபாய ராஜபக்ஷவே பிரிகேடியர் (இப்போது மேஜர் ஜெனரல்) சவேந்திர சில்வாவுக்கு உத்தரவிட்டார் என்று இராணுவ அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார்.

இலங்கை அரசு இந்தக் குற்றச்சாட்டை அடியோடு மறுத்துள்ளது. சனல் - 4 நேற்றுமுன்தினம் வெளியிட்ட இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பான காட்சிகளையும், இலங்கை நிராகரிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

“சனல்-4 யுத்தக்குற்ற ஆவணப்படம் தொடர்பாகப் பதில் அளிக்காவிட்டாலும் அரசு உலக நாடுகளுக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கை அரசு மீது யுத்தக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நடவடிக்கைகள் உலக நாடுகளில் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இதற்கு முகம் கொடுக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்'' என்றார் அமைச்சர்.

சனல்-4 ஒளிபரப்பிய புதிய வீடியோவும் போலியானது என்று பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா ஆகியோர் நிராகரித்துள்ளனர்.

இலங்கையின் போர்க் குற்றம் எனக் கூறிக்கொண்டு பிரபல்யம் அடையும் அற்ப ஆசையில் சனல் - 4 தொலைக் காட்சி மீண்டும் போலியான வீடியோக்களை தயாரித்து ஒளிபரப்பி வருகிறது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். இது மிகவும் கீழ்த்தரமான செயல் என்றும் அவர் கூறியுள்ளார்.

சனல் - 4 வெளியிட்டுள்ள புதிய காட்சிகள் எந்த வகையிலும் உண்மையானதல்ல, போலியானது என்று ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதியும், 58ஆவது படைப் பிரிவின் முன்னாள் கட்டளைத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும், இறுதிப் போரில் 58ஆவது பிரிவில் பங்கெடுத்தார் என்று சனல்-4 அறிமுகப்படுத்தும் இராணுவ அதிகாரியை பெர்ணாண்டோ என்ற பெயரால் சுட்டுகிறது.

அவர் அளித்துள்ள சாட்சியில் தெரிவித்துள்ளவை பின்வருமாறு:-

அவர்களுடைய இதயங்களில் மனித உணர்வு இருக்கவில்லை. அவர்களை விலங்குகள் போன்று தான் உணர்ந்தேன்.

அவர்கள் பொதுமக்கள் மீது கண்டபடி சுட்டார்கள். பொதுமக்களைக் குத்தினார்கள். அவர்களின் நாக்குகளை அறுத்தார்கள். பெண்களின் மார்பகங்களை வெட்டினார்கள். இவற்றையெல்லாம் நான் எனது கண்களால் பார்த்தேன். சிறுவர்கள் இறந்து கிடந்ததைக் கண்டேன்.

பெருமளவு சிறுவர்கள் இறந்து கிடந்தார்கள். அவர்கள் அப்பாவிகள். பெருமளவு முதியவர்களும் கொல்லப்பட்டுக் கிடந்தனர்.

நீரேரியைக் கடந்து வந்தபோது பெண்கள், சிறுவர்கள் என்று பொது மக்கள் மீது படையினர் சுட்டார்கள். அவர்கள் புலிப்போராளிகள் அல்லர். சாதாரண பொதுமக்கள். சாதாரண குடிமக்கள் கொல்லப்பட்டதை எனது கண்களால் பார்த்தேன்.

தாயும் மூன்று குழந்தைகளுமாக ஒரு சிறிய குடும்பம் தப்பிச் சென்று கொண்டிருந்ததை நான் கண்டேன். அவர்களில் ஒரு சிறுவன் காலில் சூடுபட்டுக் கிழே விழுந்தார். அந்தக் குழந்தையை நான் இந்தக் கைகளால் தூக்கினேன். தாயார் கதறி அழுதார். அந்தத் துன்பத்தின் மத்தியிலும் என்னை நன்றியுணர்வோடு பார்த்தார்.

ஒரு நாள் ஆறு படையினர் தமிழ்ப் பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்வதை எனது கண்களால் கண்டேன். ஒரு தமிழ் பெண்ணை வன்புணர்வு செய்ய வேண்டுமானால் அவளை அவர்களால் அடிக்க முடியும். அவளது பெற்றோர் அதைத் தடுக்க முனைந்தால் அவர்களை அடிக்கவோ கொல்லவோ முடியும்.

அங்கு அவர்களின் [illegible] இருந்தது. போர் முனையில் இருந்த படையினரின் இதயங்கள் கற்களாகிப் போயிருந்தன.

இரத்தம், கொலைகள், மரணம் என்று பார்த்துப் பார்த்து அவர்கள் மனிதஉணர்வுகளை இழந்து விட்டார்கள். இரத்தக் காட்டேரிகள் போன்று மாறிவிட்டார்கள்.

தலை மற்றும் பிற உடற்பாகங்கள் இல்லாத பெண்களின் உடல்களை நான் கண்டேன். இறந்து கிடந்த தாய் மற்றும் குழந்தையின் சடலங்களையும் பார்த்தேன். ஆனால் குழந்தையின் தலை இருக்கவில்லை.

போரின் இறுதிக் கட்டத்தில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும், பெண்களும், ஆண்களும் கொல்லப்பட்டனர். புதுமாத்தளனில் மட்டும் 1500இற்கும் அதிகமான பொது மக்கள் இறந்து கிடந்ததை நான் கண்டேன்.

அவை அனைத்தையும் அவர்களால் அடக்கம் செய்ய முடியவில்லை. அவற்றை ஒன்றாக அடுக்கி புல்டோசர் மூலம் மண் பரப்பி ஒரு அணைபோல அமைத்து அவை புதைக்கப் பட்டன. அதுபோல 50,000 இற்கும் அதிகமான மக்களுக்கு நடந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

போரின் இறுதிக் கட்டத்தில் நான் கடைசியாக நுழைந்த போது புதுமாத்தளன் பகுதி முழுவதும் சடலங்களாக நிறைந் திருந்தது. அவற்றை அழிப்பதற்கு அவர்கள் பெரும் வாகனம் ஒன்றைப் பெற்றனர். சடலங்களின் மீது மண்ணைப் போட்டு நிரப்பினார்கள்.

சில இடங்களுக்குச் செல்ல முடியாதளவுக்கு அழிந்துபோன உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசும். அவர்கள் வெறும் அப்பாவி குடிமக்கள். போரிடும் தரப்பினருடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள். அவர்களின் இறப்புக்காகத்தான் அழுகிறேன். அதனால் தான் இப்போது அதை வெளியே சொல்ல முடிவு செய்துள்ளேன். 2009 மே மாதம் கடற்கரையின் ஒரு சிறு துண்டுப் பகுதிக்குள் நடந்த கொடூரமான குற்றங்கள் குறித்து உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் நன்றாக இருக்கிறேன்.நான் பல சடலங்களைப் பார்த்துள்ளேன். காயமடைந்தவர்கள் பலரைப் பார்த்துள்ளேன். பல வன்புணர்வுக் காட்சிகளைக் கண்டுள்ளேன். அவற்றையெல்லாம் எனது இதயத்தை திறந்து வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே நான் நன்றாக இருக்கிறேன் - இப்படி அவர் மேலும் கூறினார்.

சனல்-4 தொலைக்காட்சிக்குச் சாட்சியமளித்த மற்றொரு சிப்பாய் தெரிவிக்கையில், “இன்னும் ஒரு சிறு நிலப்பரப்புத் தான் பிடிக்கப்பட இருக்கிறது. என்ன தேவையோ அதைச் செய்து விசயத்தை முடியுங்கள். உங்கள் நல்ல செய்திக்காகக் காத்திருக்கிறேன் என்று கோத்தபாய ராஜபக்ஷ தன்னிடம் கூறினார் என பிரிகேடியர் சவேந்திர சில்வா எங்களிடம் குறிப்பிட்டார்'' என்று தெரிவித்தார்.

அவரது இந்த வார்த்தைகள் “படையினரால் படுகொலைக்கான அனுமதியாக எடுத்துக்கொள்ளப்பட்டன'' என்றும் அந்தச் சிப்பாய் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். (உ)


## வாழ்க வளமுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்

காரைநகர் மேற்கு கப்பம்புலம்
மண்ணின் மைந்தன்
காரைநகர் மேற்குகப்பம்
புலத்தின் பிறந்து வளர்ந்து
யாழ்ப்பாணம் சீனிவா சகம் வீதி,
இரண்டாம் ஒழுங்கை
கொட்டடியில் வாழ்ந்து வரும்

### சின்னத்தம்பி பரமநாதன்
[கப்பல் நாதன்]



சின்னத்தம்பி பரமநாதனுக்கு சமய - சமூக சேவைகள் பலவற்றை இலை மறைகாயாக நின்று செயற்படுத்தி வருபவரை (சமூக திலகம் 2011)

ஆண்டுக்கான பட்டத்தை கொட்டடி அபிவிருத்திச் சங்கம் கொடுத்து கௌரவப்படுத்தியதையிட்டு காரைநகர் வாழ் மக்களும் யாழ். கொட்டடி மக்களும் நண்பர்களும் வாழ்த்தி இன்னும் பல தொண்டுகளை செய்து புகழ்பூத்து விளங்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

காரைநகர் வாழ் மக்களும்
யாழ். கொட்டடி வாழ் மக்களும்
(6297) நண்பர்களும்.

## IELTS
VIP Coaching Centre



ESOL

**IELTS Spoken- Mock Exam**

Preparing yourself for the IELTS exam? ,now you can take a Mock Exam at your convenient time on a pre arrangement at KU ! Get your mark sheet too(with examiner's comments) ,know where do you stand before the real IELTS exam !
****
IELTS Study Materials ,CDs are available for those who registered for the IELTS exam at our registration centre.

## Knowledge Universe
Authorized IELTS registration Centre



No 75,Temple Road,Jaffna. Hot line:0777302882
www.kugroup.info


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் சிவசம்பு பூதத்தம்பி
(நீர்வேலி)



தோற்றம் 05.08.1942 மறைவு 29.06.2011

எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்த போது ஆவன மேற்கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்ட இனிய இதயங்களுக்கும் எமது பணிவான நன்றி.

அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று[29.07.2011] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கேரளிவத்தை ஒழுங்கை,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (6303) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி பரராஜசிங்கம்
(உரிமையாளர் அருமை போசனசாலை , யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பரராஜசிங்கம் 24.07.2011 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் (அருமை) ஆருயிர் மனைவியும் காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் கோசலாதேவியின் அன்புச் சகோதரியும் அன்னசோதி, காலஞ்சென்ற தனவதி மற்றும் அருள்பாக்கியம், ரதி, நடேசன் ஆகியோரின் மைத்துனியும் செல்வக்குமார், ராஜ்குமார், தயாழினி, தமிழினி, தபோதினி, அன்பழகி, யாழினி ஆகியோரின் பாசமிகு தாயும் பொற்செல்வி ஸ்ரீகௌரி காலஞ்சென்றவர்களான கஜேந்திரன், சோதிலிங்கம் மற்றும் மகேந்திரன், பகீரதன், உலகநாதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.07.2011) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(6298) ப.செல்வக்குமார் (மகன்-பிரான்ஸ்).

## சின்னத்தம்பி பொன்னுத்துரை
(ஓய்வுபெற்ற கண்காணிப்பாளர், முதியோர் இல்லம் கைதடி)



கேரதீவு, நாவற்குழியைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னுத்துரை கடந்த (27.07.2011) புதன்கிழமை நாவற்குழியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் யோகேந்திரன் (அமெரிக்கா), மகேந்திரன்(சுவிஸ்), கனகேஸ்வரி (கனடா), இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜமுனாதேவி, நிர்மலர், ஜெயக்குமார், சுகுமார் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, பொன்னம்பலம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் காமாட்சி, அன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் நிருஜனன், தயோதா, கிருஷன், நேரு, நிரூஜன், வேணுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் பவானி (கனடா), செல்வராசா, சண்முகராசா (லண்டன்), அழகரசா பவளவசனி, விஜயராசா (சுவிஸ்), தேவகி, ரஞ்சினி, நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் நாவற்குழி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாவற்குழி. (6309) மனைவி - கனகம்மா,பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L பொருளியல்
நடைமுறை விடயங்கள்
2011, 2012 A/L மற்றும் போட்டிப் பரீட்சைக்கான
நூல். விலை 30 ரூபா
மேலும் 9 வினா விடை நூல்கள்
விலை: 20 ரூபாவிலிருந்து.
ஆசிரியர்: வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 05 ★ 07 ★ 1944



உதிர்வு 11 ★ 08 ★ 2007

**சின்னத்துரை அருளானந்தம்**
(லொறி உரிமையாளர், அருள்)

அன்பு செய்தீர்! அரவணைத்தீர்
இன்பமாய் நாம் வாழ நீர் உழைத்தீர்
கல்வி தந்தீர் செல்வம் தந்தீர்
கடின உழைப்புக்கு வழி சொன்னீர்
வருடங்கள் நான்கு கழிந்தாலும்
ம்றக்குமா உங்கள் முகம்.

G.P.S. வீதி,
கல்வியங்காடு.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# யோகாசன தியானவகுப்புகள்

தென்மராட்சி, ஜூலை 29

யாழ்.சிவானந்த மகரிஷி யோகா நிலையத்தினால் யோகாசன தியான வகுப்புகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு வேதாந்த மட தியானமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்பு ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறவுள்ளதுடன், காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தில் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய இருதினங்களில் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்று வருகின்றன. ஆர்வமுடைய இருபாலாரும் இந்த வகுப்புக்களில் கலந்துகொள்ளலாம். (ம-313)

# போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை தண்டிப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்

இலங்கையில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதிப்படுத்த வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. தங்கபாலு நேற்று கோரிக்கை விடுத்தார்.

பிரதமரை அவரது டெல்லி இல்லத்தில் சந்தித்துப் பேசிய போது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் ஆதாரம் காட்டி தங்கபாலு இந்தக் கோரிக்கையை விடுத்தார் என காங்கிரஸ் கட்சி நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஈழத்தில் தொடர்ந்து முகாம்களில் வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த தமிழர்களின் நிலைமை குறித்து அவர் பிரதமருடன் உரையாடியுள்ளார்.

இந்தியா அளிக்கும் உதவிகள் தமிழர்களைச் சென்றடைகின்றனவா என்பதை கண்காணிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தோடு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினால் தாக்கப்படுவது குறித்து பிரதமரிடம் ஆராயப்பட்டதாக தமிழ்நாடு காங்கிரஸ் அறிக்கை கூறுகிறது. (உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## விக்ரர் குணம் டானியல்



கச்சேரி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நீதிமன்ற வீதி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விக்ரர் குணம் டானியல் நேற்று (28.07.2011) வியாழக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்தி - ஞானம்மா தம்பதியரின் மருமகனும், அற்புதம் (ராசா) அவரின் அன்புக் கணவரும், அன்ரனி டென்சிலின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற டானியல் ஏனஸ் மற்றும் டானியல் ஆதர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மேசியின் மைத்துனரும், சத்தியநேசன், லோறன்ஸ் (மின்சார சபை சுன்னாகம்), சிறில் (சுவிஸ்), மாக்கிறேட் (முன்னை நாள் ஆசிரியர், யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்), றெஜினா ஆகியோரின் மைத்துனரும், றஞ்சிததேவி, லோறன்ஸ் (ஆசிரியை, யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்) மீனா (சுவிஸ்), கருணைநாதன் (நூலக ஊழியர், யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி ), கபில் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
V.அன்ரனி டென்சில் (மகன்)

## திருமதி முத்துலிங்கம் அன்னலட்சுமி (சரஸ்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் அன்னலட்சுமி (சரஸ்) நேற்று (28.07.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும், கந்தரோடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் -சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாதேவன் (தேவா) மற்றும் ஜெகதீஸ்வரி (ஜெகதா) ஆகியோரின் தாயும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/4, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜெகதீஸ்வரி (மகள்)

## திருமதி சிவப்பிரகாசம் கற்பகம்மை



மிருசுவில் வடக்கு, குருக்கள் மாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் கற்பகம்மை (27.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், கணேசன், கனகசபை, ஈஸ்வரதாசன், சோமசுந்தரம், அசலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவலோகநாதன் (லோகன்), யோகேஸ்வரநாதன் (ஈஸ்வரன்), ஞானசொரூபன் (ஞானம்), சரவணபவன்(பவன்), பஞ்சவன் ஆகியோரின் அன்புத் தாயும், லதா, கிருஷாந்தி, நந்தினி, சிந்து ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற துவாரகன், சதுர்ஷன், மற்றும் சாளினி, அனோஷன், அபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பெரியானோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருக்கள் மாவடி,
மிருசுவில்- வடக்கு,
மிருசுவில்.

தகவல்:
சி.யோகேஸ்வரநாதன்.
(மகன் - ரஞ்சித்) (City Medicals)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பர் நல்லதம்பி (சித்தன்கேணி)

கலைவாணி வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் நல்லதம்பி (28.07.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மஞ்சுளமாலா (ஜேர்மனி), சாந்தினிமாலா (கனடா), ரஞ்சிதமாலா (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தந்தையும், தளையசிங்கம் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (கனடா), சாந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற நடேசு மற்றும் சீனி வாசகம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற குணசிங்கம், மற்றும் குணசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் சங்கரப்பிள்ளை (டாக்டர்)

(சின்னாலடி,தங்கோடை காரைநகர்)



காரைநகர் சின்னாலடி தங்கோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற வைத்தியர் ஆறுமுகம் சங்கரப்பிள்ளை நேற்று (28.07.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஆறுமுகம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பார்வதி அம்மாவின் (குஞ்சரி) அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இராமநாதன் (மலேசியா), பொன்னம்பலம் (மலேசியா), இலட்சுமிப்பிள்ளை (மலேசியா) அன்னம்மா ஆகியோரின் சகோதரனும், கந்தசாமி (பட்டயக் கணக்காளர்), காலஞ்சென்றவரான துரைச்சாமி, ஜெயலட்சுமி, செல்வராணி, காலஞ்சென்றவரான பொன்னம்பலம், பராசக்தி, புனிதவதி, நவமலர் ஆகியோரின் பாசமிகு மாமனும், பரந்தாமன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்), ஸ்ரீராமன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னாலடி,
தங்கோடை, காரைநகர்.

தகவல்:
பொ.பரந்தாமன் (பேரன்)

# நகரமுதல்வராக பௌத்த பிக்கு

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக பௌத்த பிக்கு ஒருவர், நகர சபையின் முதல்வராக பதவியேற்கவுள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய நகர சபையின் முதல்வராக ஜாதிக ஹெல உறுமயவின் ஞானப்பிரபா என்ற பௌத்த பிக்கு பதவியேற்கவுள்ளார். அவர், கடந்த சனிக்கிழமை நடை பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஞானப்பிரபா அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றார். ஜாதிக ஹெல உறுமய, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சியாகும். (த)


**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. தொடர்புக்கு: 0771488118

**T.V விற்பனைக்கு**

புதிய SONY LCD 26" T.V (Original) விற்பனைக்குண்டு.
துல்லியமான காட்சிக்ளைப் பார்க்கக்கூடியது.
தொடர்பு - 0779266380

**மாபெரும் கருத்தரங்கு**

Logic A/L 2011 ஆண்டுக்கான
(பழைய, புதிய பாடத்திட்டம்)
பிரபல ஆசிரியர்கள்:-
S.R.J:சுதன், P:கமல்
D.C.M யாழ். நகர் (வேம்படி பாடசாலை அருகாமை)
ஆரம்பம்:- 02.08.2011
கிழமை:- செவ்வாய்க்கிழமை.
நேரம்:- 9.30A.M
குறிப்பு:- மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும். கையேடுகள் வழங்கப்படும்.

இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி, வீட்டுப்பாடம் எதுவுமின்றி மிக இலகுவாக தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேச
3 மாத சனி ஞாயிறு English பயிற்சிநெறி
புதிய பிரிவு ஆரம்பம் : 30.07.2011 சனிக்கிழமை
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6
மூன்று மாதத்துக்குமான மொத்த கட்டணம் : ரூபா 3000/- மட்டும்
அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைகழக, மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள், கலந்துகொள்ளலாம்
மிக சில இடங்களே - அனுமதிக்கு முந்துங்கள்
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
15 -08- 2011
Batch I :09.00 AM - 12.00 PM
Batch II : 02.00 PM - 05.00 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org